# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

670




சென்னைத் திருமயிலைக் கற்பகாம்பாள்

CONNEMARA PUB...
5 - OCT 196...
MADRAS

மலர் 6] சோபகிருது புரட்டாசி-அக்டோபர் 1963 [மணி 1

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்



திருத்துறைப் பூண்டியில் அறநிலைய அமைச்சர் **திரு. M. பக்தவத்சலம், B.A., B.L.** அவர்கள், **திரு. N.S. இராமலிங்கம், M.L.A.,** அவர்கள் தலைமையில், மார்க்கெட் கட்டிடத்திற்குத் திறப்பு விழா நிகழ்த்துதல் (24—8—63)

---

## பொருள் அடக்கம்


1. அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்
2. சிவஞானபோதம்
3. சிவஞான போத உண்மை
4. தொண்டை நாட்டுத் திருப்பதியநுபவம்
5. ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை
6. ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்கள்
7. கண்ணுயிருப்பவன் கண்ணன்
8. பொது நிலை
9. செய்யூர்க் கல்வெட்டுக்கள்—I
10. அர்ச்சகர் இலக்கணம்
11. மாமுகடி
12. திருவைந்தெழுத்து—(2)
13. செய்திகள்


---


ஆண்டுச் சந்தா ரூ. 10/- ★ தனி இதழ் விலை ரூ. ஒன்று.


## சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "**திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34**" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தமாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.


# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 6] சோபகிருது புரட்டாசி-அக்டோபர் 1963 [மணி 1


211,N58
3K3

## "அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்"



ஸ்ரீ விஷ்ணு துர்க்கை, திரிசூலம்.

**முன்னுரை :**

அன்னை வழிபாடு (Mother worship) அல்லது சக்தி வணக்கம் (Sakti cult) என்பது, மிகத் தொன்னெடுங் காலமாக நம் இந்திய தேசத்தில் இனிது நிகழ்ந்து வருகின்றது. மொகஞ்சோ-தரோ (Mohenjo-Daro) என்னும் இடத்தில் நிகழ்த்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிகளிற் கிடைத்த பல பொருள்களில், உலக அன்னையின் மண் சிலைகள் (Terracota figurines of the Mother Goddess) பலவும் உள்ளன. ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி, சிந்து வெளி நாகரிக காலம் ஏறத்தாழக் கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று புலனாதலின் சத்தி வழிபாடு அதற்கும் முன்னரே நிலவி வந்த பழமை யுடையது என்பது தெளிவாம்.

சர் ஜான் மார்ஷல் என்னும் பேரறிஞர், சிந்து வெளிப் பகுதியிற் கிடைத்த அம்பிகையின் சிலைகளைப் போலவே, பாரசீகம் ஏஜியன் எலம் மெசபட்டோமியா டிரான்ஸ் காஸ்பியா துருக்கி சிரியா பாலஸ்தீனம் சைப்ரஸ் கிரீட் பால்கன் எகிப்து முதலிய பல்வேறு பகுதிகளிற்கிடைத்த சிலைகளும் இருப்பதனல், அம்பிகை வழிபாடு மிகப் பழங்காலத்திலேயே பல நாடுகளிலும் பரவியிருந்திருத்தல் வேண்டும் எனக் கட்டுரைக்கின்ருர்.

**நூல்கள் :**

இருக்கு வேதத்தில் சக்தி வழிபாடு பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது, அதன் கண்

'தேவி சூக்தம்' என்றும் ஒரு தனிப் பகுதியுள்ளது. உஷஸ், ராத்ரி, அதிதி, வாக், புரந்தி, திஷணா, ஈளா, வாருணி போன்ற பெண் தெய்வங்களின் பெயர்கள் பல இருக்கு வேதத்தில் வருகின்றன. எனவே, சக்தி வழிபாடு இருக்கு வேதத்திற்குப் புதியதோ புறம்பானதோ அன்றி, அதற்கும் முற்பட்டதென்று உணரலாம்.

கேனோபநிடதம் 'பொன்நிற முடைய உமையம்மை' பற்றிக் கூறுகின்றது. மகாபாரதம் அம்பிகையைக் கண்ணபிரானின் தங்கையாகவும், சிவபிரானின் மனைவியாகவும் வழங்குகிறது. தேவி பாகவதம், தேவி மகாத்மியம், பிரம வைவர்த்த புராணம், ஸ்காந்தமகா புராணம், பிரமாண்ட புராணம் முதலிய பல நூல்கள் சக்தி வழிபாட்டின் சிறப்பினை விரித்துரைக்கின்றன.

ஐதரேய பிராமணம், காத்யாயன சிரௌத சூத்திரம், தைத்திரீய ஆரண்யகம், ரிக்சம்ஹிதை முதலியவற்றிலும் சக்தி வழிபாடு பற்றிய குறிப்புக்கள் அறியப்படுகின்றன.

## பலநாடுகளில் :

சக்தி வழிபாடு நம் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, உலகின் பல பகுதிகளிலும் பரவியிருந்ததெனத் தெரிகின்றது. நாகரிக மேம்பாட்டில் மிகவும் சிறப்பும் பழமையும் மிக்குத் திகழ்ந்திருந்த எகிப்து நாட்டுமக்கள் முழுமுதற் கடவுளை ஓஸைரிஸ் (Osiris) என்னும் தந்தையாகவும், ஐஸிஸ் (Isis) என்னும் தாயாகவும் வழிபட்டு வந்தனர் *.

எகிப்து நாட்டு மக்களைப் போலவே நாகரிகச் சிறப்புடன் திகழ்ந்திருந்த பாபிலோனிய மக்கள், எல்லாம் வல்ல இறைவனை ஏ (Ea) எனத் தந்தையாகவும், தவ்கிநா (Davkina) எனத் தாயாகவும் வைத்துப் போற்றி வணங்கி வந்தனர்.

*" Prof. Wilkins refers to this fact in the history of ancient Egypt. From the description of God Osiris and Goddess Isis, the beloved consort of the said God, corresponding to Siva and Sakti of India, the conception of worship of the feminine principle is inferred. The triangular symbol representing her, bears a similarity with the Sakti Yantra used in India ". —Swami Tattwananda.

சாலடியர் என்னும் பழம் பெரும் நாகரிக மக்கட் டொகுதியினரும், ஊர் (Ur) என்னும் தம்முடைய தலைநகரில் தாம்எழுப்பிய மாபெருங் கோயிலின்கண் ஒளிவடிவாக விளங்கும் கடவுளை ஸமஸ் (Samas) எனப் பெயரிய அப்பன் ஆகவும், இஸ்தர் (Istar) எனப்பெயரிய அன்னையாகவும் அமைத்து வழிபாடுசெய்து போந்தனர்.

சுமேரிய நாட்டு மக்கள் நம்மைப் போலவே, அன்னை அல்லது தேவி வழிபாடு உடையவர்களாக விளங்கி யிருந்தனர். சுமேரிய நாகரிகம் எகிப்திய நாகரிகத்திற்கும் காலத்தால் மிகப் பழமையானது.

இந்தியச் சிந்துவெளி மக்களிடையும் சுமேரிய நாட்டு மக்களிடையும் நிலவி வந்த தேவி வழிபாட்டிற் பலதிற ஒப்புமைப் பண்புகள் * இருந்தமை புலனாகின்றது :—

## ஒப்புமைப் பண்புகள் :

(1) காளைமாடும் சிங்கமும் முறையே சிவபிரானுக்கும் அம்மைக்கும் உரிய ஊர்தியாக நம்மாற் கொள்ளப்படுவது போன்று, சுமேரிய மக்களும் தம்முடைய ஆண் தெய்வத்திற்குக் காளை மாட்டையும், பெண் தெய்வத்திற்குச் சிங்கத்தையும் ஊர்தியாகக் கொண்டு வழிபட்டு வந்தனர்.

31K3

(2) சுமேரிய மக்களும் சிந்து வெளி மக்களும் தேவியைப் போர்க்கு உரிய தெய்வமாகவே கருதிப் போற்றினர்.

(3) தேவியை நாம் 'பார்வதி' எனவும் 'மலைமகள்' எனவும் கூறுதற் கேற்ப, சுமேரியர்களும் தமது பெண் தெய்வத்தை மலைநிலப் பகுதிக்கு உரிய தெய்வமாகவே கருதினர். கன்னிமை நிலையிலும், மணந்த நிலையிலும் வைத்து வழிபட்டனர்.

(4) சுமேரிய நாட்டுப் பெண் தெய்வம் ஆகிய நாண (Nana) என்பதே, நாண தேவி எனப்படும் இந்தியப் பெயரில் இடம் பெற்றுள்ளது. குஜராத்தில் இங்க்ளாஜ் (Hinglaj) என்னும் இடத்தில் நாண தேவிக்குப் புகழ் மிக்க கோயில் ஒன்று அமைந்திருப்பதும், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறுதற் குரியது.

* Lalitha Cult : Prof. V. R. Ramachandra Dikshitar, M.A.

உமா என்னும் இந்தியச் சொல்லே பாபிலோனில் உம்மா (Umma) என்றும், ஆர்க்கேடியாவில் உம்மி (Ummi) என்றும், சித்தியாவில் உம்மோ (Ommo) என்றும் சென்று வழங்கியதாக அறிஞர்கள் (Dr. R. C. Hazra) பலர் கருதுகின்றனர்.

## அவன் அவள் அது :

சிலர் கடவுட் பெரும் பொருளை 'அது' என்று சுட்டுகின்றனர். மற்றும் சிலர் 'அவன்' எனக் குறிப்பிடுகின்றனர். 'அது' என்று சுட்டினுல் கடவுள் அஃறிணைப் பொருள் என முடியும். 'அவன்' என்றுலோ, கடவுள் ஆணுக மட்டுமே இருப்பதாகக் கொள்ளப்படும். கடவுள் எல்லாமாயும் அல்லவாயும் நிற்கும் இயல்புடையவர் ஆதலின், அவரை நாம் " அவன் அவள் அது " என மூன்று நிலைகளிலும் குறிப்பிடுதல் பொருந்தும். இறைநிலையை 'அவள்' எனத் தக்கவாறு கொண்டு வழிபடும் முறையே சக்தி வழிபாடு ஆகும். *

## தாயின் சிறப்பு :

கடவுட் பெரும் பொருளைப் பெண்ணுக — பெண் வடிவத்தில் வைத்துப் போற்றுதலையே, நாம் சக்தி வழிபாடு என்கின்றேம். சமுதாய வாழ்விலும், குடும்ப வாழ்விலும் பண்டைக் கால முதலே இந்தியப் பெண்மணிகள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். தாயாகவும், மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும் உலகியல் வாழ்விற் பெண்கள் பல்வேறு நிலைகளிற் சிறப்புற்றுத் திகழ்ந்து வருகின்றனர். ஒரு பெண்ணின் சிறப்பும் கடமையும் பொறுப்பும் குடும்ப வாழ்விலும் சமுதாய வாழ்விலும் படிப்படியேவளர்ந்தோங்குகின்றன. பெண்மை நலங்கள் அனைத்தும் தாய்மை நிலையிலேயே சிறந்தோங்கி ஒளிவீசித் திகழ்கின்றன. அன்பும் அருளும் பரிவும் இரக்கமும் தூய்மையும் மென்மையும் தியாகமும் ஆகிய சிறந்த தெய்வீகப் பண்புகள் அனைத்தும், தாயிடமே ஒருங்கே அமைந்து நிலவுகின்றன. தாய்மையின் சிறப்பனைத்தும் தகவுணர்ந்தே, நம் முன்னைச் சான்றேர்கள் கடவுளைத்தாயாக வழிபட்டு வரலாயினர். பெண்ணினத்தின் எண்ணரிய பெருஞ் சிறப்புக்களை யெல்லாம் இனிதுணர்ந்து போற்றிய சமுதாய வாழ்வின் விளைவே, சக்தி வழிபாடு எனலாம்.

* அன்னை மரியாள் சிறப்பைப் புகழ்ந்து கொண்டாடுவதின் மூலம் கிறித்தவ சமயமும், தாராதேவியின் புகழைப் போற்றுவதன் மூலம் பௌத்த சமயமும் கூட, ஒரு வகையில் தாய்மைத் தெய்வத்தின் தன் நிகரற்ற மாட்சிமையினை உடன்பட்டுத் தழுவிக் கொண்டுள்ளன.

## சக்தியும் சிவமும் :

உலகங்களை யெல்லாம் படைத்துக் காத்து ஒடுக்கி யருளும் ஒப்புயர்வற்ற பரம்பொருளைச் சிவம் என்றும், அதன் ஆற்றலைச் சக்தி என்றும் சான்றேர்கள் வழங்கினர். சிவம் வேறு சக்தி வேறு அன்று. இரண்டும் ஒன்றினென்று பிரிவு இல்லாதவை. சிவம் அமைதி நிலை (Static) உடையது. சக்தி ஆற்றல் நிலை (Dynamic) வாய்ந்தது. இறைவனின் அருளே சக்தி எனப்படுகின்றது. சிவமின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை. சக்தியின் வடிவம் ஞானமே.

" அருளது சத்தி யாகும்
அரன்தனக்கு ; அருளை யின்றித்

---

*" One says, 'address God always as *He*; and if you call Him, '*It*', he says you are addressing a cold abstraction.

Another claims to have reached a higher philosophy by refusing to call Him as '*He*' and by calling Him '*It*'.

Both seem to think that there is something degrading in calling Him as '*She*'. But the feeling which induces the European to lift the female to almost divine honors, and the tenderest and most passionate of all our emotions which cling round the word '*Mother*' ought to enable one to realize our ideal of God as the Divine Sakti. **Mrs. Flora Annie Steel** speaks of **Uma-Haimavati** as the emblem of perfect wife-hood, mother-hood and mystical virginity

—J. M. Nallaswamy Pillai, B.A., B.L., Studies in Saiva Siddhantha, p. 231

* " The worship of the feminine principle finds acceptance in some form or other in Christianity too. It stirs the profoundest depth of man. The conception of '*the Blessed* Mary, the pre-elect of *God's Virgin*' symbolising 'profound simplicity and supreme patience (Rossetti)' is peerless in its own way... "

தெருள்சிவம் இல்லை ; அந்தச்
சிவமின்றிச் சத்தி யில்லை ”
“ சத்திதன் வடிவே தென்னில்
தடையிலா ஞானம் ஆகும் ”

உலகப் பொருள்கள் அனைத்தும் சக்தி சிவமே யாகும். “சத்தியும் சிவமும் ஆய தன்மை இவ்வுலகம் எல்லாம்” என்பர் அருள் நந்தி சிவம். 'பொன்னும் அதன் நிறமும், சூரியனும் அதன் ஒளியும், மரமும் அதன் வயிர மும் போல, சக்தி சிவத்தின்பால் தாதான்மிய மாய் இயைந்து நிற்கும். சக்தியின் இயக்கத் தினலேயே இவ்வுலகங்க ளெல்லாம் தொழிற் படுகின்றன. அதனாலேயே “அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம்” எனச் சிவஞான சித்தியார் தெருட்டுகின்றது.

சிவம் சக்தியோடு கூடிய வழியே எல்லாத் தொழில்களையும் செய்ய வல்ல தாகின்றது. சக்தியோடு கூடாதபோது, சிவம் எதனையும் செய்வதில்லை. 'உனக்கு இதனைச் செய்யச் சக்தி யில்லாவிட்டால் சிவனே என்று சும்மா கிட' என்பது உலக வழக்கு.

“ சிவமெனும் பொருளும் ஆதி சத்தியொடு
சேரினெத் தொழிலும் வல்லதாம்
இவள்பிரிந் திடின் இயங்கு தற்கும்
அரிதரிது எனுமறை இரைக்குமால் ”

## வங்காளத்திற் காளி :

இவ்வுண்மையினையே வங்காளப் பகுதியில் வழிபடப் பெறும் காளியின் திருவுருவச் சிலைகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. தமிழ் நாட்டில் நடராஜப் பெருமானின் திரு வுருவம் முயலகனை மிதித்துக் கொண்டு நிற்பது போலத் திகழ்தலை நாம் அறிவோம். ஆனால் வங்காளப் பகுதியில் சிவபிரானை மிதித்துக் கொண்டு காளி நிற்பது போலத் திருவுரு வங்கள் காணப்படும். நமக்கு அஃது ஒரு சிறிது பொருந்தாதது போலத் தோன்றினும், அதுவும் ஒரு நுட்பத்தினை யுணர்த்துவதாக உள்ளது.

சிவபரம் பொருள் தனக்கென ஒரு செயலும் இன்றி அசைவற்று இயல்பாகத் தன் நிலையில் திகழ்வது என்பதும்; அதனைப் பற்றுக் கோடும் அடிப் படையுமாகக் கொண்டே அதன் ஆற்றலாகிய சக்தி இயக்கம் பெற்று ஐந்தொழில்களை நிகழ்த்துகின்றது என்பதுமே அந்நுண் பொருட் கருத்தாகும்.

கிரியாசத்தி—படைத்தல்
ஞானசத்தி—காத்தல்
இச்சாசத்தி—ஒடுக்கல்
ஆதிசத்தி—மறைத்தல்
பராசத்தி—அருளல்

இறைவன் தான் இயங்காமல் இருந்தே, தன் சக்தியை இயங்குவித்து இவ்வுலகில் ஐந் தொழில்களை நிகழ்த்தி யருள்கின்றான் என்னும் இவ்வுண்மையினை,

நம்கையினுல் நாம் அனைத்தும்
செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கை யினுற் செய்தளிக்கும்
நாயகன் ... ...

எனவரும் திருக்களிற்றுப்படியார் செய்யுள் இனிது உணர்த்தி நிற்கின்றது.

## தாயின் தண்ணளி :

சக்தியை உலகுயிர்களுக்குத் தாயாகச் சமய நூல்கள் போற்றுகின்றன. தாய் தன் குழந்தைகள் செய்யும் தவறுகளை யெல்லாம் மன்னித்து, அன்பு செலுத்திப் பரிவு காட்டி நலஞ் செய்கின்றாள். அவ்வாறே தேவியும், உலகுயிர்கள் இயற்றும் பிழைகளை யெல்லாம் பொறுத்து அருள் புரிகின்றாள்.

தந்தை தன் பிள்ளைகள்பாற் சினங்கொள்ள நேர்ந்தவழி, தாய் பிள்ளைகளின் சார்பிற் பரிந் துரையாடித் தந்தையின் சினத்தைப் போக்கி நன்மை புரிகின்றாள்.

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுன் அருகிருந்து
நீமுத்தம் தாஎன் றவர்கொஞ்சும்
வேளையில் நித்தநித்தம்
வேய்முத்த ரோடென் குறைகள்
எல்லாம் மெல்மெல்லச் சொன்னால்

## வாய்முத்தம் சிந்தி விடுமோ நெல்வேலி வடிவம்மையே

எனக் கவிஞர் ஒருவர் கவினுறப் பாடுவது போல, இறைவனாகிய தந்தை உலகுயிர்கள் ஆகிய மக்கள் செய்யும் தீவினைகளுக்காகச் சினங்கொண்டு ஒறுத்தொழிக்காதபடி, தாயாகிய அம்பிகையே தன் பெருங் கருணையாற் பரிந்துரை கூறித் தடுத்துக் காப்பாற்றி யருள்கின்றாள்.

உலகுயிர்களின் உய்தி கருதி இறைவனின் திருவருள் செயற்படும் இவ்வியல்பினைத் தாயின் தண்ணளியோடு ஒப்பிட்டு, ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமது செந்தமிழ்த் தெய்விகப் பாடல்களிற் சிறந்தெடுத்துப் பாடிப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

**டாக்டர். சுநீதிகுமார சாட்டர்ஜி*** என்னும் பேரறிஞர், சிவபிரானுக்கு உமை யம்மையையும், திருமாலுக்குத் திருமகளையும் சக்தியாக வைத்துத் தாய்மைத் தெய்வத்தைப் போற்றும் வழிபாட்டு முறை, முதன் முதலில் தென்னிந்தியாவிலேயே தோன்றிய தென்று குறிப்பிடுதல், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறுதற்குரியது.

### லக்ஷ்மி நாராயணர் :

சத்தி சிவத்தோடு கூடியிருக்கும் நிலையை **உமாமகேசுவர மூர்த்தம்** என்பர். இவ்வாறே திருமாலின் சத்தியாகிய மகாலக்ஷ்மி, திருமாலோடு கூடி யிருக்கும் நிலை **லக்ஷ்மி நாராயண மூர்த்தம்** எனப்படும். இதன் சிறப்பினைப் பின் வருமாறு பேரறிஞர் ஒருவர் விளக்குகின்றார் :

'லக்ஷ்மி நாராயண மூர்த்தம் இந்நாளைய அரசியற் பொருளியற் சூழ்நிலைகளில் மிகவும் ஆழ்ந்த கருத்தை அடக்கிக் கொண்டிருக்கின்றது. **நாராயணர்**, விடுதலை சுதந்திரம் சட்டம் ஒழுங்குமுறை என்பனவற்றின் தலைவராகத் திகழ்கின்றார். **லக்ஷ்மி**, செழிப்பு பாதுகாப்பு என்பவற்றின் தேவதை. எனவே, லக்ஷ்மி நாராயண மூர்த்தம் சுதந்திரம் பாதுகாப்பு ஆகியவற்றின் இணைப்பை, ஒரு பெரும் பருவடிவமாக விளக்குகின்ற தெனலாம். இன்றைய உலகமானது சுதந்திரத்தை விரும்புபவர்கள், பாதுகாப்பைப் போற்றுபவர்கள் ஆகிய இருதிறத்தினரிடையே பிளவு பட்டுக் கிடக்கின்றது. அரசியற் சுதந்திரமும் பொருளாதாரப் பாதுகாப்பும் ஆகிய இரண்டும் இணைதல் இன்றியமையாதது. இவ்வகையில் நிலையானதும், வளம் நிறைந்ததுமான உலகத்தின் அதிதேவதையே லக்ஷ்மி நாராயணர் என்பதை நாம் உணர்தல் வேண்டும்'.

### பலபகுதிகளிற் பல பெயர்கள் :

சக்தி வழிபாடு நாட்டிற் பரவியிருக்கும் பான்மையை, நாம் நமது கிராமப் புறங்களிற் பெரிதும் காணலாம். ஒவ்வொரு கிராமத்திலும் வெவ்வேறு பெயர்களிற் சக்தி வழிபாடு நடைபெறுகின்றது:—

திருவொற்றியூர் வட்டப்பாறை யம்மன்
மாமல்லபுரத்துக் கருக்கினில் அமர்ந்தாள்
பெரிய பாளையத் தம்மன்
படை வீட்டம்மன்
தில்லை மாகாளி
தஞ்சாவூர் மாரியம்மன்
சமயபுரம் மகாமாயி அம்மன்
கோயமுத்தூர்க் கோனியம்மன்
பாரியூர்க் கொண்டத்துக்காளி
நாட்டரசன் கோட்டைக் கண்ணுத்தாள்
காரைக்குடிக் கொப்புடையம்மன்
திருநெல்வேலி உச்சினிமாகாளி
திருவாரூர் இரேணுகையம்மன்

---

* "It was among the South Indians that the great gods of post-vedic Hinduism, with both their cosmic and personal signifigance and appeal, like **Siva and Uma, Vishnu and Sri**, had their origin".
— **Dr. Suniti Kumar Chatterji**, M.A., D.Litt., **Interrelations of Cultures, p. 170.**

* "The conception of **Lakshmi-Narayana** is particularly significant in present day politics and economics. **Narayana** is the Lord of salvation, of freedom and maintainer of law and order. **Lakshmi** is the goddess of prosperity, and of security.

**Lakshmi-Narayana** concretizes the synthesis of freedom and security. The world today is split between the protagonists of freedom and security.

The truth is the synthesis of political freedom and economic security. There is need to realize **Lakshmi-Narayana** as the presiding deity of a stable and prosperous world."
—**Sir. S. V. Ramamurthy, Science and Spirit, p. 106.**

என்று எத்தனையோ பல தேவதைகள், தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே வழி படப் பெறுகின்றன.

நம் தமிழ் நாட்டுக் கிராமங்களில் மட்டுமே யன்றி, இந்தியா முழுவதிலுமே வெவ்வேறு பெயர்களில் தேவி வழிபாடு சிறப்புற நிகழ்ந்து வருகின்றது :—

காஷ்மீரத்தில் அம்பாள்
இராஜபுதனத்தில் பவானி
கூர்ச்சரத்தில் கல்யாணி
வங்காளத்தில் காளி
அசாமில் காமரூபி
மைசூரில் சாமுண்டி
மலையாளத்தில் பகவதி

## சக்தி பீடங்கள் :

இவைகளேயன்றி இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சக்தி பீடங்கள் பல அமைந் துள்ளன. சக்தி பீடங்கள் மொத்தம் 64 என்பர்.

சேடு தாங்கும்மு வுலகினிற்
சிறந்தன சத்தி
பீடம் மூவிரு பத்து நான்கு ;
அவற்றின்முற் பீடம்
மாடம் ஓங்கிய மதுரையாம் ;
மற்றது போகம்
வீடும் வேண்டிய சித்தியும்
விளைவிப்ப தாகும்

என்பது திருவிளையாடற்புராணம். தந்திரசூடா மணி, குப்ஜிகாதந்திரம், ஞானார்ணவதந்திரம், தந்திரசாரம், மத்ஸ்யபுராணம், ஸ்காந்த புராணம், பத்மபுராணம், தேவிபாகவதம் முதலி யனவற்றில் இப்பீடங்களைப் பற்றிய எண் ணிக்கையும் பெயரும் வேறு பிற வகைகளிலும் கூறப்படுகின்றன.

1. கொல்லாபுரம்—லக்ஷ்மி
2. மாதுபுரம்—ரேணுகை
3. துளஜாபுரம்—பவானி
4. கரவீரம்—மகிஷாசுரமர்த்தனி
5. இங்குளை—ஜ்வாலாமுகி
6. சாகம்பரி—பிரமரி
7. ஸ்ரீ ரக்த தந்திகை—துர்க்கை
8. விந்தியாசலம்—விந்தியாவாசினி
9. காஞ்சி—அன்னபூர்ணி
10. மானச சரோவரம்—தாட்சாயணி
11. ஸ்ரீ சந்திரலை—கௌசிகி
12. நீலபர்வதம்—நீலாம்பிகை
13. ஸ்ரீ நகர்—சாம்புநதேசுவரி
14. நேபாளம்—இரகசியகாளி
15. மதுரை—மீனாட்சி
16. வேதாரணியம்—சுந்தரி
17. ஜலந்தரம்—திரிபுரமாலினி
18. மகாசலம்—யோகேசுவரி
19. அயோத்தி—அன்னபூரணி
20. வைத்திய நாதம்—வகலை
21. மணித்தீபம்—புவனேசுவரி
22. ஸ்ரீசைலம்—சர்வேசுவரி
23. புஷ்கரம்—காயத்திரி
24. அமரேசம்—சண்டிகை
25. பிர பாசம்—சந்திரபாகை
26. நைமிசம்—தேவி
27. பிருந்தாவனம்—குமாரி
28. திரிபுரா—திரிபுரசுந்தரி
29. சர்வசைலம்—விசுவமாதா
30. நந்திபுரம்—நந்தினி
31. நாகுலம்—நகுலேசுவரி
32. அரிச்சந்திரம்—சந்திரிகை
33. ஸ்ரீ கிரி—சாரதை
34. பஞ்சநதம்—திரிசூலி
35, கடகம்—கடகேசுவரி
36, மகாகாளம்—சங்கரி
37. மத்தியமாபீதம்—சர்வாணி
38. கேதாரம்—மார்க்கதாயினி
39. பைரவம்—பைரவி
40. கயை—மங்களை
41. குருக்ஷேத்திரம்—ஸ்தாணுப்பிரியை
42. விராடம்—அம்பிகை
43. காளிகட்டம்—ஜயதுர்க்கை
44. விமலேசுரம்—விசுவேசை
45. பிரயாகை—லலிதா
46. மகேந்திரம்—மகேந்திரி
47. காஷ்மீரம்—மகாதேவி
48. வஸ்த்ராபதம்—பவானி
49. அர்த்தகோடிகை—உருத்திராணி
50. அவிமுத்தம்—விசாலாட்சி
51. மகாலயம்—மகாபாகை
52. கோகர்ணம்—பத்திரகாளி
53. மத்திரகர்ணிகம்—பத்திரை
54. காமரூபம்—காமரூபிணி

55. உஜ்ஜையினி—மகாகாளி
56. கமலாலயம்—கமலை
57. சகமண்டலம்—பிரசண்டை
58. குரண்டலம்—திரிசந்திரிகை
59. மாகோடம்—மகுடேசுவரி
60. மண்டலேசம்—சாண்டகை
61. காலஞ்சரம்—காளி
62. சங்குகர்னம்—தொனிபீடம்
63. தூலகேசுவரம்—தூலபீடம்
64. ஞானிகள் இதயம்—பரமேசுவரிபீடம்

'இங்ஙனம் சக்திபீடங்கள் இந்திய நாடு முழுவதிலும் பல்வேறு பாகங்களிற் பரவி அமைந்திருத்தல்,மிகப்பழங்கால முதலே நிலவி வந்த இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் சான்றுகளுள் ஒன்றாகும்' என டாக்டர் இராதா குமுத முக்கர்ஜி என்னும் சரித்திரப் பேராசிரியர் கூறுவர்.

## சத்தனும் சத்தியும் :

சிவபரம்பொருள் ஒன்றே சத்தனும் சத்தியு மாக இருதிறப்பட்டு நின்று பல்வேறு தொழில்களை நிகழ்த்தியருளும் பான்மையினை,

'சத்தியாய் விந்து சத்தியாய்
மனோன்மனி தான் ஆகி
ஒத்துறும் மகேசை யாகி
உமைதிரு வாணி ஆகி
வைத்துறும் சிவாதிக் கிங்ஙன்
வரும் சத்தி ஒருத்தி யாகும்
எத்திறம் நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள்'

என அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள், சிவஞான சித்தியார் செய்யுளில் விளக்கி இருத்தல் கொண்டு தெளியலாம். துர்க்கை காளி விசைய வைஷ்ணவி குமுதை சண்டிகை கிருஷ்ணை மாதவி கன்னிகை மாயை நாராயணி ஈசானி சாரதை அம்பிகை பிராமி மகேசுவரி குமாரி வராகி மகேந்திரி சாமுண்டி எனச் சத்தியின் கூறுகளாக எத்துணையோ பலப் பல மற்றும் கூறப்படுவனவும் உண்டு.

—Dr. Radha Kumud Mookerji, M.A., D.Litt., The Fundamental Unity of India, p. 44.

சக்தியையும் சிவத்தையும் உலகியல் முறையில் வைத்து உருவக முறையில், மனைவியும் கணவனும் போல நூல்கள் கூறும் நுட்பத்தினை யுணரமாட்டாமல், 'கடவுளுக்கும் மனைவி யுண்டா ?' எனச் சிலர் நிகழ்த்தும் வினாக் களுக்கு விடை கூறும் முறையில்,

"சிவம் சத்தி தன்னை ஈன்றும்
சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங்
குலகுயி ரெல்லாம் ஈன்றும்
பவன்பிரம சாரி யாகும்
பால் மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் தெரியும் அன்றே"

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள் அமைந்திருத்தல் அறிதற்குரியது. இங்ஙனமே திருமூலர் சக்தி சிவத்திற்குத் 'தாயும் மகளும் நல்தாரமும் ஆகும்' (1154) என்றும்; குமரகுருபரர் 'மனைவி தாய் தங்கை மகள்' (சிதம்பரச் செய்யுட் கோவை, 33) ஆவள் என்றும்; மாணிக்க வாசகர் சக்திக்குச் சிவபிரான் 'கேள்வன் மகன் தகப்பன் தமையன்' (பொற் சுண்ணம் 13) எனக் கூறத் தகுவன் என்றும் சுவைமிகக் குறிப்பிட்டிருக்கும் சிறப்பு, சிந் தித்துத் தெளியற்பாலது.

## சக்தி பேதங்கள்

சக்தி என்பது ஒன்றே யாயினும், அதன் தொழிற் பாட்டால் அதுபலவகையாக் கூறப் படும் "சத்திதான் பலவோ என்னில், தான் ஒன்றே; அநேகமாக வைத்திடும் காரியத்தால்" என்பது சித்தியார். 'சத்தியை வியந்தது' எனக்கொள்ளப் பெறும் திருவெம்பாவைப் பாடல்களிற் பின்வரும் நவ சத்திகள் குறிக்கப் பெற்றன என்று பெரி யோர்கள் கூறுவர் :

| சத்தன் | சக்தி | தொழில் |
|---|---|---|
| 1. சதாசிவர் | மனோன்மணி | பக்குவமுற்ற உயிர்களை மலத்தினின்று நீக்கிச் சிவத்துடன் சேர்தல். |
| 2. பசுபதி | சர்வபூதமனி | உயிர்கள்பா லெல்லாம் உறைந்து நின்று அவற்றின் புண்ணிய பாவங்களை அடக்குதல். |
| 3. மகாதேவர் | பலப்பிரமதனி | சூரியன்பால் உள்ளதாய்ப்பொருள்களில் பழுதுற்றனவற்றைக் கெடுத்து, நல்லனவற்றிற்குப் பலம் கொடுத்தல். |
| 4. ஈசானர் | பலவிகரணி | சந்திரன்பால் உள்ளதாய்ப் பயிர்பச்சைகளையும் உயிர்களையும் செழித்து வளரச் செய்தல். |
| 5. பீமர் | கலவிகரணி | ஆகாசத்தில் உள்ளதாய் எல்லாப் பொருள்களுக்கும் இடந்தந்து நிற்றல். |
| 6. உக்கிரர் | காளி | வாயுவினுள் இயைந்து பிராணமயமாய் விளங்கி நலம் விளைத்தல். |
| 7. உருத்திரர் | இரௌத்திரி | நெருப்பில்தங்கி வெப்பம் விளைத்தல். |
| 8. பவர் | சேட்டை | நீரில் நிலைபெற்றுக் குளிர்ச்சி தருதல். |
| 9. சர்வர் | வாமை | மண்ணில் விளங்கி ஐம் பூதங்களின் இயல்புகளும் உடைய காகல். |

இந்தியாவிற் காஷ்மீரம் வங்காளம் அசாம் திபெத்து முதலிய பிரதேசங்களில் சக்திவழிபாடு மிகவும் பிரசித்தமாக நிகழ்ந்து வருகின்றது.

## சிலப்பதிகாரம்

தமிழ் நாட்டிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தேவி வழிபாடு சிறப்புற நிகழ்ந்து வந்தது. பாலைத் திணைக்குரிய தெய்வமாகத் துர்க்கை (கொற்றவை) போற்றப் பெற்றாள். சிலப்பதிகாரத்தில் "வேட்டுவவரி" என்னும் பகுதியில் இளங்கோவடிகள் தேவி வழிபாட்டின் இயல்பையும், தேவியின் சிறப்பையும் அழகுறப் பாடியருளியுள்ளார். சக்தி வழிபாடு சிவவழிபாட்டோடு தொடர்புடையதாகலின், சிவபெருமானுக்கு உரிய நெற்றிக்கண் — நீலகண்டம் — மேருமலையாகிய வில்லை வளைத்தல் — சூலம் ஏந்துதல் — யானையின் தோல் போர்த்தல் முதலிய பண்புகளை அம்பிகைக்கும் உரியனவாக வைத்து,

'நுதல்கிழித்து விழித்த இமையா நாட்டம்'
'நஞ்சுண்டு கறுத்த கண்டி'
'அரவுநாண் பூட்டி நெடுமலை வளைந்தோள்'
'வளையுடைக் கையிற் சூலம் ஏந்தி'
'கரியின் உரிவை போர்த்த அணங்கு'

என்றெல்லாம் இளங்கோவடிகள் பாடுகின்றார். மேலும் 'அமரி-குமரி-கவுரி-சமரி-சூலி-நீலி-மாலவற்கு இளங்கிளை (தங்கை)-ஐயை-செய்யவள்—வெய்யவாள் தடக்கைப் பாய்கலைப் பாவை-பைந்தொடிப்பாவை-ஆய்கலைப்பாவை-அருங்கலைப்பாவை - தமர்தொழ வந்த குமரி' என்றும் தேவியின் சிறப்பைச் சிலப்பதிகாரம் போற்றுகின்றது.

கணவனை இழந்த கண்ணகி, அரண்மனை வாயிலை யடைந்து வழக்குரைக்க வந்திருக்கும் தன்மையினை, பாண்டிய மன்னனுக்கு வாயில் காவலன் அறிவிக்கும் முறையில்,

அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்!
அறுவர்க்கு இளைய நங்கை! இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு! சூருடைக்
கானகம் உகந்த காளி! தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்!
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்!

எனவரும் பகுதியில், சக்தியின் வெவ்வேறு திறக் கூறுகள் ஆகிய கொற்றவை, பிடாரி, பத்திரகாளி, காளி, துர்க்கை என்பன குறிப்பிடப் பெறுதல் காணலாம். அம்பிகை மகிஷாசுர மர்த்தனியாக விளங்கும் அழகின் அருமையினைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் பின்வருமாறு சிறப்பித்துப் பாடுகின்றார்.



காஞ்சிபுரம் ஸ்ரீ காமாட்சியம்மை

## மகிஷாசூரமர்த்தனி

ஆனைத்தோலைப் போர்த்துக் கொண்டும், புலியின் தோலை உடையாக அணிந்து கொண்டும், மகிஷாசூரன் ஆகிய எருமையின் தலையினை மிதித்துக் கொண்டு, தேவர்களெல்லாரும் வணங்கும்படி, மறை நூல்களுக் கெல்லாமும் மறை பொருளாகி, அம்மை ஞானக் கொழுந்தாகக் காட்சி தருகின்றாள்.

**ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்**
**கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்!**
**வானோர் வணங்க மறைமேல் மறையாகி**
**ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்!**

வளையல்களை அணிந்த கையில் வாளை ஏந்திக் கொண்டு, வலிமை மிக்க மகிஷாசூரனை அடக்கி வென்று, கலைமானை ஊர்தியாக ஏற்று, மும்மூர்த்திகளும் தங்கள் இதய கமலத்தில் தியானித்து வணங்கி வழிபடும அருட்பெருஞ் சோதி விளக்காக, அம்பிகை விளங்குகின்றாள்.

**வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்**
**கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால் !**
**அரியரன்பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்**
**விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய் !**

திருமாலுக்குரிய சங்கினையும் சக்கரத்தையும் தாமரைமலர் போன்ற திருக்கைகளிலே ஏந்திக் கொண்டு, சிவந்த கண்களையுடைய சிங்கம் ஆகிய ஊர்தியின்மீது, கங்காதரனும் நெற்றிக் கண்ணனும் ஆகிய சிவபெருமானின் இடப்பாகத்தில், அர்த்த நாரீசுவரியாகத் தேவி அருட்காட்சி வழங்கியருள்கின்றாள்.

**சங்கமும் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்**
**செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்!**
**கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து**
**மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்!**

இவ்வாற்றானெல்லாம் தேவி வழிபாடு தமிழகத்தில் மிகப் பழங்காலந் தொட்டே சிறப்புற நிகழ்ந்து வந்தமை தெளியலாம்.

### சாக்த மதம் :

இந்துமதத்தின் ஒரு சிறந்த பகுதி சாக்த மதம். சிவபிரானைப் போற்றும் சைவமும், விஷ்ணுவை வழிபடும் வைணவமும், கணபதியை வணங்கும் காணபத்தியமும், குமரனாகிய முருகனைப் பணியும் கௌமாரமும், சூரியனைத் துதிக்கும் சௌரமும் போலச் சக்தியை வழுத்தும் சாக்தம் என்னும் சமயமும் நம் இந்திய தேசம் முழுவதும் பெரிதும் பரவி யிருந்தது. சாக்த சமயம் அல்லது மதம் இடையிற் சில குறைபாடுகளை யடைந்ததாயினும், அஃது இந்து மதத்தின் ஆற்றல் மிக்க ஒருபெருங் கூறு என்பதில் ஐயமில்லை. ஒன்றினொன்று முரண்பட்டு இகலி நின்ற பிற கூறுகளின் வேற்றுமைகளைப் போக்கி, அவற்றைச் சாக்த மதம் ஒற்றுமைப் படுத்தி வைத்துள்ளது. (Synthesis and reconciliation).

சக்தியைச் சிவபிரானுக்கு மனைவி, திருமாலுக்குத் தங்கை, கணபதி முருகனுக்குத் தாய் என்பதனால் பௌராணிக ஒற்றுமை ஏற்படுகிறது. மேலும் சாக்தேய மதத்தின் அவிகார பரிணமவாதம், தார்க்கிகர்களின் ஆரம்பவாதம், சாங்கியர்களின் பரிணம வாதம், வேதாந்திகளின் விவர்த்த வாதம் ஆகியவற்றை ஒருமைப்பாடு எய்துவிக்கின்றது.

**'சாங்கியம் யோகம்என் றிரண்டு தன்மைய**
**வீங்கிய பொருளெலாம் வேறு காண்பன**
**ஆங்கவை யுணர்ந்தார்க் கன்றி அன்னவன்**
**ஓங்கிய மேல்நிலை யுணரற் பாலதோ?'**

—கம்பர்.

எனப் புகழ்ந்தோதப் பெற்ற சாங்கியம் (கபிலர்) யோகம் (பதஞ்சலி) என்னும் இருபெருங் கொள்கைகளையும் (தர்சனம்) இணைத்துத் தழுவிக் கொண்டுள்ளது சாக்த மதம். கபிலரின் 'நிரீசுவர சாங்கியம்' இதனால் தூய்மையுற்று, இறையுண்மை உடன்படும் 'ஈசுவர சாங்கியம்' ஆக மாறுபாடுற்றது.

### பஞ்ச மகாரங்கள் :

ஒருசிலர் சாக்தமதத்திற் கூறப்படும் பஞ்ச மகாரங்கள் எனப் படுவனவற்றைப் பிறழ உணர்ந்து கொண்டு, மயங்குவதும் உண்டு. அதன் நுண்பொருள் பின்வருமாறு ஆகும்.

1. **மது** :— யோக நெறியில் மதி மண்டலத்தினின்று பெருகும் அமுத கலையைப் பருகி மகிழ்தல்.

2. **மாம்சம் :—** உண்ணு நோன்பால் பசியை வென்று, ஊனின் விளைவாகிய ஐம்புல அவாக்களை அறுத்தல்.
3. **மத்ஸ்யம் :—** இடைகலை நாடி
4. **முத்திரை :—** பிங்கலை நாடி
5. **மைதுனம் :—** ஜீவான்மா பரமான்மாவுடன் ஒன்றுபட்டுக் கலத்தல்.

முடிவுரை :

சர் ஜான் உட்ராப் (Sir John Woodroffe) போன்ற மேலைநாட்டறிஞர்களும் இதுபற்றி ஆராய்ந்து வியந்து புகழ்ந்து நூல்கள் எழுதியுள்ளனர். அகத்தியர், துர்வாசர், காளிதாசர், சங்கராசாரியர், மூககவி, பாஸ்கரராயர், அபிராமி பட்டர், இராமகிருஷ்ணர் முதலிய பெரியோர்கள் பலர் தேவியை வழிபட்டுப் போற்றிப் பெறலரும் பேறுகள் பல பெற்றனர். அவர்களைப் பின்பற்றி நாமும் அன்பு கொண்டு வழிபட்டு வந்தால், நாம் எல்லா நலங்களும் பெற்றுய்யலாம் என்பது திண்ணம்.

**தனம்தரும். கல்வி தரும். ஒரு**
**நாளும் தளர்வறியா**
**மனம்தரும். தெய்வ வடிவும்**
**தரும். நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனந்தரும். நல்லன எல்லாம்**
**தரும். அன்பர் என்பவர்க்கே**
**கனந்தரும். பூங்குழலாள்**
**அபிராமி கடைக்கண்களே.**

ஆதலால், நாம் நம் ' அன்னையருட் பாத மலர்களைச் சென்னியில் வைத்து ' அன்புடன் வழிபட்டு, இம்மை மறுமை நலன்களை யெல்லாம் எய்தி உய்வோமாக !.

ஈசனருள் இச்சைஅறி வியற்றல் இன்பம்
இலயமொடு போகம்அதி கார மாகித்
தேசருவம் அருவுருவம் உருவ மாகித்
தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்
பேசரிய உயிரையெலாம் பெற்று நோக்கிப்
பெரும்போகம் அவையளித்துப் பிறப்பினையும் ஒழித்திட்(டு)
ஆசகலும் அடியருளத் தப்பனுட னிருக்கும்
**அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்.**

—*சிவஞான சித்தியார்.*

★ ★

பரந்தபரா பரையாதி பரன திச்சை
பரஞானம் கிரியைபர போக ரூபம்
தருங்கருணை உருவாகி விசுத்தா சுத்தத்
தனுகரண புவனபோ கங்கள் தாங்க
விரிந்தஉபா தானங்கள் மேவி ஒன்றாய்
விமலமாய் ஐந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்(து)
அரந்தைகெட மணிமன்றுள் ஆடல் காணும்
**அன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம்.**

—*சிவப்பிரகாசம்.*

# சிவஞானபோதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.,L.T., காஞ்சிபுரம்.

( முன் இதழ்த் தொடர்ச்சி )

## எட்டாஞ் சூத்திரம், இரண்டாம் அதிகரணம்.

இங்ஙனமாயின், காரைக்கால் பேயார் முதலியோர்க்கு மெய்யுணர்வு ஞானகுரவனை யின்றியும் தானே உளதாயிற்றன்றோ எனின், கூறுகின்றார் ஆசிரியர் :—உயிர்கள் விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும். மூலமலம் ஒன்றால் மட்டும் பிணிப்புறுவோர் விஞ்ஞானகலர் ; அதனோடு கன்மமலத்தாலும் பிணிப்புறுவோர் பிரளயாகலர்; அவற்றோடு பிரகிருதி மாயையானும் பிணிப்புறுவோர் சகலர். மாணாக்கர்களுடைய உணர்வாற்றலுக்கு ஏற்ப உபகரணங்கள் பலகொண்டும் கொள்ளாமலும் உணர்த்தும் ஆசிரியனைப் போல முதல்வனும் உயிர்களின் மலப்பிணிப்பின் தன்மைக்கு ஏற்பப் படிமுறையான் உணர்த்துவன். நெறியின் அறிவித்தாலன்றி உயிர்கள் அறியமாட்டா. ஆதலால், விஞ்ஞானகலர்க்கு அவர்தம் உணர்வில் நின்றவாறே மலநடையினீக்கி அருள்நடைக்கண் உய்க்கும் திருக்குறிப்பு மாத்திரையாற் பசுத்துவம் நீக்கிச் சிவத்துவம் தருவன். பிரளயாகலருக்குத் தனது மூலமுதல் உருவாகிய விடைமேல்வரும் அம்மையப்பர் உருவை எதிரே காட்டித் திருநோக்கு, பரிசம், திருமொழி என்னும் மூன்றாலும் வீடு பயக்கும் உணர்வைத் தந்தருள்வன். ஏனைச்சகலர்க்குச் சுத்தான் மாக்களைத் தானாக வரித்துக்கொண்டு படர்க்கையினின்று பலவாற்றான் மலப்பிணிப்பு நீக்கித் திருவருணிலையைப் பாலிப்பன்

**அறிவிக்க அன்றி அறியா உளங்கள் ;**
**செறியுமாம் முன்பின் குறைகள் ;—நெறியின்**
**குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் [வீடென்;**
**குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.**

**மெய்ஞ்ஞானந் தானே விளையும் விஞ்ஞான [கலர்க்(கு)**
**அஞ்ஞான அச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ் [ஞானம்**
**பின்உணர்த்தும்; அன்றிப் பிரளயா கலருக்கு**
**முன்உணர்த்தும் தான் குருவாய்முன்.**

இங்ஙனமாயினும், ஆசான்வடிவை முதல்வனது உபசார வடிவெனக் கொள்ளாது உண்மை வடிவெனவே ஏன் கொள்ள வேண்டும் என்னும் வினாவிற்குப் பின் வருமாறு விடை தருகின்றார் ஆசிரியர் :—

குழந்தைகளிடத்துத் தாய்க்கு உள்ளதாகிய அன்பு அருவமாய்ப் புலப்படாது. ஆயினும், அவளுக்குக் கண்ணீரும் முலைப்பாலும் குழந்தையைக் காணாதபோது இல்லையாய், கண்டு அன்பு செய்யும்போது தோன்றுகின்றன. இந்த நியத உடனிகழ்ச்சி பற்றிக் கண்ணீரும் முலைப்பாலும் தாயின் அன்பின் புலப்படு வடிவம் எனச்சான்றோர்களாற் கொள்ளப்படுகின்றன. அது போல, உயிர்க்குயிராய் உண்ணின்று புலப்படாது நின்ற முதல்வன் இருப்பை ஆசானாகிவந்து உணர்த்தியபோது உணர்ந்தும், அவ்வாறு வெளிப்பட்டு உணர்த்தாதபோது உணராதும் வருதலின், ஆசான் மூர்த்தியை அருள் உரு எனக் கொள்ளுதலே மெய்யுணர்ந்தார் அனைவர்க்கும் உடன்பாடாகும்.

யான் என்னும் உணர்வுக்கு முதலாயுள்ள தன்னோக்கு உணர்வே ஆன்மா எனப்படும். நீரின்கண் அதன் நிழல் போலக் கலந்து புலப்படாது உடனிற்கும் உணர்வே சிவசைதன்னியம் எனப்படும் ; அச் சிவசைதன்னியத்தின் உண்மை அஃது ஆசானாக உருவெடுத்து வந்து உணர்த்தினாலன்றி உணரப்படாது. "உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்தறிதி யென்று — வெள்கினேன்" எனவும், "புந்தி வட்டத்திடைப் புக்கு நின்றானையும் பொய்யென்பனோ?" எனவும் எழுந்த அப்பர் அருண்மொழிகள் ஒப்பவைத்து உணர்தற்கு உரியன

**இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்**
**நல்லாய் உளவாமால் நீர்நிழல் போல்—இல்லா**
**அருவாகி நின்றானை ஆர் அறிவார் தானே**
**உருவாகித் தோன்றானேல் உற்று.**

இரண்டாமதிகரணம் முற்றிற்று.

## மூன்றும் அதிகரணம் :—

1. சூத்திரக் கூறு :—"ஐம்புல **வேடரின் அயர்ந்தனை வளர்ந்தென......உணர்த்த**"—'சிவமாந்தன்மை எய்துதற்கு உரிய நீ, உன்னை ஏகதேசப் படுத்தும் ஐம்பொறிகளாகிய வேடரொடு கூடி வளர்ந்தமையால், நின்பெருந் தன்மையை உணரமாட்டாது மறந்தாய்'—என முதல்வன் குருவாய் வந்து உணர்த்துவன்'—என்பது கருத்து.

2. வார்த்திகம் :-"இனி இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணரா என்றது, அவைதாம் பளிங்கிலிட்ட வன்னம் போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்."

உண்மைச் சரியை கிரியா யோகங்களைச் செய்து இருவினையொப்பு வரப்பெற்ற பக்குவான்மாக்களுக்கு மெய்யுணர்வு அளித்தற்கு உயிர்க்குயிராய் நின்றுணர்த்திவரும் சிவபிரானே குருமூர்த்தியாய் எழுந்தருளுவன் என்பது முன்னை அதிகரணங்களால் உணர்த்தப்பட்டது, அங்ஙனம் எழுந்தருளும் முதல்வனால் உணர்தற்பாலது யாது என்பது இங்கு விளக்கப் படுகின்றது.

ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாய் விளங்குவது. பல நிறப்பொருள்களைச் சாரவைக்கப் பட்ட பளிங்கு அப்பொருளின் நிறத்தையே தன்னுடைய நிறமாகக்காட்டும்; தன் உண்மை நிலை அறியும்படி நில்லாது. அதுபோல, ஐம்பொறிமுதலிய தத்துவங்களைச்சார்ந்து புறப்பொருள்களை அறிந்து வரும் ஆன்மாத் தன்னியல்பு உணரப்படாது, அத்தத்துவங்களின் தன்மையே தன்தன்மையாகக் காட்டி நிற்கும். நாம் யார் என்று அறியலுறின், அவ்வாறு அறியலுறும் அறிவே நாம் எனக் கொள்ள வேண்டும். அவ்வறிவு, நமக்கு வேறாய ஒரு பொருளைக்குறித்து, இஃது இன்னது என அறியும் பொழுது தான் நமக்கு விளங்குகிறது; அல்லாத பொழுது விளங்குவதில்லை.

ஆதலால், **நம் அறிவை**, அதனால் அறியப் படும் பொருள்வடிவில் தான் நாம் அறிய முடிகிறது; மேலும் அங்ஙனம் அறியும் நம்மை, அவ்வறிவு நிகழ்தற்குக் கருவியாக உடனிகழும் தத்துவ வடிவமாகத்தான் காண்கின்றோம். இதனால், ஐம்பொறி முதலிய கருவிகள் உள்ள வரை நம்மை நமக்கு உபாதி அல்லது அடையாகவுள்ள கருவிகளாக மயங்கியறிதல் கூடுமே தவிர, நமது உண்மையியல்பை அறிதல் கூடாது. ஆகவே, அருளாசான் நம்மைக் கருவிகளின் வேறு எனப் பிரித்துக் காணுமாறு அருள்புரிவன் என்பது வார்த்திகத்தின் திரண்ட பொருள்.

3. ஒப்புமைப் பகுதி :—

**புள்ளுவர் ஐவர்கள்வர் புனத்திடைப்**
**புகுந்து நின்று**
**துள்ளுவர் சூறைகொள்வர், தூநெறி**
**விளைய வொட்டார்;**
**முள்ளுடை யவர்கள் தம்மை**
**முக்கணான் பாதநீழல்**
**உள்ளிடை மறைந்து நின்றங்(கு)**
**உணர்விறல் எய்யலாமே.**

—திருநாவுக்கரசர்.

4. (அ) இங்குத் தன்னாற் கூறப்படும் பொருள் :—

உயிர் ஐம்பொறி முதலியவற்றோடு கூடி நிற்றலின் தன் உண்மையியல்பை அறியமாட்டாதாயிற்று; அத் தன்னியல்பை அருளாசான் விளங்கவைப்பன்.

(ஆ) ஐயப்பாடு :—ஐம் பொறிகளால் உலகப் பொருள்களை அறிந்து வருகின்றேம் ஆதலின், அவை ஆன்மாவின் உண்மையியல்பை மறைக்கும் என்றல் பொருந்துமோ பொருந்தாதோ எனத் துணிவு பிறவாது நிற்றல்.

(இ) பிறர் கூறும் பக்கம் : 'மாயாதனு விளக்கா மற்றுள்ளம் காணாதேல் ஆயாதாம் ஒன்றை (யும்)' என மேலே நான்காஞ் சூத்திரத்துக் கூறப்பட்டது. அதற்கு மாறாக இங்கே

மாயாகாரிய உடம்பும் கருவியும் உயிரை மறைக்கும் என்றல் முன்பின் முரணும். ஆகலின், ஐம்பொறி முதலியவை பிறப்பு நிலையில் உலகப் பொருளைக் காணுதற்கு வாயி லாதல் போல, அவைதாமே வீட்டுநிலையில் தூய கருவிகளாய் நின்று ஆன்மாவையும் பர மான்மாவையும் காட்டும் என்றலே வலி யுடைத்து; இங்ஙனமன்றித் தன்னியல்பு உணர்த்துதற்கு ஆசான் வருவன் என்றல் மிகையாம். அன்றியும், கருவிகள் நீங்கிய போது ஆன்மா மூலமலமறைப்பாகிய கேவ லத்தைத் தலைப்படும் எனவும் மேலே கூறப் பட்டமையின், கருவிகளின் நீங்கியவழி ஆசான் உணர்த்தினும் ஒன்றும் உணரப்படுவதின்றாம். இங்ஙனம் கூறுவோர் சிவசங்கிராந்த வாதிகள் எனப்படுவர்.

**(ஈ மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:**

மாயாதானு விளக்குப் போல நின்று காட்டும் என்றது உலகப் பொருளாகிய விடயத் தையேயன்றி ஆன்மாவின் உண்மையியல்பை அன்று. அங்ஙனம் விடயத்தைக் காட்டும் போது, ஒவ்வோர் இந்திரியம் ஒவ்வொரு விடயத்தைத்தான் உணர்த்தும்; ஓர் இந்திரியங் கொண்டு அறியப்படும் பொருள் பிறிதோர் இந் திரியத்தால் அறியவாராது. இதனால், ஆன் மாவின் தன்னேக்கு உணர்வை (Self consciousness) மாற்றி உலகப் பொருளையே நோக் கச்செய்யும் தத்துவங்கள் (the media which induce objective propensity on the part of the individual self) ஆன்மாவைக் காட்ட மாட்டா என்பது இனிது விளங்கும்.

இனி, கருவிகள் செயற்படும்போது உலகப் பொருள் விளங்கும்; ஆன்மாவின் தன்னியல்பு விளங்காது. அவை செயற் படாது தன்னின் நீங்கும்போது கேவலம் ஆம்; அஃதாவது, மூல மலத்தான் ஆய மறைப்பு மேம்படும். இவ் விரண்டு மின்றி, கருவிகள் தத்தம் தொழிற் பாட்டில் நிற்கும் போதே, அவற்றினியல்பைக் குருவால் உணர்ந்து ஆன்மா அவற்றினின்று நீங்குமாயின், அது சுத்தநிலை எனப்படும் மெய் யுணர்வு நிலையைத் தலைப்படும்.

தன்னைச் சார்ந்த பன்னிறப் பொருளின் தன்மையையே தன்மாட்டுக் காட்டும் இயல் புடையது பளிங்கு; அதுபோல, ஆன்மாத் தன்னைச் சார்ந்த தத்துவங்களின் இயல்பையே தான் விளக்கும். இத்தன்மை ஆன்மாவின் பொதுத்தன்மை (தடத்த வியல்பு) எனப்படும். சற்குரவன் உபதேசத்தால் இப்பொது வியல்பை விழிப்பு நிலையிலே முன்னர்ச் சிந்தித்து உணர்ந்து, பின்னர் அப்பொது வியல்பு நீங்கு தற்கு அத்தத்துவங்கள் தனக்கு வேறு ஆதலை ஒருவன் கண்டால், ஆண்டு விளங்குவது ஆன் மாவின் உண்மையியல்பே ஆகும்; அவ் விடத்துத் தத்துவங்கள் தாமே நீங்காமல், சாத கனது 'இது நான் அல்லேன் — நேதி' எனச் செய்யும் ஞானச்செய்தியால் நீங்கும். இங்ஙனம் ஆன்மா குரவன் அருளால் தத்துவமாகிய பாசக் கூட்டத்தின் நீங்கியபோது, அதுபரம் பொருளைப் பற்றுக்கோடாகச் சார்ந்து அடிமை யாய், அப்பரம் பொருளின் இயல்பு தன்மாட்டு விளங்கப் பெறும். "சேர்வார் தாமே தானாகச் செய்யுமவன்" எனத் திருஞான சம்பந்தரும், "தன்னைக்கண்ட—என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசனுக்கே" எனச் சேர மான் பெருமாள் நாயனாரும், "அகளமாய் யாரும் அறிவரிதப் பொருள்—சகளமாய் வந்த தென்றுந் தீபற—தானாகத் தந்ததென்றுந் தீபற" எனத்திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரும் அருளிச் செய்தவை, இங்குக் கூறியவாறு தலைப் படற்பாலதாய சுத்தநிலை பற்றியவை என உணர்தல் நன்று.

இங்குக் கூறிய கருத்துக்களைத் தரும் உதாரண வெண்பா :

**பன்னிறங் காட்டும் படிகம்போல் இந்திரியம்**
**தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—**
**பன்னிறத்துப்**
**பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய் பொய்யா [மெய்கண்டான்**
**மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு**

பொய்யா பொய்யா :—தனது பொதுவியல்பு நிலைபெறுமாறு கழியும்படி; மெய்கண்டான்—தனது உண்மையியல்பை உணர்தோன்; வேறு தைவம் ஆம்—தத்துவங்களின் வேறு ஆகித் தேவனது அடிமையாம்.

(மூன்றும் அதிகரணம் முற்றிற்று.)

# சிவஞான போத உண்மை

பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார்,
தேவகோட்டை.

உலகத்திலே நிலவுகின்ற சமயங்கள் பல அவற்றின் பொருள் இயல்புகளைக் கூறும் நூல்களும் பல. கடவுள், உயிர், தளை என்னும் முப்பொருள்கள் பற்றி முடிந்த முடிபுகளைத் தெளிய அறிவுறுத்தி மெய் யுணர்வைத் தரவல்லது சித்தாந்த சைவ சமயமே ஆகும்.

முன்னை நல்வினைப் பயனால் மெய்ச் சமயமாகிய சைவசமய வாழ்வில் நிற்கும் பேறு உண்டாகும். இடையிடையே வேற்றுச் சமயச் சார்பினால் உண்மை யறியாது, மக்கள் மயங்கி நின்ற வேளை களில் ஆண்டவன் அருளாசிரியர்களை உலகிற்கு அனுப்பி அவர்களைக் கொண்டு பண்டைப் பெருமையும், விளக்கமும் உண்டாகும்படி செய்ததை வரலாற்று நூல்கள் நமக்கு அறிவிக்கின்றன.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் புத்த சமயச் சார்பினால் மக்களுக்குக் கடவுள் உணர்ச்சி மங்கி யிருந்த காலத்து, இறைவனருளால் **மணிவாசகப் பெருந்தகையார்** தோன்றிச் சமயத்தை நிலைநாட்டினார். அதனை யடுத்துச் சமண சமயச் சார்பினால் மக்கள் குறையுடையவர்கள் ஆனபோது **ஞான சம்பந்தப் பெருமானும் அப்பரடிகளும்,** ஆண்டவன் அருளால் வந்து உதவி புரிந் தார்கள், அவர்களுக்குப்பின் **சுந்தரமூர்த்தி சுவாமிகள்** தோன்றி அருளி இறை வனது பெருங்கருணைத் திறத்தையும், அடியார்களது பெருந்தகைமையையும் விளக்கியருளினார். இந்நான்கு பெரு மக்களும் சமய குரவர்கள் என்று பாராட்டப் பெறுகிறார்கள்.

இவர்களால் அருளிச்செய்யப் பெற்ற தேவார திருவாசகங்களும், இவர்களுக்கு முன்னும் பின்னும் இருந்த சிவானுபூதிச் செல்வர்களால் அருளிச் செய்யப்பெற்ற திருப்பாடல்களும் பன்னிரண்டு திரு முறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

திருமுறை ஆசிரியர்கள் காலத் திற்குப் பிறகு வேத வியாசர் இயற்றிய **பிரமசூத்திரம்** நீலகண்ட சிவாச்சாரியர், சங்கர, இராமானுஜர், மாத்வர் ஆகி யோரது வடமொழிப் பாடியங்களுடன் தமிழ் நாட்டில் நிலவத் தொடங்கியது. அவ்வுரைகளால் சமயக் கொள்கைகளைப் பற்றிப் பெருங் குழப்பம் விளைவதாயிற்று. உண்மை அனுபவமே கடவுள் நெறியில் மெய்யுணர்வு பெறுதற்குச் சாதனம் என் பதை மக்கள் மறந்தார்கள். பொதுவாக நூலறிவும் சிறப்பாகத் தருக்கவாதமும் கொண்டு, சமயம் சாதிப்பவர்களே மத ஆசாரியர்களாகப் போற்றப்பட்டார்கள்.

பந்தம், வீடு ஆகிய இரு நிலை களிலும் ஆண்டவன் உயிர்களோடு கலந்து உடனாய் நின்று உபகரிக்கும்

நிலையைத் தெரிவிக்க உபநிடதங்களில் எழுந்த **அத்துவிதம்** என்ற சொல்லின் இயல்பும் பொருளின் இயல்பும் அறியாது மக்கள் மயங்கினர்கள். அந்த மயக்கம் தீர்தற் பொருட்டும், வேதாகம சாரமாகிய திருமுறையின் பெருமை நிலவுதற் பொருட்டும், இறைவனருளால் மெய் கண்ட சந்தானம் இத்தமிழ் நாட்டில் தோன்றியது.

ஞானசூரியனுகிய மெய்கண்ட தேவர் நமது தவத்தின் பயனுக வந்து அவதரித்தார். திருக்கயிலாய மலையில் தென்முகக் கடவுள் உபதேசிக்கத் **திரு நந்தி தேவர்** சிவாகமங்களின் ஞானபாதப் பொருளுண்மையை உணர்ந்தார். அவர் பால் சனற்குமார முனிவரும் அவரிடம் சத்திய ஞானதெரிசினிகளும் அவர் மாட்டுப் பரஞ்சோதி முனிவரும் உப தேசம் பெற்றூர்கள். இந்நால்வரும் அகச் சந்தான குரவர் என்று அழைக்கப் பெறுவர்.

அகச்சந்தானத்தின் இறுதிக் குரவ ராகிய பரஞ்சோதி முனிவர் நிலவுலகத் திற்கு வந்த போது, இரண்டாண்டு நிறைந்திருந்த சாமுசித்தராகிய மெய் கண்ட தேவரது பரிபக்குவ நிலைகண்டு, அவருக்கு ஞானேபதேசம் புரிந்தருளினர். திருக்கயிலாய பரம்பரையிலிருந்து வந்த சிவஞானம் கைவரப்பெற்ற **மெய்கண்ட தேவர்** சைவசமய முடிபுகள் அனைத் தையும் தெளிவுற விளக்கிப் பிறசமயங் களின் நிலைகளையும் காட்டுகின்ற **சிவ ஞானபோதம்** என்னும் தலைமணிநூல் அருளிச் செய்து அதற்குக் கருத்துரை பொழிப்புரை முதலியனவும் இயற்றி அருளினர்.

பின்பு அவரது குலகுருவாக இருந்து அவரால் ஆட்கொள்ளப்பெற்ற சகலாகம பண்டிதர் என்னும் **அருணந்தி சிவா சாரிய சுவாமிகள்** சிவஞான சித்தியார் என்னும் ஒரு பெருநூலைப் பரபக்கம், சுபக்கம் என்னும் இரண்டு பிரிவுகளுடன் அருளிச் செய்தார். இவரது மற்றெருநூல் இருபாஇருபஃது. மெய்கண்ட தேவரின் இன்னெரு மாணக்கர் திருவதிகை **மன வாசகங்கடந்தார்** என்பவர். இவர் உண்மை விளக்கம் என்னும் நூலை இயற்றிஅருளினர். அருணந்தி சிவா சாரியரது சீடர்களுள் **மறைஞான சம்பந்த சிவாச்சாரியரும்,** அவர் சீடருள் உமாபதி சிவாச்சாரியரும் சிறந்தவர்கள். **உமாபதி சிவம்,** சிவப்பிரகாசம் திருவருட்பயன், வினு வெண்பா, போற்றிப் பஃறெடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம், என்னும் எட்டு நூல்களை இயற்றி யருளினர்.

மெய்கண்டசிவமுதல், உமாபதிசிவம் வரை நால்வரும் புறச்சந்தான குரவர்கள் ஆவார்கள். இவர்கள் இயற்றிய பதினெரு நூல்களும் உண்மை விளக்கமும் இவற் றிற்கு முன்னரே தோன்றியிருந்த **திரு வுந்தியார், திருக்களிற்றுப் படியார்** என்னும் நூல்களும் ஆகிய பதினுன் கையும் மெய்கண்ட நூல்கள் எனவும் சித்தாந்த சாத்திரம் எனவும் வழங்குவர். வேதசிவாகமங்களின் உண்மை முடி புகளை விளக்கி அருள் நூல்களாகிய திரு முறைகளில் காணப்பெறும் அனுபவப் பயன்களுக்கு மரபு உணர்த்துவனவாய் மெய்கண்ட நூல்கள் இருக்கின்றன. மெய்ஞ்ஞான விளக்கத்திற்கு ஏதுவாகிய சித்தாந்த சாத்திரம் எல்லா நூல்களுள் ளும் சிறந்து தலையிடம் பெற்றிருக்கிறது. இவற்றுள் சிவஞான போதம் காப்புச் செய்யுளும் அவையடக்கமுமாகிய பாயி ரத்தைக் கொண்டு பன்னிரண்டு சூத்தி ரங்களாகியது. இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களின் பொது

இயல்பைப் பிரமாணம், இலக்கணம் என்னும் வகையில் முதலாறு சூத்திரங் களிலும், அம்முப் பொருள்களின் சிறப் பியல்புகளைச் சாதனம், பயன் என்னும் வகையில் கடைசி ஆறு சூத்திரங்களிலும் அந்நூல் விளக்கு கின்றது. காப்புச் செய் யுளால் ஆல்நிழ லமர்ந்த ஆண்டவனே பரம்பொருள் என உணர்கிருேம். அவை யடக்கச் செய்யுள் உயிரியல்பை உணர்ந்தவர்க்கே இறைவனியல்பு உணர வரும் என்பதையும், அவ்வா றுணர்ந்த அருட் செல்வர்களே எதனையும் உணர்த்த வல்லவர் என்பதையும் அறிவிக்கின்றது.

(1) முதற்சூத்திரம் உலகத்தைப் படைத்து, காத்து, வருகின்ற ஒரு முதல் வன் உளன் என்பதும், அவன் அனைத் தையும் ஒருங்கே ஒடுக்கி ஒருங்கே படைக்க வல்ல பரமசிவனே என்பதும் உணர்த்துகின்றது. (2) இரண்டாஞ் சூத்திரம் அப் பரமசிவன் உயிர்களோடு ஒன்ருய், வேருய் உடனுய் நின்று அவை செய்த வினைகளுக்கேற்பப் பயன் நுகரும் படி செய்வான் என்பதும், தானும் தனது சத்தியும் என இருவகைப் பட நின்று உலகத்தை நடத்துவான் என்பதும் கூறு கின்றது. ஆணவமலத்தினது உண்மை முதற் சூத்திரத்திலும்,கன்மம் மாயா மலங் களின் உண்மை இரண்டாஞ் சூத்திரத் திலும் உணர்த்தப் பெற்றது.

(3) மூன்ருஞ்சூத்திரம் உயிரானது உடம்பு, ஐம்பொறிகள், பிராணவாயு கரு விகள் ஆகியவற்றிற்கு வேருய், நான் என்னும் உணர்விற்கு இடமாய் இருப் பது என்பதை இயம்புகின்றது. (4) நான் காஞ் சூத்திரம் உயிர் ஆணவ மலத்தால் கட்டுண்டு ஐந்து அவத்தைகளை அடை யும் எனவும், அவ்வுயிர் அந்தக் கரணங் களுக்கு வேருயது எனவும் சொல்லும். (5) ஐந்தாஞ் சூத்திரம் இறைவன் உயிர் தன்னை உணராதிருந்தும் அதன் உணர் விற்கு முதலாய் இருந்து உணர்த்துகின் ருன் என்பதை விளக்குகின்றது.

(6) ஆருஞ் சூத்திரம், இறைவன் உயிரால் அளந்தறியப்படாத சித்துப் பொருள் எனவும், திருவருள் ஒன்றித்து நின்றுணரும் அனுபவ ஞானத்திற்கு விடயமாகும் சத்துப் பொருள் எனவும் புலப்படுத்துகின்றது. (7) ஏழாம் சூத்திரம் உயிர் உலகியலில் அசத்தை அசத்தா லறிவது போல் இறையியலில் சத்தைச் சத்தால் அறியும் எனவும், நான் உடம்பு என்னும் உணர்வு விபரீத உணர்வு ஆதல் போல, நான்பிரமம் என்னும் உணர்வும் விபரீத உணர்வே எனவும் தெளிவிக்கின்றது.

(8) எட்டாஞ் சூத்திரம் முத்திக் குரிய சாதனம் ஞானமே எனவும், அது முதல்வன் குருவாய் வந்து உணர்த்த உணரப் பெறும் எனவும், முதல்வன் குருவாய் வருவதற்குச் சரியைகிரியை யோகங்களைச் செய்து வருதல் வேண்டும் எனவும் மொழிகின்றது. (9) ஒன்பதாம் சூத்திரம் இறைவன் பாசஞான, பசு ஞானங்களால் அறியப்படான் எனவும், அசத்தாகிய பாசத்தை விட்டு நான்யார் எனச் சிந்தித்துணர்ந்தால் அங்கே சிவ ஞானம் தோன்றும் எனவும், அச்சிவ ஞானத்தால் இறைவனை உயிரின் கண் ணே நாடி அந்த நிலை நெகிழாதிருக்க எனவும் அறிவிக்கின்றது.

(10) பத்தாம் சூத்திரம் உலகியலில் இறைவன் உயிராய் நின்ற முறைபோல உயிர் இறைவனுய் ஏகனுகி இறை பணி நிற்க மும்மலங்களும்பற்றறக்கழியும் எனத் தெரிவிக்கின்றது.

(11) பதினெராம் சூத்திரம், இறை வன் உலகியல், இறையியல் ஆகிய இரண்டிலும் உயிர்க் குயிராய் நிற்கும் பேருபகாரத்தை உயிர்மறவாது உணர்ந் தால் அவ்விறைவன் மீது அன்பு மிகுதிப் பட அவ்வன்பால் இறைவன் வெளிப்பட அவனில் அழுந்தி நிற்றலே பரமுத்தி நிலை எனச்சாற்றுகின்றது. (12) பன்னி ரண்டாம் சூத்திரம் சீவன் முத்தர்களுக்கு மெய்யுணர்வு நிலைபெற அடியார் கூட் டுறவும், திருவேடத்தையும் திருக் கோயிலையும் இறைவன் எனவே கண்டு வழிபடுதலும் இன்றியமையாதன, என் பதை வலியுறுத்துகின்றது. சிவஞான போத நெறி என்றும் நின்று நிலவு வதாக!

# தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான். P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

( முன் இதழ்த் தொடர்ச்சி )

தொண்டை நாட்டுத் திருப்பதிகளுள் தலைமை பெற்ற தேவப் பெருமாள் ஸன்னிதியையும் தேவப் பெருமாளையும் பற்றின பிரபாவங்களைப் புராணவரலாறு கொண்டும் ஆழ்வார்களினுடையவும் ஆசாரியர்களினுடையவும் ஈடுபாடு கொண்டும் முன்னிதழ்களில் அனுபவித்தோம். திருக்கச்சி நம்பிகள் எட்டு சுலோகங்கள் கொண்ட தேவராஜாஷ்டகஸ்துதியையும், கூரத்தாழ்வான் நூறு சுலோகங்கள் கொண்ட வரதராஜஸ்தவத்தையும், வேதாந்த வாசிரியர் ஐம்பது சுலோகங்கள் கொண்ட வரதராஜ பஞ்சாசத்தென்னும் தோத்திரத்தையும், மணவாள மாமுனிகள் பத்து சுலோகங்கள் கொண்ட தேவராஜமங்கள ஸ்துதியையும் தேவப்பெருமாள் விஷயமாக அருளிச் செய்துள்ளார்கள். இவையெல்லாம் அநுஸந்தான பரம்பரையில் விளங்கி வருமவையே. இத்துதி நூல்களெல்லாவற்றிற்கும் நாம் விளக்கவுரை யியற்றி அச்சிட்டு வெளியிட்டுள்ளோம். விருப்பமுடையார் வரவழைத்துக் காண்க.

இனி, திருவெஃகா வென்னும் திருப்பதியை யனுபவிப்போம். வெஃகா என்றும், வெஃகணை என்றும் வழங்கப்பெறும் இத்தலம். இவை நூல் வழக்கேயாகும். உலக வழக்கில் **யதோக்தகாரி ஸன்னிதி** யென்றும் **சொன்ன வண்ணஞ்செய்தபெருமாள் ஸன்னிதி** யென்றும் வழங்கிவரும். இவ்விரு திருநாமங்களும் ஒரு பொருளனவே. **யதோக்தகாரீ** என்னும் வடமொழிப் பெயர்க்கு நேரான மொழி பெயர்ப்பு 'சொன்னவண்ணஞ் செய்த பெருமாள்' என்பதேயாம். இப்பெருமாள் யார் சொன்ன வண்ணம் செய்தாரென்று கேள்வி பிறக்கும். நான்முகக் கடவுள் சொன்ன வண்ணம் செய்தார், திருமழிசை யாழ்வார் சொன்ன வண்ணம் செய்தார் என்பது விடையாகும். முதலது புராண வரலாற்றை யடியொற்றியது; இரண்டாவது ஸம்பிரதாய வரலாற்றை யடியொற்றியது. இரண்டையும் விளக்குவோமிங்கு.

## புராணத்தை யடியொற்றிய வரலாறு வருமாறு.

நான்முகக் கடவுள் திருமாலைக்காண வேண்டித் தவம்புரிந்தபோது தொண்டை நாட்டிலுள்ள ஸத்திய விரதக்ஷேத்திரத்தில் வேள்வி புரியுமாறு ஆகாயவாக்கினால் கட்டளை பெற்று, மேரு மலையுச்சியில் நின்று உடனே ஸத்யவ்ரதக்ஷேத்ரத்திற்கு வந்து சேர்ந்து அங்குத் தவமுனிவர் சூழ்ந்த திருவனந்த ஸரஸ்ஸையும் அதனருகில் திருவத்தி மாமலையையும் நோக்கியுவந்து அத்திருக்குளக்கரையிலேயே தூய வேள்வி புரியத் துணிவு கொண்டு நினைத்தபோதே எதையும் அற்புதமாக நிருமித்து முடிக்க வல்லவனான விச்வகர்மாவை யழைத்து, ஸ்ரீ ஹஸ்திகிரியை உத்தரவேதியாக்கி இவ்விடத்திலேயே யாகசாலையை அமைத்திடுவாயாக; மணிமாடங்கள் சூழ்ந்தழகாய தொரு நகரத்தையும் நிருமிப்பாயாக" என்று கட்டளையுமிட்டருள, உடனே விச்வகர்மா ஸ்ரீ ஹஸ்திகிரியை நாற்சதுரமாக்கி அதனருகில் அச்வமேத யாகசாலையை அமைத்துத் தடமாமதிள் சூழ்ந்தழகாய கச்சிப்பதியையும் விரைவில் நிருமித்தனன். பிறகு வேள்வியைக் காண விருப்பத்துடன் வந்து சேர்ந்த அந்தரத்தமரர்கள் கூட்டங்களும் இயக்கரும், விச்சாதரரும், கின்னரரும், கந்தருவரும் முதலாயினோர் தந்தமக்குரிய விடுதிகளில் சார்ந்தனர். இந்

திரன் முதலிய தேவர்களாலும், விச்வாவஸு முதலிய கந்தருவர்களாலும், விரோசனன் முதலிய அசுரர்களாலும், மணிபத்ரன் முதலிய யக்ஷர்களாலும், வசிஷ்டர் முதலிய மாமுனிகளாலும், அரம்பை முதலிய அப்ஸரஸ் ஸுக்களாலும், ஜனகன் முதலிய சக்கரவர்த்தி களாலும், மற்றும் பல்வகைப் பெரியார்களாலும் நெருக்கமுற்று விளங்கியது காஞ்சிமாநகர்.

பின்னர், யாகத்திற்கு வேண்டிய ஸம்பா ரங்கள் சேகரிக்கப்பட்டு, ரித்விக்குகளும் திரண் டனராக, வேள்வி புரிய ஸஜ்ஜனாய் நின்ற விரிஞ்சனை நோக்கி ப்ருஹஸ்பதியானவர், 'திசைமுகனே! உனது தரும பத்தினியான ஸரஸ்வதியின்றியில் வேள்வி நடைபெறாததால் இவளை இங்கு அழைக்க முயல்வாய்' என்றனர். பிறகு பிரமன் வஸிஷ்ட முனிவனை நோக்கி 'முன்பொருகால் ஏதோவொரு காரணத்தினால் என்மீது கறுக்கொண்ட ஸரஸ்வதியானவள் ஸரஸ்வதீ நதியைச் சென்று சேர்ந்து அங்குத் தவம் புரிந்து கொண்டிரா நின்றாள்; அவளை நீ இப்போது நல்வார்த்தைகளினாலுகப்பித்து இங்கழைத்து வரவேணும்' என்றனன். அக் கட்டளையைச் சிரமேற் கொண்டவஸிஷ்ட மாமுனிவன் ஸரஸ்வதீ தீரத்திற்கு விரைந்து சென்று வாணியை வணங்கித் துதித்து 'தாயே! காஞ்சிமா நகரில் அச்வமேத வேள்வியியற்ற விரும்பிய அம்புயத்தோன் உமது நல்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றாராதலால் அவண் விரைந்து எழுந்தருள வேணும்; ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தில் அந்த வேள்வியை நீர் குறையற நிறைவேற்றி யருளவேணும்' என்று கை கூப்பிக் கூறினன்.

இது கேட்டதும் மிக்க சினங் கொண்ட ஸரஸ்வதியானவள் உதடு துடிக்க இங்ஙனம் உரைத்தனள் — பிள்ளாய்! என்மீது மிக்க பகைமை கொண்ட எனது கணவர் பெரிய தொரு சபையில் என்னைப் பண்டு பரிபவப் படுத் தினபடியை நினைத்துக் கொண்டால் அவ ரருகில் வந்துசேர எனக்கு மனமுண்டாகுமோ? என்னை அவர் பரிபவப்படுத்தினபடியாதென்று உணர விரும்பு வாயாகில் உரைக்கின்றேன் கேள்; முன்பொருகால், லக்ஷ்மீ பக்தர்களும் என் பக்தர்களும், பரஸ்பரம் ஒரு விவாதமடைந்தார் கள்; லக்ஷ்மியே மிகச்சிறந்தவளென்று லக்ஷ்மீ பக்தர்களும், நானே மிகச்சிறந்தவளென்று என்பக்தர்களும் சொல்லி விவாதப்பட்டார்கள்; பிறகு இருவகுப்பினரும் பல முனிவர் புடை சூழ்ந்த நான்முகக் கடவுளின் ஸபைக்குச் சென்று தத்தம் வாதங்களை விரிவாக வெளி யிட்டுக் கொண்டனர்; அப்போது சதுர்முகனார் தாமாகவே பிராட்டியின் பெருமையையே ஸித்தாந்தமாக அறுதியிட்டுக் கூறினர். பிறகு நான் "என்னிலும் பிராட்டியே சிறந்தவளா யிடுக; ஸகல நதிகளுக்குள்ளுமாவது நான் சிறப்புடையளாம்படி அருள்புரியவேணும்" என்று நாரதரை வணங்கி வேண்டிக் கொண் டேன்; "கங்கை கங்கை யென்ற வாசகத் தாலே கடுவினை களைந்திட கிற்கும் கங்கை ஒப் புயர் வற்று விளங்கும் போது நதிகளுக்குள் ளும் உனக்குச் சிறப்பு ஏலாது; இங்ஙனம் நீ ஆசைப் படுவதும் அபஹாஸிக்கத் தக்கதாகும்" என்று பல்லாயிரவர் திரண்ட பெருஞ்சபையின் கண் மிகவும் திரஸ்காரமாக மொழிந்தனர். அவர் அங்ஙனம் அவமதித்ததனால் அளவு கடந்த சீற்றமுற்ற நான் அன்றே புறப்பட்டு இங்கு எனது அம்சமாகிய ஸரஸ்வதீ நதியைச் சார்ந்து வாழ்ந்து கொண்டிரா நின்றேன். வேள்வி புரிய விரும்பிய கணவர் என்னோடு கூடிய வேள்வி நடத்த விரும்பி யிருப்பாராயின் அவர் தாமே பரம பவித்திரமான இவ்விடத்தேற எழுந்தருளி, இங்கே வேள்வி நடத்தலாம்"— என்று கூறினள் ஸரஸ்வதீ.

இது கேட்ட வஸிஷ்டமுனிவர் 'தாயே! ஸரஸ்வதி! எல்லாமறிந்த நீர் இங்ஙனம் இயம் பலாகுமோ? ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தின் பெருமை ஸகலலோக ப்ரஸித்தமானது. அன் றியும் ஆகாய வாணியை ஆதரித்து அந்த க்ஷேத்ரந் தன்னிலேயே வேள்வியியற்ற நிச்ச யித்த அப்பெரியாரை இவ்விடத்திற்கு வரச் சொல்லுதல் உசிதமாகுமோ? நீர் தாமே சினம் தணிந்து அவ்விடமெழுந்தருள்வது மிக நன்று' என்று வணங்கி விண்ணப்பம் செய்ய அவ்வளவிலும் சிறிதும் சீற்றம் தணியப் பெறாத ஸரஸ்வதி பழைய பகையையே பெரிதும்பாராட்டி அவ்வேண்டுகோளைமறுத்தே விட்டனள். எவ்வளவு வேண்டியும் விருப் பம் நிறைவேறப் பெறாமலே வஸிஷ்டர் மீண்டு வந்து நான்முகரிடம் செய்தி யறி வித்தனர். அஃதுணர்ந்த ஸகல மஹர்ஷி களும் நான்முகக்கடவுளை நோக்கி 'தேவ! சீற்றத்தின் எல்லையிலே நிற்கின்ற ஸரஸ்வதி இவண் வரப்போகிறதில்லையென்பதறிந்தோம்; அதனால் ஒரு குறையுமில்லை; ஸாவித்ரி முதலிய

மற்ற மனைவியரை உடன் கொண்டு வேள்வி தொடங்கி முடிப்பது நலம்' என்றனர். அங்ஙனமே செய்வதாக இசைந்த திசைமுகனுர் ஸாவித்ரி முதலிய மனைவியருடன் கூடி யஜ்ஞ ஸங்கல்பஞ் செய்து கொண்டு அச்வமேத தீக்ஷையை வஹித்துக் கொண்டார். வேள்வி அதிசயங்களைக்காண வந்து குழுமி யிருக்கின்ற தேவாஸுரர் முதலிய அனைவர்க்கும் தக்கவாறு மரியாதை செய்ய அந்தணர்கள் நியமிக்கப் பட்டார்கள். அவர்கள் அவ்வண்ணமே ஸத்காரம் செய்ய எழுந்து தகுதி நோக்கித் தேவர்களுக்கு முதல் மரியாதை செய்தனர். அது கண்டு பொருமை கொண்ட அசுரர்கள் உடனே ஸதஸ்ஸில் நின்று எழுந்து வெளியேறி, அமரர்களை அவமதிக்க வெண்ணி அமர் புரிய ஆலோசிக்கலாயினர்.

போர் புரிவதே பொருத்தமான தென்று துணிந்த அவ்வசுரர்களை நோக்கி அவர்களில் ஒருவனுன விரோசனனென்பான் சிறிது விமர்சித்து இங்ஙனம் விளம்பினுன்; "அசுரர்காள்! மேல்விளைவதறியாமல் நீங்கள் சடக்கெனச் செய்யத் துணிந்த இந்த யுத்த ஸந்நாஹத்தை நிறுத்திக் கொள்வது நன்று; விரைந்து விளக்கிலே விழும் விட்டில்களுக்கு நேரும் கதிதான் நமக்கு நேரும்; பிறருடையவும் நம்முடையவும் பலாபலங்களை ஆராயாது திடீரென்று போர் புரியப் புகுவது பெருந்தீங்காகவே முடியும்; எளிய உபாயத்தினுல் ஸாதிக்கத் தகுந்ததைப் பராக்ரமத்தினுல் ஸாதித்துக் கொள்ளக் கருதுவது புத்திமான்களின் பணியல்ல; இப்போது எனக்குத் தோன்றுவதொரு உபாயத்தை உரைக்கின்றேன் கேண்மின்; இந்த நான்முகக் கடவுள் தனது மூத்த மனைவியாகிய ஸரஸ்வதியைத் துறந்து வேள்வியியற்றத் தொடங்கி யிருக்கின்றமையால் நாம் ஸரஸ்வதியிடம் சென்று சினமூட்டி அவளைக் கொண்டு வேள்வியைக் கெடுத்தல் மிக எளிதாகும்" — என்று விரோசனன் இங்ஙனம் விளம்பக் கேட்ட அசுரர்களனைவரும் நன்று நன்றென்று நவின்று அப்பொழுதே புறப்பட்டு ஸரஸ்வதி பக்கலில் சென்று, தங்களுக்குள்ள மாயச்செயல் வல்லமையினுல் அசுரவுடல் நீத்து அந்தணவேடம் பூண்டு வாணியை வாயார வாழ்த்தி நின்றனர். அவ்வாழ்த்துதலால் அகமகிழ்ந்த அவள், நீங்கள் வந்த காரியமென்னென்று வினவ, தங்களுக்கு ஸதஸ்ஸில் அவமரியாதை நடந்ததென்பதைச் சிறிதும் வெளியிடாமலே இங்ஙனம் மொழிந்தனர்; — "மேன்மை தங்கிய கலைமகளே! தீயமதிகொண்ட சிலமுனிவர்களால் தூண்டப்பட்ட உமது கணவன் முக்கிய மஹிஷியான உம்மைத் தவிர்த்து மற்றை மஹிஷிகளோடு கூடி யாகம் செய்யத் தொடங்கியிருக்கின்றனன்; மிகவும் அநீதியான இந்தச் செய்தியை நாங்கள் பொறுக்ககில்லோம்; இதனை உம்மிடத்து விண்ணப்பஞ் செய்யவேவந்தோம். எவ்வகையினுலாவது அந்த வேள்வி நடைபெருத வண்ணம் தடை செய்தீராகில் உம்மிடத்து அன்பு பூண்ட எமக்கு மகிழ்ச்சியாகும்—என்று.

இங்ஙனம் அசுரர் மொழியைக் கேட்ட ஸரஸ்வதி அடக்க வொண்ணுத சீற்றத்தையேறிட்டு, நான்முகனுர் செய்யும் நல் வேள்வியைப் பங்கம் செய்யப் பாரித்து, ஸஹ்யமலையினின்று கிளம்பி வேகவதி யென்னும் நதியாகப் பெருகி ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தனள். அந்த நதியின் பெருக்கு வாசம கோசரமாக இருந்தது. மிகவும் பயங்கரமான விசையுடனே பெருகி வருகின்ற அப்பெருவெள்ளத்தைக் கண்ட யாகசாலையிலுள்ளாரனைவரும் திடுக்கிட்டு இன்னது செய்வதென்று தோன்ருமல் மிகவும் வியாகூலப் பட்டனர். 'ஸ்வாஹா, ஸ்வாஹா, என்று சொல்லிக் கொண்டிருந்த வாசகங்கள் 'ஹா, ஹா, ஹா' என்று மாறிவிட்டன. வேள்விகாணவந்த ஸகல ஜனங்களும் வருந்தியேங்கி எஜமானுகிய நான்முகனைத் தஞ்சமாக அடைந்து 'எம்மைக் காத்தருள வேணும்' என வேண்டிக் கொண்டவளவிலே, பிரமன் யோகத்ருஷ்டியினுல் 'அசுரர்களால் கலக்குண்ட ஸரஸ்வதியின் செயல் இது' என்றுணர்ந்து, ஸ்ரீமந் நாராயணனது திருவருளாலேயே இப் பெருந்துயரம் தொலைய வேணுமென்று துணிந்து உள்ளெலா முருகிக் குரல் தழுத்து உடம் பெலாம் கண்ண நீர் சோர அப் பெருமானைக்குறித்து வாயாரத் தோத்திரஞ் செய்தனன். அந்தத் தோத்திரத்தினுல் மிகவும் திருவுள்ள முவந்த எம்பெருமான், ஏற்கெனவே உப நிஷத்துக்கள் தன்னை ஸேதுவாக ஓதி யிருப்பது பொருள் பெற்ற தாம்படி, "சதுமுகனுர் வேள்விதனைச் சிதர்கெடுக்கச் செறிந்தோடுங் கதியுடைய வேகவதிக்கு அணையாக வந்துதித்தோய்!" என்றும் "அணியாக வேகவதி அலையோடு கொண்டோடி ஆலிக்க அணையாக் கிடந்த களைதானே" என்றும் பின்னுர் ஏத்துமாறு அந்த ஸரஸ்வதியின் வெள்ளத்

தைத் தடை செய்ய வல்ல அணையாக சயனித்துக் கொண்டருளினன். அந்தத் திருப்பள்ளித் திருக்கோலத்தைக் கண்ட ஸரஸ்வதி நாணமுற்று மேலே பெருகிச் செல்லமாட்டாமல் திகைத்து நின்றனள். மலர் மைந்தனும் மற்றுமுள்ள மஹர்ஷிகளும் எம்பெருமானுடைய திருவருளை நோக்கி மிக வியந்து வாயார வாழ்த்தி வணங்கி நின்றனர். நதியுருவாக வந்தஸரஸ்வதியும் அவ்வளவிலே தனது ஆர்ப்பாட்டங்களெல்லாம் அடங்கப் பெற்று எம்பெருமானுடைய நியமனத்தினல் அந்தர் வாஹினியாய்ச் சென்று கடல் சேரலுற்றாள். அக்கதை நிற்க பிரமன் வேண்டிக் கொண்ட படியே பகவான் அணையாக வந்துதித்து வேள்வியைக் குறையறப் பூர்த்தி பெறுவித்ததனல் புராண வரலாற்றின்படி 'யதோக்தகாரி' என்னுந் திருநாமத்தின் பொருத்தம் நிரூபிக்கப் பட்டதாயிற்று.

இனி, 'திருமழிசை யாழ்வார் சொன்ன வண்ணஞ் செய்த பெருமா' னென்பது விவரிக்கப்படுகின்றது. திருமழிசை யாழ்வார் தமது ஜன்ம பூமியான திருமழிசையில் வாழ்ந்து வருகையில் எம்பெருமானுடைய நியமனத்தில் கச்சி வெஃகணைப் பதியாகிய இவ்விடத்தே யெழுந்தருளி, இங்குப் பள்ளி கொண்டருளும் பெருமாளைச் சேவித்து ஈடுபட்டுப் பலவாண்டுகள் இங்கே யெழுந்தருளி யிருந்தார். அப்பொழுது, கணி கண்ணனென்னும் பரம பக்தனொருவன் வந்து இவரிடத்திலே ஆசார்யப் பிரதிபத்தி பண்ணி இவர்க்குப் பலவிதமான தொண்டுகள் புரிந்து கொண்டு உஞ்ச விருத்தியினல் ஜீவித்து வந்தான். அக்காலத்தில், தலை நரைத்து உடல் திரைந்து பருவம் முதிர்ந்த கிழவியொருத்தி ஆழ்வாருடைய பாத கமலங்களிற் பரம பக்தியுடனே அவருள்ள இடத்தைத் திருவலகிடுதலும் மெழுகுதலும் கோலமிடுதலுமாகிய கைங்கரியங்களை நாள்தோறும் செய்து கொண்டிருந்து ஒருநாள் அவர் திருக்கண் விழித்த ஸமயத்திலே அவரைச் சரணமடைந்து வரங்கேட்டுப் பெற்று மாருத யௌவனத்தை யடைந்து தேவமாது போல அதிஸௌந்தரியாயினள். அந் நகரத் தரசனை பல்லவராயன் ஒரு நாள் அவளது வடிவழகைக் கண்டு காதலுற்று விலையுயர்ந்த அணிகலங்களையும் நலமிகுந்த பட்டாடைகளையும் பரிசு கொடுத்து அவளை மணஞ்செய்து பட்ட மஹிஷியாக்கி அவளுடன் வாழ்ந்திருந்தான். இருக்கையில், தனது யௌவநம் நாளுக்கு நாள் குறைவதையும் அவளது பருவம் மாறுபடாதிருப்பதைக் கண்டு வியந்து 'உனது மங்கைப் பிராயம் எஞ்ஞான்றும் ஒருபடியாயிருத்தற்கு ஹேதுஎன்ன'? என்று கேட்டு ஆழ்வாருடைய வரப்ரஸாதமென்றறிந்து 'அவ்வருளைத் தான் பெறுவதற்கு நல்லுபாயத்தை நாடி யுரைப்பாய் ? என்று அவளையே வேண்டினன். அது கேட்டு, அந்த மங்கை 'நாடோறும் நமது அரண்மனைக்கு பிக்ஷுகராய் வருகிற கணிகண்ண ரென்பவர் அந்த மஹாயோகிக்கு அந்தரங்கர்; இவர் புருஷகாரமாக அவரை அநுவர்த்தித்தால் மநோரதம் கைகூடும்' என்றாள். அவ்வாறே வேந்தன், மறுநாள் கணிகண்ணன் வந்தபோது அவனைத் தனியே அழைத்து உபசரித்து 'உமது ஆசாரியரை நான் சேவிக்கும்படி இங்கு அழைத்துவர வேண்டும்' என வேண்ட; அவன் 'நம் ஆசாரியர் ஓரிடத்துக்கும் எழுந்தருள மாட்டார்' என்று கூறிவிட, அரசன் 'என்னை அங்கு அழைத்துப் போயாயினும் அவரது திருவருட்கு இலக்காக்குவித்து அவரருளால் என்னை நித்திய யௌவநனாய் இருக்கச் செய்ய வேண்டும்' என்று பிரார்த்திக்க, அதற்கும் அவன் உடன்படாமல் 'உன்னைப் போல ஐஹிக போகத்தையே விரும்பி நிற்பவரை எம் ஆழ்வார் கண்ணெடுத்துப் பார்த்தலும் அரிது' என்று மறுத்து விட்டான். பின்பு அரசன் வருந்திய சிந்தையனாயிருக்கையில் மந்திரிகள் வந்து தேற்றி 'இக் கணிகண்ணன் தெய்வப் புலமை யுடையான்; இவன் வாயினால் பாடிய படியெல்லாம் பல அற்புதங்கள் நிகழ்கின்றன; ஆதலின் இவனைப் பாடப்பெற்றால் இஷ்டஸித்தி பெறலாம்' என்று உறுதிகூற; அங்ஙனமே மன்னவன் அடுத்த நாளில் அக் கணிகண்ணன் வந்த பொழுது 'எனக்கு அழியாத இளமை வருமாறு கவி பாட வேண்டும்' என்று புகல்; அதற்கு அவன்'நான் எப்பொழுதும் நாராயண ஸ்தோத்திரஞ் செய்வேனே யொழிய நரஸ்துதி செய்வேனல்லேன்' என்றான். பின்னும் மன்னவன் தன்னைப் பாட வேண்டும் மென்று பலகால் நிர்ப்பந்திக்க; அவன்

"ஆடவர்க ளெங்ங னகன்றொழிவார் வெஃகாவும்,
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடிய மால்
நின்றா னிருந்தான் கிடந்தானிது வன்றோ,
மன்றூர் பொழிற் கச்சி மாண்பு"

என்று ஒரு திருக்கவி சொல்ல; கொற்றவன் கோபங் கொண்டு 'நம்மைப் பாடு என்றால் நக

ரத்தைப் பாடிய நீ இவ்வூரில் இனி வஸிக்கலாகாது, உடனே வெளியே போ' என்று உறுத்திக்கூற, கணிகண்ணன் ஆழ்வாரிடஞ் சென்று நடந்த செய்தியை விண்ணப்பஞ் செய்து 'அடியேனுக்கு விடை தந்தருள வேண்டும்' என்ன ஆழ்வார் 'நானும் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, உடன் வருவேன்' என்று உரைத்துத் திருக் கோயிலுட் சென்று அடியவர்க் கெளியவனுன எம்பெருமானைத் திருவடி தொழுது,

**"கணிகண்ணன் போகின்ருன் காமருபூங் கச்சி,**
**மணிவண்ணு நீ கிடக்க வேண்டா—துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்,**
**பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்"**

என்று பிரார்த்தித்த வளவிலே, அவ்வெம்பெருமானும் ஆழ்வாருடைய வேண்டுகோளின் படியே யோக நித்திரையை விட்டு எழுந்துவர, மூவரும் அவ்வூரை விட்டு அருகிலுள்ளதோரிடத்தை அடைந்து அங்கு வஸித்தனர். இங்ஙனம் பெருமாளும் ஆழ்வாரும் அவரடியானும் அப்பதியை விட்டுப் போயினதால், அத்திவ்ய தேசத்தில் பல திருக் கோயில்களி லெழுந்தருளி யிருக்கின்ற மற்றை யெம்பெருமான்களும் விட்டு நீங்க; அந்நகரம் முழுவதும் ஒளியிழந்து, அங்கு மற்றும் பல ஆலயங்களிலிருக்கின்ற தேவதைகளின் ஸாந்நித்யமு மில்லையாய் ஸூர்ய ஞெளியுஞ் செல்லாமல் இருள் மூடப் பட்டது. இப்படி நீளிரவாய் நீண்டதைக் கண்டு கவலைப்பட்டு மன்னவனும் மந்திரிமாரும் அவர்களுள்ள விடத்தைத் தேடியடைந்து கணிகண்ணன் காலில் விழுந்து தனது அபசாரத்தை க்ஷமித்தருளுமாறு பலவாறு வேண்டிக் கொள்ள, அவனும் மீண்டெழுந்தருளும்படி ஆழ்வார் பக்கல் விண்ணப்பஞ் செய்ய, அவரும் அதனை அங்கீகரித்து ஆச்ரித பரதந்த்ரனுன சேஷசாயியை நோக்கி,

**"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி,**
**மணிவண்ணு! நீகிடக்க வேண்டும்—துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்,**
**பைந்நாகப் பாய்படுத்துக் கொள்"**

என்று முன்பு பாடிய பாட்டை மாற்றிப் பாடி வேண்ட, எம்பெருமானும் அதற்கு உடன்பட்டு ஆழ்வாரும் கணிகண்ணனும் மீண்டெழுந்தருளித் திருவெஃகாவை யடைந்து ஆழ்வார் திறத்து அபிமானத்தால் தான் இங்ஙனஞ் செய்தது பின்புள்ளார்க்கும் ப்ரத்யக்ஷமாக வேணுமென்று முன்பு போல வலத்திருக்கை கீழாக வன்றி இப்பொழுது இடத்திருக்கை கீழ்ப்படக் கண்வளர்ந்தருளினுன். ஆக இவ்வரலாற்றின் படியும் 'சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள்' ஆயினர்.

இத்தலம் ஆழ்வார்கள் ஐவரின் பாடல் பெற்றது. பொய்கை யாழ்வார் முதல் திருவந்தாதியில் (77) "வேங்கடமும் ... ... வெஃகாவும்". பேயாழ்வார் மூன்றுந் திருவந்தாதியில் (26) சிறந்தவென் ... ... வெஃகாவும். (34) "அன்றிவ்வுலகம் ... ... கிடந்தானே". (62) "விண்ணகரம் ... வெஃகா". (64) "இசைந்த வரவமும் ... ... கச்சி வெஃகாவில்" (76) "பொருப்பிடையே நின்றும்... ...விருப்புடைய வெஃகாவே". திருமழிசையாழ்வார் திருச்சந்த விருத்தத்தில் (63) "நன்றிருந்து ... ... வெஃகணைக் கிடந்தது". (64) "நின்ற தெந்தை ... ... வெஃகணைக்கிடந்தது". நான்முகன் திருவந்தாதியில் (36) "நாகத்தணை ... ... வெஃகா". நம்மாழ்வார் திருவிருத்தத்தில் (26) "நானிலம் ... ...கண்ணன் வெஃகாவுது" திருவாய் மொழியில் (5–10–6) "நின்றவாறும் ... ... கிடந்தவாறும்". திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (2–6–5) "பிச்சச்சிறு ... ... கச்சிக் கிடந்தவன்". (10–1–7) "கூந்தலார் ... ... சென்று காண்கும் வெஃகாவுளே". சிறிய திருமடலில் "பேராமருது ... ... வெஃகாவே". பெரிய திருமடலில் "வெஃகாவிலுன்னிய யோகத்துறக்கத்தை". திருநெடுந் தாண்டகத்தில் (8) "நீரகத்தாய் ... ... வெஃகாவுள்ளாய்". (9) "வங்கத்தால் ... ... மதிட் கச்சியூராய்". (13) "கல்லெடுத்து ... ... வெஃகாவில் துயிலமர்ந்த". (14) "முளைக் கதிரை ... ... வெஃகாவில் திருமாலை".

*

(தொடரும்)

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு.K. பட்சிராஜன், B.A.,B.L., திருநெல்வேலி.

( முன் இதழ்த் தொடர்ச்சி )

புதுமணப் பெண் புக்ககம் புறப்படும் போதைய அவள் மனநிலை தெரியுமன்றோ! பிறந்த ஊரையும் பெற்ற தாய், தந்தை, பந்து வர்க்கங்களையும் விட்டுப் பிரிந்து போகின்றோமே என்ற ஒரு ஏக்கம் அவள் மனத்தே சூழ்கின்றது. கண்கள் கண்ணீர் பெருக்குகின்றன. வார்த்தைகள் முழுவதும் வரலின்றி விம்மலும் பொருமலுமாக வருகின்றன. அருகுள்ளாரும் ஏங்குகின்றனர். இந்தச் சூழ்நிலையினின்றும் தன்னைப் பறித்துக் கொண்டு துன்புறும் மனத்தோடுதான் அவள் பிறந்தகத்தைப் பிரிகின்ருள். ஆனால் வழி செல்லச் செல்ல அவள் பிறந்தகமும் பந்துவர்க்கமும் கண்ணினின்றும் மறைகின்றன. மெல்ல மெல்ல அவள் மனத்திரையினின்றே மறைகின்றனர். அவர்கள் குடிகொண்டிருந்த அவள் மனத்திடத்தே அவள் கணவன் திருவுருவம் தோன்றி நிறைகின்றது. அதை உன்னவே முன் துன்பாய்த் தோன்றியவைக்கு அவள் உள்ளத்தே இடமில்லை. அவனை நேரிலே காணவேணும், அளவளாவவேணும், அவனால் தழுவப் பெறவேணும் என்ற பாரிப்புத் தோன்றிக் கணந்தோறும் பன்மடங்காக வளர்கின்றது. இனி அவள் நினைவெல்லாம் அவனாகவும், அவன் வாழிடமாகவுமே ஆய்விடுகின்றது.

இதே நிலைதான் இராமாநுசருக்கும். திக்கு நோக்கித் திரும்பித் திரும்பியவராய், கண்கள் பனிநீர் தெறித்திடக் காஞ்சியையும், அருளாளன் ஸன்னிதியையும் விட்டுத் திருவரங்கப் பெருமாளரையரோடு புறப்பட்ட அவர் மனத்தினின்று காஞ்சீபுரி மெல்லத் தேய்ந்து திருவரங்கமும் அழகிய மணவாளனும் அம் மனத்தே நிறைந்தனர். அழகிய மணவாளனைக் காண வேணும் என்ற அவாவும், எவ்வளவு சீக்கிரம் காண்பது என்ற துடிப்பும் அவர் திருவுள்ளத்தே வளர்ந்தன. இதன் காரணமாக இடையே எங்கும் தங்கலின்றி அரையரோடு விரைவிலே சென்ற இராமாநுசர் வழியெல்லாம் எளிதே கடந்து காவிரியின் வடபால் சேர்ந்தார்.

இப்படி இராமாநுசர் திருவரங்கப் பெருமாளரையரோடு காஞ்சியினின்று திருவரங்கம் நோக்கிப் புறப்பட்டு விட்டார் என்ற செய்தி அதிவிரைவிலே அரங்கமா நகருக்கு எட்டியது. அடுத்து வடதிருக் காவிரியருகே அனுட்டானத்துக்காகத் தங்கியிருக்கின்றனர் என்றும் தெரிந்தது. இச் செய்தி அறிந்த பெரிய நம்பிக்கு ஒரே குதூகலம்! இராமாநுசரின் அவதார மகிமை தெரிந்தவராதலின் அவரை வெகு சிறப்போடு எதிர்கொள்ள வேணும் என்பது அவரது பேரவா. எனவே மற்றைய முதலிகளுக்கும் ஜீயர்களுக்கும் இச் செய்தியை மகிழ்ச்சி பொங்க அறிவித்து அவர்களனைவரையும் மற்றும் ஏகாங்கிகள் ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவரையும் உடன் கொண்டு நேரே பெரிய பெருமாள் ஸன்னிதி சென்று "எம்பெருமானே! தேவரீர் கடாக்ஷத்தால் நம் திருவரங்கப் பெருமாளரையர் தாம் இங்கிருந்து தேவரீர் நியமனப்படி போன காரியத்தில் வெற்றி யடைந்தார். இராமாநுசர் அரையரோடு வடதிருக் காவிரி யருகே வந்துவிட்டனர். அவரைத் தக்க முறையில் வரவேற்று இத் திருநகருக்கு அழைத்துவரத் திருவுள்ளமாக வேணும்!" என்று விண்ணப்பித்து நின்ருர். நம் பெருமாளும் முறுவல் பூத்தவராய்ச் சேனை முதலியாருக்கு அருளப்பாடிட்டு நம் இராமாநுசனை நன்கு எதிர் கொண்டு வாரும் என்று நியமித்தார்.

" அரையர் இராமாநுசன் தனைக் கொண்டு
அணைகின்றார் இன்று அவர்க் கெதிரே
நிரை செய்திடுக நம்மனைத்துக்
கொத்தும் கொண்டு நீ என்னத்
திரைசெய் கருணைச் சேனையர் கோன்
தனக்குச் சீரார் திருவரங்கர்
உரை செய்தருள அங்குள்ள
அனைத்துக் கொத்தும் உடன்கூடி"
"... .... ... .... ...
மேக வண்ணர் பணித்தபடி
வடவாறளவும் விடை கொண்டார்".

பெருமான் நியமனப்படி முதலிகளோடும், மற்றும் ஜீயர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களோடும் கோயில் அனைத்துக்கொத்தும் உடன்வர சேனை முதலியார் வடதிருக் காவிரி நோக்கி எழுந்தருளினர். பல்வகை வாத்தியங்களும் முழங்கின. பேரிகை முதலிய ஒலித்தன. நிருத்த மாதர்கள், கீதங்கள் பாடுபவரும் நடனம் ஆடுபவருமாய் முன் சென்றனர். போம் வழியெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் தெரு வெங்கும் நிறைந்து நின்றனர். இவ்வளவு கோலாகலத்தோடு இராமாநுசரை எதிர்கொள்ளும் ஊர்வலம் வடதிருக் காவிரியின் தென் கரையை அடைந்தது. இப்படிச் செல்லும் கோஷ்டி ஒரு முக்தனைப் போகும் சேதனன் ஒருவனைப் பரமபதத்தில் உள்ள நித்ய சூரிகள் விரஜா நதியளவும் வந்து வரவேற்பது போன்றிருந்தது.

அந்தாமம் சீர் அரங்கமதாய்
அரையர்க்கு இளையாழ் வார்க்குஎதிரே
வந்தார் நித்தர் திரளாகி
மற்றையவரே முத்தர்களாய்ச்
சந்தார் பொழில் சூழ் வடவாறே
சாற்றற்கரிய விரசை யதாய்
நந்தா வளங்கள் மிகஓங்கும்
ஞானமிக்கார்க்கு எதிர்கொண்டார்.

இவ் வண்ணம் இவர்கள் எதிர்கொள வருதல் அறிந்த இராமாநுச கோஷ்டியிலுள்ளார் உள்ளம் நெகிழ்ந்து பூரித்தனர். இராமாநுசரும், அரையரும், கூரத்தாழ்வானும், முதலியாண்டானும் வடதிருக் காவிரியில் தீர்த்தமாடி தத்தம் திருப் பரிவட்டங்களைத் தரித்து, நாரணன் தன் ஈராறு நாமம் ஓதித் திருமண் காப்பிட்டு, தம் மார்பங்களிலே திருமணி வடம் தரித்து சேனை முதலியார் கோஷ்டியை நோக்கி எழுந்தருளினர். இவர்கள் வருதல் கண்டு ... ... ... ... தென் கரையில்,

தூரியம் முழங்கக் கொம்பு காளங்கள்
துந்துமி குடமுழவுஅதிர "
" பேரிகை தாளம் மத்தளம் சின்னம்
பேரணி நிறைத்து எதிர் முழங்கக்
கூரியவிழியார் புடைவர அமரர்
சூலவுநன் மலர்மழை பொழியச்
சீரிய கவிஞர் பாணர்கள் ஏத்தச்
சேனையர் கோன் இணை அடியில்
ஏரியல் மலர் இட்டு இறைஞ்சினன்
புவியில் எதிகளுக்கு அரசனும் எம்மான்".

தென் கரை சேர்ந்த இராமாநுசர் சேனை முதலியாரைச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். மற்றையவரும் வணங்கிய பின் அந்த கோஷ்டி கோயிலை நோக்கி எழுந்தருளிற்று. இராமாநுசர் " திடமுடையமரர் போற்றும் திட்கொடி மதிலைக் கண்டார், தடமுடைக் கரங்கள் கூப்பித் தாழ்ந்துறப் பணிந்தார் ". நேரே " கொடியணி நெடுமதில் கோபுரம் குறுகினர்" என்றபடி திருக் கோபுரத்தைக் கிட்டி வணங்கி உள்புக்கார். இங்ஙனம் இராமாநுசர் திருவரங்கம் வந்தநாள் சகவருஷம் 940 விக்ரம வருஷம் வைகாசி மாதம் சுத்தபௌர்ணமி என்று கோயிலொழுகு கூறும். அவ்வாறாயின் இராமாநுசருக்கு அப்போது வயது இருபத்து மூன்று.

" திருமலைதந்தான் வீதியே முதலாச்
சிறந்தசீர் வீதிகள்தோறும்
பொருவரும் புகழான் வலம்செய்து
ஆங்கதனுள் பூசுரர் துதியொடும்ஏகி"

தாமோதரன் திருக்கோபுரத்தைச் சாஷ்டாங்கமாக வணங்கி திருமாலை தந்த பெருமான் திருவீதி முன்னாகப் புகுந்து வலமாக வந்து திருவிக்கிரமன் திருவீதி வழிசென்று பெரிய பலிபீடத்தருகே தாழ்ந்து வணங்கி, சேவிக்கும் முறைப்படியே முதலில் மானுடமடங்கலைத் திருவடிதொழுதார். பின் திரு

வரங்க நாயகியைச் சேவித்துச் சந்திரபுஷ்கரணியிலே தீர்த்தமருந்தி உள்புக்கார். உள்ளே அரங்கன் "கடைத்தலையிருந்து வாழும் சோம்பர்" களான நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களையும் மற்றும் சுற்றிலுமுள்ள எம்பெருமான்களையும் சேவித்தார். பின் "அணியனார் செம்பொனாய அருவரையனைய கோயில்" ஆகிய அணியரங்கன் திருமுற்றத்தே தண்டனிட்டுப் புகுந்து வலம் வருகையில் ஓமெனுமோ ரெழுத்துருவான திவ்ய விமானத்தைத் தொழுது சேனைக்கிறையை வணங்கி அழகிய மணவாளன் திருமண்டபத் தேற எழுந்தளினார்.

அங்கே "வந்தவர் எதிர் கொள்ள மாமணி மண்டபத்து" என மாறன் அருளியபடி முக்தனாய்ப்போருமவனை ஸ்ரீவைகுண்டநாதன் திருமாமணி மண்டப முகப்பிலே எதிர் கொள்ளுமாபோலே "புண்டரிகத் திருமால் பூசுரர் கைத்தலமேல் கொண்டு எதிர் எய்தி" அழகிய மணவாளன் திருமண்டபத்தளவாக எழுந்தருளிவர இராமாநுஜர் விழுவது, எழுவது, தொழுவது, அழுவதாக ஸேவித்தார். பின் பெருமாள் திருப்பள்ளியறை நோக்கி எழுந்தருளப் பின்சென்று, "அரங்கந்தன்னில் பாம்பணைப் பள்ளியிலே" "திருநன்மார்பும் மரகத உருவும் தோளும் தூய தாமரைக் கண்களும் துவரிதழ்பவளவாயும் ஆயசீர் முடியும் தேசுமாய்" கிடந்த "கடல் விளங்கு திருமேனியம்மான் தன்னைக் கண்ணாரக் கண்டுஉகந்து," அவ்வின்ப வெள்ளத்தே ஆழங்காற்பட்டு நிலையாதவராய்" மனத்தூணைப் பற்றி நின்று வாயார வாழ்த்தி" ப்ரேமபரவசராய் "அமலனாதிப் பிரானிற்" படியே அடிமுடியாக அங்க அங்கமாக எம்பெருமானைச் சேவித்து, "அரங்கத் தமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்ற படி அவ்வழகிலே நிலைத்த நோக்கராய் அவ்வழகனைப் பல்லாண்டு பாடிக்காப்பிட்டார். தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும் (கைமுதலின்மையையும்) அவன் பரந்த கருணையையும் நோக்கி,

"வாக்கொடு மனமும் கடந்தாய் வணக்கம்
வாக்கினுள் மனத்தினுள் வதிவாய் வணக்கம்
வானொடு மண்வளர் செல்வா வணக்கம்
வான்பெரும் கருணையங் கடலே வணக்கம்"
"ஒரு நெறியில்லேன் உயிர் உணர்வில்லேன்
உன்னடியன்றிவே றுய்வகை அறியேன்
தெரிவரும் அளப்பரும் சீர்த்தியாய் அடியன்நின்
திருவடி சரணம் திருவடியே சரண்."

என்று நாத்தழு தழுக்கக் கூவிச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்து தன்னையும் மறந்தவராய்ப் பெருமான் திருவடிகளிலே ஊன்றிய மனத்தராய் நின்றார். இப்படி உள்ளம் உருகிநின்ற இராமானுசனைப் பெரிய பெருமாள் மிகவும் கிருபை பண்ணி "செம்மாபாத பொற்புத்தலை சேர்த்து" என்கிறபடியே தமது தேனே மலரும் திருவடித் தாமரைகளாகிய துயரறு சுடரடிகளாலே இவரது உத்தமாங்கத்தை (தலையை) அலங்கரித்தருள இவரும் அப்பாதபங்கயமே தலைக்கணியாக அத்தாளிணைக்கீழ் வாழ்ச்சி" யுற்றவராய் அதிசய ஆனந்தத்தே மூழ்கினார். பின்னர் நம்பெருமாள் அந்த நற்பெருந்தொண்டரைத் தம் தாமரைத் தடங்கண்களால் நோக்கித் தம்சோதிவாய் திறந்து

"முன்னை நான்மறைகள் வல்லாய்
முழங்கு நீர் சூழ்ந்தமண்ணும்
மின்னொளி விசும்பும் நம்சீர்
விபூதிகள் இரண்டும் இன்றே"
"பொதுவறத்தந்தோம் நீர் இப்
பொற் புறும் நமது வீட்டில்
இது அது உது எனுதே யாவையும்
துறைகள் தோறும்
கது மென நோக்கி மற்றக்
காரியமனைத்தும் காண்பீர்"

இராமாநுசரே! பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் என்கிற நம்முடைய உபய விபூதி ஐச்வர்யத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்திருக்கிறோம். ஆகையால் இன்று முதல் நீர் இவற்றுக்கு "உடையவர்" என்னும் பட்டத்தை வஹித்து நம் கார்யத்தையெல்லாம் ஆராய்ந்து நடத்தும்" என்று அருளிச் செய்ய இராமாநுசரும் பெருமாள் தீர்த்தப் பிரசாதமும், அவன் சூடிக்களைந்த தண்டுழாய் விரைநாறு கண்ணித் திருமாலைப் பிரசாதமும், பொலிந்து நின்ற பொன்னங் கழலான ஸ்ரீசடகோபனையும்" வானவர் நாட்டையும் நீ கண்டுகொள் என்னும் படி உபய விபூதி ஐச்வர்யத்தையும் பிரசாதிக்கப் பெற்றார்.

(தொடரும்)

# ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள்

திரு. R. ஸ்ரீனிவாசராகவாசாரியார், M.A.,B.O.L., சென்னை.

## தோற்றுவாய் :

பாரத தேசத்தில் வைஷ்ணவமதம் பல பெரியோர்களால் பல வகைகளில் பரப்பப்பட்டு வந்திருக்கிறது. அதனால் வைஷ்ணவமதம் பல கிளைகளாகப் பிரிந்திருக்கிறது. தென்னாட்டில் ஸ்ரீ ராமானுஜரால் பரப்பப்பட்டு விசிஷ்டாத்வைதம் என்ற மறுபெயருடன் விளங்கும் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தைப் பரப்பிய ஆசார்யர்களைப்பற்றிய வரலாற்றையே இங்கு நாம் குறிப்பிடப் போகிறோம்.

நல்லறிவு, நன்னடத்தை, பற்றுதலின்மை (ஜ்ஞாநாநுஷ்டான வைராக்யம்) ஆகிய இம் முக்குணங்கள் உடையவர்களாய், தங்கள் வாழ்நாளில் மத நூல்களையியற்றியும் மாணாக்கர்களைப் பயிற்றுவித்தும் மதத்திற்குத் தங்களாலான உதவியைச் செய்து கொண்டு வாழ்ந்து வந்தவர்களையே நாம் இங்கு ஆசார்யர்கள் என்று கூறுகிறோம். அத்தகைய பெரியார்களைப்பற்றிய உண்மை விவரங்களைப் பிற்காலத்தவர்கள் தெரிந்துகொள்ள விரும்புவது இயல்பு. அவ்வாறு தெரிந்து கொள்வதனால் அத்தகைய பெரியோர்களைச் சார்ந்த மதத்தை நாம் சேர்ந்துளோம் என்ற பெருமையும் ஸாத்வீக கர்வமும் ஊக்கமும் ஒவ்வொருவருக்கும் உண்டாகிறது, ஆதலின் அப் பெரியோர்களைப் பற்றிய உண்மைகளை இப்பொழுது நமக்குக் கிடைக்கக்கூடிய சில நூல்களின் உதவிகொண்டும், பெரியோர்கள் வாயிலாகப் பரம்பரையாய் வரும் ஐதிஹ்யங்களின் உதவி கொண்டும் விளக்குகிறோம்.

வைஷ்ணவப் பெரியார்களில் ஆழ்வார்கள் என்றும் ஆசார்யர்கள் என்றும் இரு பிரிவினர் உளர். அவர்களில் ஆழ்வார்கள் என்பார் இறைவனிடத்தில் தங்களுக்குள்ள பக்தியின் முதிர்ச்சியால் உலகப் பற்றைவிட்டு இறைவனை நினைந்து உள்ள முருகி ஆடிப் பாடித்தொழுது தொண்டு செய்து நற்கதி அடைந்தவர்கள். அத்தகையவர்களிலும் தமிழில் நூல்களியற்றியவரே இப்பொழுது ஆழ்வார்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் பதின்மூவர். ஸ்ரீதேசிகன் அவர்களின் தொகையைத் தாமியற்றிய அதிகாரஸங்கிரகம் என்னும் நூலின் தொடக்கத்தில்,

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தண்
பொருநல்வரும் குருகேசன் விட்டுசித்தன்

துய்யன் குலசேகரன் அம்பாணநாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்தசோதி

வையமெலா மறைவிளங்க வாள்வேலேந்தும்
மங்கையர்கோன் அமுதர்இவர் மகிழ்ந்துபாடும்

செய்யதமிழ்மாலைகள் நாம்தெளிய வோதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே

என்றும்,

அன்பர்க்கே யவதரித்த ஆயன் நிற்க
அருமறைகள் தமிழ்செய்தான் ஆணைகொண்டு

துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகாண் துணிவார்கட்கே

என்றும் கூறுகின்றார். பிரபந்த ஸாரம் என்னும் நூலிலும் இப் பதின்மூவரைப்பற்றித் தனித்தனி யாக ஒவ்வொரு பாசுரம் இயற்றிவிட்டு, நூல் முடிவில்,

“ வையகமெண் பொய்கைபூ தம்பேயாழ்வார்
மழிசைப்பிரான் மகிழ்மாறன் மதுரகவி
பொய்யிற்குல சேகரனேர் விட்டுசித்தன்
பூங்கோதை தொண்டரடிப்பொடி பாணழ்வார்
ஐயனருட்கலியன் எதிராசர்தாசர்
ஆறிருவரோ டொருவர் அவர்கள் செய்த
துய்யதமிழ் இருபத்துநான்கிற் பாட்டின்
தொகை நாலாயிரமுமடியேன் நல்வாழ்வே”

என்ற பாசுரத்தின் வாயிலாகப் பதின்மூவரே யென்று கூறுகின்றார். ஆனால் ஆழ்வார்கள் பதின்மர் என்றும் பன்னிருவர் என்றும் கூறும் கொள்கைகளும் உள. சிற்சில காரணங்களைக் கொண்டு சிலரைவிட்டுப் பேசின வார்த்தை யவை.

இவ் வாழ்வார்கள் பொதுவாக ஆசார்யர்க ளாகக் கருதப்படுவதில்லை. ஆயினும் இவர் களில் ஒருவராகிய நம்மாழ்வார் ஆசார்யராக வும் கருதப்படுகிறார். ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் எல்லாம் வல்ல இறைவனாகிய திருமால் முதல் ஆசார்யனாகவும், அவர்க்கடுத்துத் திருமகள் இரண்டாவது ஆசிரியை யாகவும், பிறகு விஷ் வக்ஸேனர் (ஸேனை முதலியார்) மூன்றாவது ஆசார்யனாகவும் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். திருமால் திருமகள் ஸேனை முதலியார் இம்மூவ ரும், முறையே ஆதியில் வேதம் முதலிய நூல் களை நான்முகன் முதலியோருக்கு உபதேசித் தல் முதலிய செய்கைகளால் ஆசார்யர்கள் ஆயினர். இம் மூவருக்குப் பிறகு பொதுவில் நான்காவது ஆசார்யராகவும் இந்நிலவுலகில் முதல்வைஷ்ணவ ஆசார்யராகவும் நம்மாழ்வார் கருதப்படுகிறார். அவரைப்பற்றிய உண்மை வரலாறுகளை “ ஆழ்வார் ” என்ற தலைப்பில் பிறகு கூறப் போவதால் இங்கு விடுகிறோம். நம்மாழ்வாருக்கு வடமொழியில் சடகோபன் என்று பெயர். அவருக்குப் பிறகு ஸ்ரீமந்நாத முனிகள் ஐந்தாவது ஆசார்யராகக் கருதப்படு கிறார். ஆயினும் திருமால் திருமகள் ஸேனை முதலியார் மூவரும் இந் நிலவுலகைச் சேர்ந்த வர் அல்லர் ஆதலால், நம்மாழ்வார் ‘ஆழ்வார்’ என்ற முறையில் பெருமை பெற்றுச் சிறப்புற விளங்குவதனாலும் அவர்கள் நால்வரையும் விட்டு, ஸ்ரீமந்நாதமுனிகளையே ஸ்ரீவைஷ்ணவ (விசிஷ்டாத்வைத) மதத்தில் முதல் ஆசார்ய ராகக் கொண்டாடுகிறார்கள். ஸ்ரீ தேசிகனும் விசிஷ்டாத்வைத வைஷ்ணவ மதம் (நாதோ பஜ்ஞம் ப்ரவ்ருத்தம்) நாதமுனிகள் தொடங்கி வளர்ந்தது என்று குறிப்பிடுதல் காண்க.

## ஸ்ரீமந்நாதமுனிகள்

இவரைப்பற்றிய வடமொழித் தனியன் (சிறப்புப்பாயிரம்) ஒன்று பின்வருமாறு :

“ ஜ்யேஷ்டே — நுராதாஸம் பூதம்
வீரநாராயணே புரே
கஜவக்த்ராம் சமாசார்யம்
ஆத்யம் நாதமுனிம் பஜே ”

இத்தனியன்தான் வழிகாட்டி. இத்தனி யன் ஸ்ரீ பரகால மடத்தை யலங்கரித்திருந்த ஸ்ரீத்ருதீயப்ரஹ்மதந்த்ர ஸ்வாமியால் தம்முடைய குருபரம்பராப்ரபாவம் என்கிற நூலில் கையாளப் பட்டிருக்கிறது. இது அவரே இயற்றியது என்று சிலரும் மேற்கோளாகக் கொள்ளப் பட்டது என்று மறு சிலரும் கூறுகின்றனர். இத் தனியனிலிருந்து ஸ்ரீமந்நாதமுனிகள் ஆனி மாதத்தில் அனுஷ நக்ஷத்ரத்தில், வீரநாராயண புரம் என்னும் ஊரில், விஷ்வக்ஸேன (ஸேனை முதலியா)ருடைய பரிஜனங்களில் ஒருவராகிய கஜவக்த்ரர் (யானை முகத்தார்) என்னும் நித்ய ஸூரியினுடைய அம்சமாக அவதரித்தார் என் றும் அவர் ஆசார்யர்களில் முதல்வர் என்றும் ஏற்படுகிறது.

யானை முகத்தார் என்றும், ஆசார்யர்களில் முதல்வர் என்றும் கூறுவதிலிருந்து சைவர்கள் கஜானனராகிய விநாயகரை முதலில் துதிப் பதுபோல் ஸ்ரீவைஷ்ணவர்களும் முதல்வரான நாதமுனிகளை கஜவக்த்ராம்சம் என்று கொண் டிருப்பது கவனித்தற்குரியது. மேலும் இத் தனியனுக்கு விளக்கம் கொடுக்கும் ஸ்வாமிகள் ‘வீரநாராயணபுரத்தில் நித்யவாசம் பண்ணிக் கொண்டிருந்த இயற்கையிலே குற்றமற்ற ஸ்ரீ சடமர்ஷண குலத்தைச் சேர்ந்த சொட்டைக் குலம் (சொட்டைநம்பி குலம்) என்ற பிரிவைச்

சேர்ந்தவரும் சொட்டை குலத்தரசு என்று புகழ் பெற்றவருமாகிய ஈச்வரமுனிகள் என்பவருக்குக் கலியுகம் 3685 சோபக்ருத் வர்ஷத்தில் ஆனி மாதத்தில் அனுஷ நக்ஷத்ரத்தில் ஸ்ரீமந்நாத முனிகள் அவதரித்தார் என்று குறிப்பிடுகிறார். தனியனிலிருந்து கிடைக்கும் பகுதியினும் மிகுதியாகவும் ஆனால் நமக்கு மிகவும் தேவையாகவும் கொடுக்கப்பட்ட விளக்கம் நூலாசிரியராகிய ஸ்வாமிகளுக்குப் பரம்பரை வாயிலாகக் கிடைத்திருக்க வேண்டும். வீர நாராயணபுரம் தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரத்திற்குச் சிறிது தூரத்தில் உள்ள ஒரு சிறு வைஷ்ணவ ஸ்தலம்.

ஸ்ரீமந்நாத முனிகள் சிறு பிராயத்திலேயே அவருடைய தகப்பனாராகிய ஈசுவர முனிகளால் உபநயனம் செய்விக்கப்பட்டு வேதம் வேதாங்கங்கள் யாவையும் நன்குகற்பிக்கப்பட்டார். இயற்கையிலேயே திருமாலிடம் பக்தி பூண்டிருந்த ஸ்ரீமந்நாத முனிகள், வைஷ்ணவ மதத்தைச் சேர்ந்த தம் குடும்பம், உறவினர், மஹாவிஷ்ணுவின் ஆலயம், உத்சவாதிகள், ஆலயத்தைச் சுற்றியுள்ள வைஷ்ணவ அக்ரஹாரம் முதலிய சூழ்நிலை காரணமாகப் பேரன்பு பூண்டு நன்னடத்தையுடன் ஒழுகிவந்த ஒரு தூய ப்ரஹ்மசாரியாக விளங்கி வந்தார்.

வங்கிபுரத்தாச்சி யென்னும் பெரியார், தம் பெண்ணாகிய அரவிந்தப்பாவை யென்பவளை ஸ்ரீமந்நாத முனிகளுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். தம் யௌவனப் பருவத்தில் திருமணம் ஆகியிருந்தும் நாதமுனிகள் அளவு கடந்து சிற்றின்பத்தில் மூழ்கின வரல்லர். சில பெரியோர்களைப்போல் இல்லறத்தை வெறுத்தவருமல்லர். தம்முடைய அனுஷ்டானங்களுக்கும் சாஸ்த்ரங்கள் பயிலுதல் பயிலுவித்தல் முதலியவைகளுக்கும் சிறிது மிடையூறின்றி இல்லறத்தையும் ஒழுங்காக நடத்திவந்தார். மேலும் நாதமுனிகள் யோக சாஸ்த்ரம் பயின்று நாள்தோறும் யோகம் செய்துவந்து பெரிய யோகியாகவும் சிறுவயதிலேயே திகழ்ந்தார். அவர் தம் தகப்பனாரிடத்தில் பிற சாஸ்த்ரங்களைப் பயின்றது போல் யோக சாஸ்த்ரத்தையும் பயின்றார் என்று கூறுவதற்குப் போதிய சான்றில்லை. பிற ஆசிரியர்களிட மிருந்து பயின்றுமிருக்கலாம். உரிய காலத்தில் நாதமுனிகளுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. அக்குழந்தைக்குத் தம் தகப்பனார் பெயராகிய ஈச்வரமுனி யென்ற பெயரையே யிட்டு, உரிய காலத்தில் செய்ய வேண்டிய உபநயனம் முதலிய சடங்குகளையும் செய்வித்து சாஸ்த்ரங்களையும் பயிலுவித்துத் தாமறிந்து பயின்று வந்த யோக மார்க்கத்தையும் பயிலுவித்தார். நாதமுனிகள் திருக்குமாரரான ஈச்வரமுனிக்கு உண்மையான பெயர் ஈச்வரபட்டாழ்வான் என்று ஸ்ரீதேசிகனுடைய குருபரம்பராஸாரத்திலிருந்து தெரிய வருகிறது. ஸ்ரீதேசிகன், காலத்தில் முற்பட்டவராதலின் அவர் கூறும் பெயரே உண்மையான பெயர் என்று நாம் கருத வேண்டும். பிற்காலத்தில் ஈச்வரமுனியென்றும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதை ஸ்ரீப்ரஹ்மதந்த்ர ஸ்வாமிகள் தம் குரு பரம்பரா ப்ரபாவத்தில் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று நாம் ஊஹிக்கவேண்டியிருக்கிறது. "யோகதத்வம் நாதமுனிகளோடு அஸ்தமித்துவிட்டது. பின்னர் அது தொடர்ந்து பரவவில்லை", யென்று சில பெரியோர் கூறுவர். அவரோடு அவர் பயின்று வந்த யோக மார்க்கம் முடிந்து போயிற்று என்று எங்கும் கூறப்படாததோடு, அவர் தம் பிள்ளையாகிய ஈச்வர பட்டாழ்வானுக்குக் கற்பித்தார் என்றும் குரு பரம்பரா ப்ரபாவம் கூறுகிறது. சிலர் முனி யென்ற பெயர் துறவிகளுக்குரியது. இல்லறத்திலிருப்போர்க்கு அது உரிய பெயரன்று என்று கருதுகிறார்கள். அது மிகவும் தவறு. முனி யென்ற சொல்லுக்கு மனனம் (த்யானத்திற்காகச் சிந்தனம்) செய்வது என்பதே பொருளாதலினாலும், அத்தகைய சிந்தனம் இல்லறத்தாராலும் செய்யப்படலாமாதலினாலும், இங்கு நாதமுனிகள் முதலியோர் இல்லறத்திலேயே முனி யென்ற பெயருடன் அழைக்கப்பட்டார்கள். யோகிகளை முனிகள் என்றழைப்பது வழக்கு. ஆதலின் ஈச்வரமுனி, நாதமுனி, ஈச்வரமுனி யாமுனமுனி என்ற இப் பெயர்களால் இவர்கள் பரம்பரையாக யோகிகளா யிருந்தனர் என்று ஊஹிப்பதற்கும் நாதமுனிகளின் திருக்குமாரரான ஈச்வர (பட்டாழ்வான்) முனிகள் தாம் தம் தந்தையிடமிருந்து கற்ற யோகத்தைத் தம் பிள்ளையான யாமுனமுனிகளுக்கு (ஆளவந்தாருக்கு) கற்பித்திருக்கிறார் என்று கருதுவதற்கும் இடமுண்டு.

❋

(தொடரும்)

# கண்ணுயிருப்பவன் கண்ணன்

திரு. சிரோன்மணி. V. S. ஸ்ரீநிவாஸாசார்யார், சென்னை.

கண்ணன் என்பதற்குக் "கண்ணாக இருப்பவன்" என்று ஒரு பொருள். இதன் கருத்தை, "மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் கண்ணுயிருப்பவன்" "சக்ஷுர் தேவாநாம் உத மர்த்யாநாம்" என்ற தொடரால் வேதம் ஒருவாறு விளக்கியது.

ஆழ்வாரும், இவ்வேத வாக்கியத்தின் கருத்தை நிருபிக்கிறவர் போல,

**கண்ணாவான் என்றும், மண்ணோர் விண்ணோர்க்குத் தண்ணார்வேங்கட, விண்ணோர்வெற்பனே.**

என்ற பாசுரத்தின் மூலம், "குளிர்ச்சி பொருந்திய திருவேங்கடம் என்று பிரஸித்தமான விண்ணவர்க்குரிய மலையில் எழுந்தருளியிருப்பவன், பூலோகத்தில் வாழும் மநுஷ்யர்களுக்கும், வானுலகிலுள்ள தேவர்களுக்கும் கண்ணாக இருப்பவன்" என்று கூறியிருக்கிறார். இதனால் திருவேங்கடமுடையான் "கண்ணன்" என்ற சொற்குப் பொருளாவான் என்பது ஒருவாறு உணர்த்தப்பட்டதாயிற்று.

இவ்வாழ்வாரது இன்னருள் கொண்டு பன்னருங் கவிபாடும் கம்பநாடர், மேற்கூறிய வேதவாக்கியமும், ஆழ்வார் அருள்வாக்கும் விளக்கிய "கண்ணன்" சொற்பொருளை இராமாயணப் பெருங்காப்பியத்தில் மிக அழகாகச் சித்தரித்துக் காட்டியிருக்கிறார். அதையும் ஈண்டு இணைத்து நோக்குவது சாலவும் இயைபுடைத்தாகும்.

கோசிக முனிவருடன் மிதிலாபுரி சென்ற இராமபிரான்; சினவிடையோன் சிலையிறுத்து, மேனுணிப்புடன் நிற்குமளவில் சனகமகாராசன் இராமபிரானைப் பார்த்து "நீர், வில்லிறுத்த ஆயாசம் தீர என் பெண்ணைத் திருமணம் புணர்ந்து அம் மெல்லியல் தோள் தோயும்" என்று வேண்டிக் கொண்டான். அதற்கு இராமபிரானும்; "நாங்கள் பெரியோர்களுக்கு அடங்கி நடப்பவர்கள். ஆகையால் எம் ஐயரிடம் கேட்க வேணும்" என்று முகமன் கூறினான். அவ்வாறே சனகமன்னனும், தசரத சக்கரவர்த்திக்கு ஓலையும் தூதும் போக்கி அவர்களை வரவழைத்தான். அவர்களும் மிதிலையை நெருங்கினர். அஃதறிந்த ஜனகனும் அவர்களை எதிர்கொண்டு அழைக்க நகர்ப்புறம் குறுகுகிறான். இராமபிரானும் தன் தந்தையைக் காணவிழைந்து அவண் ஏகினான். அதுசமயம் சனகனும் சக்கரவர்த்தியும் இராமபிரானை நோக்கி, "இராமா! நீ பரிவாரங்கள் புடைசூழ முன்னால் செல்வாயாக. நாங்கள் பின்னால் வருகிறோம்" என்று சொல்லி இராமபிரானை முன்னே போகவிட்டனர். இராமபிரானும், மிகுந்த கோலாகலத்துடன் தம்பியர் புடைசூழவும், பரிவாரங்கள் உடன் செல்லவும், வேகமாகத்தாவிச் செல்லும் குதிரைகள் பூண்ட இரதத்தில் ஏறி மாடமாளிகை சூழ்ந்தழகாய பொன்னெடு வீதியில் உலாச் (பவனி) சென்றான்.

அப்பொழுது அங்குள்ள ஜனங்கள் விண்ணிலும் மண்ணிலும் நின்றுகொண்டு இராமபிரானது மைப்படி மேனியைக் கண்ணிமையாது கண்டு கொண்டிருந்தனர் என்பது வரலாறு. இந்நிகழ்ச்சியைச் சித்தரிக்க முனைந்த கம்ப நாடர், "அங்குள்ள ஜனங்கள் அனைவர்க்கும் இராமபிரானே கண்ணாகவும்—கண்ணுக்கு விஷயமாகவும் இருந்தான் என்றும், இதைப்பார்த்தால் எல்லாவற்றினும் உயர்ந்தவர்களான வேதபுருஷனும் ஆழ்வாரும் தனக்குச் சாற்றிய "கண்ணன்" என்ற திருநாமத்திற்கு இராபிரான் தானேவியாக்கியானம் செய்து அதாவது "மண்ணவர் விண்ணவர் யாவருக்கும் கண்ணாக இருப்பவன் நான் தான்" என்று உணர்த்துவது போல் இருந்தது என்றும், பொருள்படும்படி அற்புதமாக ஒரு கவிதையில் கவினுறச் சித்தரித்துக் காட்டியிருக்கிறார்.

"வீதிவாய்ச் செல்கின்ருன் போல் விழித்திமை [யாது நின்ற
மாதரார் கண்களூடேவாவு மான்தேரிற் செல்வான்
யாதினும் உயர்ந்தோர்தன்னை யாவர்க்கும் [கண்ணனென்றே
ஓதிய பெயர்க்குத்தானே உறுபொருளுணர்த்தி [விட்டான்."

என்பது அக்கவிதையாகும். இக்கவிதையில் "யாவர்க்கும் கண்ணனென்றே ஓதியபெயர்க் குத்தானே உறுபொருளுணர்த்தி விட்டான்" என்ற தொடர் நுனித்து உணர்தற்குரியது. இவ்வாறு எல்லாருக்கும் கண்ணுக இருப்பவன் என்பதுபற்றி இராமபிரான் கண்ணுகக் கூறப் படலானுன் என்பதை அறிந்தோம். இதே கருத்தை மேலும் சில இடங்களில் கம்பநாட்டாழ்வாரே விளக்கிக் கூறி யுள்ளார். அவற்றையும் இங்குக்காண்போம்.

கைகேயி, தன் கணவனிடம்,

"ஏய வரங்கள் இரண்டின் ஒன்றினுல், என்
சேய் உலகாள்வது, சீதைகேள்வன் ஒன்ருல்
போய் வனமாள்வது"

என்று தன் கருத்தைப் புகன்று நின்ற பொழுது, மன்னவன், இராமபிரானிடமுள்ள அளவு கடந்த பரிவால் ஒரு மொழி விளம்பினுன்.

"நின்மகனுள்வான் நீஇனிதாள்வாய் நிலமெல்லாம்
உன்வயமாமே ஆளுதி தந்தேன் உரைகுன்றேன்
என்மகன் என்கண் என்னுயிர் எல்லா உயிர்கட்கும்
நன் மகன் இந்த நாடு இறவாமை நய என்ருன்"

என்பது அம்மொழியாகும்.

இதில், இராமபிரான் தனக்குக் கண்ணுக இருப்பவன் என்ற கருத்தில் 'என்கண்' என்று மன்னன் கூறியிருப்பது எண்ணிப்பார்த்தற் குரியது. அவ்வாறு பார்த்தால், "இராமபிரான் என்னைவிட்டுப் பிரியில் நான் பார்வை இழந்து கண்ணற்றவனுகி விடுவேன்" என்ற பொருள் மன்னனுக்கு உளதாக யாவரும் அறியக் கூடியதாகும்.

மேலும், பின்பு நடந்த நிகழ்ச்சியும் இக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறது காண்மின்.

இராமபிரான் தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீத்து வனத்திடைச் சென்ற போழ்து மன்னன் தன் பார்வை இழந்து தவிக்கிற நிலையால் இக் கருத்து வலியுறுத்தப் பட்டதாகிறது. இந் நிகழ்ச்சியை வான்மீகிமுனிவர் கௌசலை யாரிடம் மன்னன் கூறுவதாகக் காட்டும் சுலோகத்தால் நன்கு உணர்த்தியிருக்கிருர்.

அச்சுலோகமும் அதன்பொருளும் பின்வருமாறு காணத்தகும்.

"ராமம்மே அநுகதாத்ருஷ்டி: அத்யாபி நநிவர்த் [தநே
நத்வா பச்யாமி கௌசல்யே ஸாது மாபாணி [நாஸ்ப்ருச"

'ஏகௌசலே! இராமபிரானைப் பின் தொடர்ந்து சென்ற என் கண், இன்னமும் திரும்பவில்லை. ஆகையால் நீ என் அருகில் இருந்தும் உன்னை நான் காண்கிறேனில்லை. உனது கையினுல் என்னை நீ நன்ருகத்தொடு" என்பதாகும். கம்பநாடரும் தசரதனுக்கு இராமபிரானேகண். அவனைத்தவிர வேறு விழிக்கும் கண் இல்லை என்பதை "விழிக்கும்கண் வேறில்லா என் கான் முனை" என்றும் "கண்ணுள் மணி போல் மகவு" என்றும் தயரதன் வாக்கால் பின்னும் உணர்த்தியிருக்கிருர். ஆகவே இக் கூறிய ஆதாரங்களால் இராமபிரான் கண்ணுக இருப்பது பற்றிக் கண்ணுக அழைக்கப் பட்டான் என்பது நிரூபிக்கப்பட்டது. ஆழ்வாரும் மேற்கூறிய கருத்தை அதாவது கண்ணுக இருப்பது பற்றிக் கண்ணன் என்று அழைக்கப் படுபவன் என்பதை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிருர். அப்பாசுரங் களும் அவற்றிற்கு ஆசார்யர்கள் கூறும் பொருளும் அறியப்பட்டால் இக்கருத்துத் தெளிவாகும்.

"கண்ணே உன்னைக் காணக்கருதி என் நெஞ்சம்
எண்ணே கொண்ட சிந்தையதாய் நின்றியம்பும்"

என்பது பாசுரம். "கண்ணே — எனக்கு த்ருஷ்டியானவனே. காண்கைக்கு சாதனமான கண்ணும் காணப்படும் விஷயமும் அவன் என்கிருர். சக்ஷுச்சத்ரஷ்டவ்யஞ்ச நாராயண: என்னக் கடவதிறே" என்றது வ்யாக்யானப் பகுதியாம். இங்கு "கண்ணும் கண்ணுக்கு விஷயமானவனும் நாராயணன்" என்று கூறும் மறைப் பொருளையே இப்பாசுரத்தில் ஆழ்வார்,

"கண்ணே! என்று விளியால் கூறியிருக்கிறதாக விளக்கப்பட்டு இருக்கிறது. கூர்ந்து கவனித்தற் குரியது, மேலும்,

"கொண்டல் வண்ணு சுடக் கூத்தா வினையேன்
[கண்ணு! கண்ணு!"

என்ற பாசுரத்திலும் இக்கருத்து உரைக்கப் பட்டுள்ளது. இங்கு கண்ணு கண்ணு என்ற இரண்டு சொற்களில் முதலில் உள்ள கண்ணு என்பதற்குக் கண்ணுக இருப்பவன் என்றும் இரண்டாவதற்கு அப்பொருளை உடையவன் என்றும் கூறி இருக்கும் விளக்கம் நன்கு அறிவுறுத்தும். "த்ருஷ்டிபூதனை கண்ணனே!" என்பது அவ்விளக்கமாகும்

ஆக இதுவரையில் கூறிய வாற்ருல் கண்ணுக இருப்பவன் என்ற பொருளில் கண்ணன் எனும் சொல்வழங்கிவரும் என்பதை உணர்ந்தோம்.

## 2. நிர்வாஹகனு யிருப்பவன் கண்ணன்.

இனி நிர்வாஹகன் என்ற பொருளில் இச்சொல் வழங்குமாற்றைக் காண்போம். நிர்வாஹகன், ரக்ஷகன், தலைவன் என்பன பெரும்பான்மை ஒரேபொருளுடைய சொற்களே. இச்சொற்களால் உணர்த்தப்படும் பொருளைக் "கண்ணன்" சொல் கூறும் என்பதற்குச்சில ஆதாரங்களைக் காண்போம்.

நம் தமிழ் மொழியில் வழங்கும், 'திருடு' என்னும் பொருளுணர்த்தும் களவு என்ற சொல், வகர இடை நிலையும் அன்விகுதியும் பெற்றுக் கள்வன் என்றும், அன் விகுதி மட்டும் பெற்றுக் கள்ளன் என்றும் ஆகிறுப் போல தலைமை, ரக்ஷகம், நிர்வாஹம் என்ற பொருளுணர்த்தும் "கண்" என்ற சொல்லும் அகரச்சாரியையும் அன்விகுதியும் பெற்றுக் கணவன் என்றும், அன்விகுதிமட்டும் பெற்றுக் "கண்ணன்" என்றும் வழங்கிவருகிறது என்பதை உணரவேண்டும். உணரவே கள்வன், கள்ளன் என்ற இருசொற்களும் ஒரேபொருளை உணர்த்து மாறு போல இக் கணவன், கண்ணன், என்ற இரு சொற்களும் ஒரே பொருளை உணர்த்தும் என்பது போதரும். போதரவே, கணவன், என்ற சொல், குடும்பத்தலைவன், குடும்பரக்ஷகன் குடும்ப நிர்வாஹகன் என்ற பொருளில் எப்படி வழங்குவது தெளிவாகப் புலனுகிறதோ அப்படியே கண்ணன் என்ற சொல்லும் ஆழ்வாரது அருளிச்செயல்களில் பல இடங்களில் அப்பொருளில் வழங்கப்பட்டிருக்கிறது தெளிவாகும். இதனைச் சில பாசுர மேற்கோள்களால் இனிக்காண்போம்.

"மண்ணும் விண்ணும் எல்லாம் உடனுண்ட நம்
கண்ணன் கண்ணல்லது இல்லை ஓர் கண்ணே"

என்பது ஒருபாசுரப்பகுதி. "ஊழிக்காலத்தில் பூலோகம் மேலுலகம் இவை ஒன்றும் விடாது வித்தியாஸ மில்லாமல் ஒரே ஸமயத்தில் வயிற்றில் வைத்துக் காப்பாற்றிய நம் கண்ணனே ஜகத்துக்கு நிர்வாஹகன். இவனல்லாமல் வேறொருவரும் நிர்வாஹகரில்லை." என்பது இப்பாசுரத்தில் "கண்ணன் கண்" என்ற இடத்தில் வரும்கண் என்ற சொல்லும், "ஓர் கண்ணே" என்று இறுதியில் வரும் "கண்" என்ற சொல்லும் உடன்பாட்டுப் பொருளிலும் எதிர்மறைப் பொருளிலுமாக நிர்வாஹகன் என்ற பொருளை உணர்த்தி யிருப்பது தெள்ளிதின் உணரலாமல்லவா? ஆகவே இப்பாசுரத்தில் நிர்வாஹம் என்ற பொருளில் "கண்" சப்தத்தை இரண்டிடங்களிலும், அதை உடையவன் அதாவது நிர்வஹிப்பவன் என்ற பொருளில் கண்ணன் சப்தத்தையும் பிரயோகம் செய்திருப்பது அறிந்து அனுபவித்தற்குரியதாகும். "மணியை வானவர் கண்ணனைத் தன்னதோரணியை" என்ற பாசுரத்தில் வரும் "வானவர் கண்ணனை" என்பதற்கு 'பரமபதவாஸிகளுக்கு நிர்வாஹகனை' என்று உரை செய்யப் பெற்றிருக்கிறது. ஆகவே இங்கு வந்த கண்ணன் சொல் தலைமை என்ற கருத்துக் கொண்ட "கண்" என்ற சொல்லடியாகப் பிறந்த கண்ணன் என்று அறிக. "கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே" என்ற பாசுரம் போலவே திருமழிசைப்பிரானும், "எண்ணிலா வரக்கரை நெருப்பினுல் நெருக்கினுய், கண்ணலல்லால் ஓர் கண்ணிலேன்" என்று ஒரு பாசுரத்தில் அருளிச்செய்திருக்கிருர், இங்குவந்துள்ள "கண்" என்ற சொல்லுக்கும் "நிர்வாஹகன்" என்ற பொருளே உரைக்கப்பட்டிருக்கிறது. வ்யாக்யானத்தையும் நோக்குக. "நெருப்பினுல் நெருக்கினுய் கண் — சராக்நியாலே யழியச் செய்த நீ எனக்கு நிர்வாஹகன் என்னுதல்."

"யதாராகவ நிர்முக்தம்சர." என்கிற படியே, சரஸ்கானீயனுன திருவடியை இட்டு லங்கையை தஹித்து ராக்ஷஸரைக் கண்கலங்கும் படி பண்ணின நீ எனக்கு நிர்வாஹகன் என்னுதல். "அலாலோர் கண்ணிலேன்" — லோகாநம் த்வம் பரோதர்ப: என்கிற தேவரீரையொழியவேறெரு நிர்வாஹகரையுடையேனல்லேன்." என்பது அவ்வியாக்யான பங்கதிகளாகும். இங்கு வழங்கியுள்ள "கண்" என்பதற்கு நிர்வாஹகன் என்ற பொருள் கூறியிருத்தல்காண்க. மேலும்,

"மணாளன் மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும்
கணாளன் உலகத்துயிர் தேவர்கட்கெல்லாம்"

என்ற பாசுரத்தில், இரண்டாமடிக்கு, "உலகத்திலுள்ள மனுஷ்யர்களென்ன, தேவர்களென்ன எல்லோருக்கும், நிர்வாஹன்" என்று பொருள் கூறுமிடத்துக் கணாளன் என்ற சொற்கு நிர்வாஹகன் என்று பொருள் கூறி யிருத்தலும் எண்ணிப்பார்த்தற்குரியது. கண் என்ற முதனிலேயோடு அன்விகுதி சேர்ந்து கண்ணன் என்றுகிருப்போலே 'ஆள்' என்ற இடை நிலே சேர்ந்து, கண்ணாளன் என்று வழங்க வேண்டிய சொல் செய்யுளுக்காக இங்குக் கணாளன் என்று வழங்கியிருப்பது ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தற்குரியது.

ஆகவே கண்ணன் என்ற சொல் "நிர்வஹிப்பவன்" என்ற பொருளிலும் வழங்கும் வழக்குண்டு என்பது இதனுல் உணர்த்தப் பட்டதாயிற்று.

மேலும் ஆழ்வாரே சொற்பொருள் விரித்தல் என்னும் உத்திப்படி தாமே கண்ணன் சொற்பொருளை விரிப்பவர்போல,

"காக்குமியல் வினன் கண்ண பெருமான்"

என்ற பாசுரத்தில் காக்குமியல் வினன் என்று பொருளையும் கண்ணபெருமான் என்று சொல்லேயும் கூறியிருப்பது,கண்ணன் என்ருல் நிர்வாஹகன் என்று பொருள் கூறுவதற்குச் சிறந்த ஆதாரமாக அமைந்திருப்பதையும் அறியலாகும்.

## 3. எங்கும் நிறைந்தவன் கண்ணன்

இனி "எங்கும் நிறைந்தவன்" என்ற ஒரு பொருளிலும் கண்ணன் சொல் வழங்கும் என்பதைக் காண்போம்,

தமிழ் மொழியில் கண் என்ற சொல் இடப் பொருளே உணர்த்தற்குரியது என்பது தமிழ் மொழிப் பயிற்சியுடையார் அனைவரும் அறிந்ததே. ஆகவே இடப் பொருளே உணர்த்தும் கண் என்ற பகுதியோடு அன்விகுதி சேர்ந்து கண்ணன் என்ருகும் பொழுது, இடமெல்லாம் இருப்பவன், அதாவது எல்லா இடத்திலும் நிறைந்து இருப்பவன் என்ற பொருளே உணர்த்தும் ஆற்றல் உடையதாக ஆகிறது அச்சொல்.

இக்கருத்தைக் கண்ணன் சொற்கு விளக்க வந்த ஆழ்வார் ஒருவரலாற்றையும் காட்டி விளக்கியிருப்பது மிகவும் ரஸித்து அனுபவிப்பதற்குரியதாகும்.

இரணியன், எண்ணிய எண்ணியாங்கு எய்தும் கொடிய தபஸ்ஸைச் செய்து அரிய பெரிய வரங்கள் பெற்ருன். அதனுல் தருக்குடையனுய், தேவர் முதலிய வருக்குச் சொல்லொணுத்துயர் விளைவித்து வந்தான். அவனுக்கு ஒருமகன். அவன் பெயர் பிரஹலாதன். அவன், தந்தை சொற்படி நடக்காது பகவானுடைய திருநாமத்தையே தானும் ஓதித் தன்னுடன் ஓதும் பள்ளிச் சிருர்களுக்கும் ஓதிவந்தான். இதனுல் சினங்கொண்ட இரணியன் தன்மகனை அழைத்து தன்னுடைய பொருத்தத்திற்கு ஏற்ப அளந்து, கட்டின ஒரு தூணைச் சுட்டிக்காட்டி, "நீ சொல்லுகிற பகவான் இங்கு இருக்கிருனு?" என்று கேட்டான். அதற்கு அவனுடைய மகன், தூணிலும் உளன், துரும்பிலும் உளன், எங்குமுளன் என்ருன். உடனே அத்தூணைத் தன் கைகளாலேயே ஒருதட்டுத் தட்டினுன். அவன் எந்த இடத்தில் தட்டினுனே அதே இடத்தில் அதே ஸமயத்தில் பகவான் நரங் கலந்த சிங்க உருவாய்த் தோன்றி இரணியனது விசாலமான மார்பகத்தைத் தன் கூரிய நகங்களால் பிளந்து கொன்ருன் என்பது வரலாறு. இதனுல், "தன்னுடைய அடியவர்களான பிரஹலாதன் போன்றவர்களது வாக்கியத்தைப் பாதுகாத்துத் தருபவன்" என்ற பொருளேயும், "தான் ஸர்வவ்யாபகனுக எங்கும் நிறைந்திருக்கிறவன்" என்ற பொருளேயும் யாவரும் எளிதில் உணருமாறு நிருபித்திருக்கிருன் பகவான். இப்பொருளே, "எங்குமுளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து இங்கில்லையால் என்ற இரணியன் தூண்புடைப்ப அங்கப் பொழுதே அவன் வீயத்தோன்றிய என்சிங்கப் பெருமான் பெருமை யாராயும் சீர்மைத்தே."

என்ற பாசுரத்தின் மூலம் ஆழ்வார் அனுபவித்திருக்கிருர். இப்பாசுரத்தில் எங்குமுளன் என்று சொற்பொருளையும் அடுத்துக் கண்ணன் என்று அப்பொருள் கொண்ட சொல்லையும் இணைத்து "எங்குமுளன் கண்ணன்" என்று அதாவது ஸர்வ வ்யாபகன் கண்ணன் என்று சொற்பொருளை ஆழ்வாரே விரித்துணர்த்திய முறையைக் காணலாம். இக்கருத்தையே தெளிவு படுத்துவார் போலப் பின்னும்,

"எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற நிறைந்து நின்ற மெய்ஞ்ஞானச் சோதிக்கண்ணன்"

என்ற பாசுரத்திலும், "என்றும் எல்லாவஸ்துக்களிலும் சிறிதும் ஒட்டாதபடி பரிபூரணமாக வியாபித்து நின்ற" என்று சொற் பொருளை விவரித்துக் கூறி அடுத்து (மெய்ஞ்ஞானச் சோதிக்) கண்ணன் என்று அப்பொருள் கொண்டுள்ளதாகக் கண்ணன் சொல்லைக் கூறியிருத்தலாலும் இக்கருத்து உறுதிப்படும். ஆகவே எங்கும் நிறைந்தவன் என்ற பொருளிலும் கண்ணன் சொல் வழங்கிவரும் என்பது உறுதியாக்கப்பட்டது.

## 4. கண்ணழகன் கண்ணன்.

இனி, கண்ணன் என்ற சொல் "கண்ணழகுடையவன்" என்ற பொருளிலும் வழங்கும் என்பதைக் காண்போம். "அண்ணல் மாயன் அணிகொள் செந்தாமரைக் கண்ணன்" என்ற பாசுரப்பகுதிக்கு ஈட்டில் வ்யாக்யானம் செய்யுமிடத்தில், "கண்ணன்" சொல்லுக்குக் கண்ணழகையுடையவன் என்று பொருள் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வியாக்கியானம் பின்வருமாறு காண்டற்குரியது. "அணிகொள் செந்தாமரைக் கண்ணன் — இக் கண்ணழகு உடையவனுக்கு வேறொரு ஒப்பனை வேண்டா" என்னும்படி இருப்பதாய், தனக்குத் தானே ஆபரணமாய், விகாசம், செவ்வி, குளிர்த்தி, நாற்றங்களிருலே தாமரையை ஒருவகைக்கு ஒப்பாம்படி சொல்லலாய் இருக்கிற கண்ணழகுடையவன்" என்பது அவ்விளக்க உரையாகும்.


இவ்வுரையை உற்று நோக்கினல் கண்ணழகுடையவன் என்ற பொருள் பற்றியே இங்குக் கண்ணன் சொல் வழங்கப் பட்டிருக்கிறமை தெளிவாம்.

மேலும், கண்ணழகுடைமை பற்றிக் கண்ணன் சொல்வழங்கும் என்பதற்கு வெளிப்படையாகவே காரணத்துடன் கூறப்பட்டிருக்கிற ஆதாரமும் பாசுரத்தில் உண்டு. அதையும் காண்போம். "தண் பெருநீர்த்தடந் தாமரை மலர்ந்தாலொக்கும் கண் பெருங் கண்ணன்" என்பது அப்பாசுரமாகும். இதில் பெருங் கண்ணன் என்ற இடத்திலுள்ள பெருமையைப் பிரித்துக் கண்ணுக்கு அடையாக்கிப் பெருங்கண் கண்ணன் என்று சேர்த்து, "குளிர்ந்த பெரிய நீரையுடைய பொய்கையிலே தாமரைப்பூ மலர்ந்தாப்போலேயாய் அவ்வளவன்றிக்கே பெரிய கண்ணையுடைய கிருஷ்ணன்" என்று ஈட்டில் பொருளுரைக்கப் பட்டிருக்கிறது. இங்கு கண்ணுக்குப் பெருமையாவது அழகால் குறைவற்றிருக்கை என்று கொள்க. ஆகவே பெருங்கண் என்று கண்ணினுடைய அழகைக் கூறிப் பின் கண்ணன் என்றதனுல் அக்கண்ணழகுடைமை பற்றியே கண்ணன் சொல் வழங்கியிருக்கிறது என்பது வெளிப்படையல்லவா? இவ்வாறே மேலும் பல இடங்களில் இக்கருத்தை ஆழ்வார் அருளிச் செய்திருப்பதையும் காணலாம்.

"தகுங்கோலத் தாமரைக் கண்ணனெம்
[மான்"
"செங்கோலக்கண்ணன்"
"தாமரைக்கண்ணினன்"
"செய்யதாமரைக் கண்ணன்"
"அணிகொள் செந்தாமரைக் கண்ணன்"
"கமலத்தடம் பெருங்கண்ணன்"
"செய்ய கண்ணன்"


என்று இவ்வாருன இடங்களில் கண்ணழகு பற்றியே கண்ணன் சொல் வழங்கப்பட்டிருப்பது தெளிவு. இப்பொருளைக் கூறும் போது ஒரு வரலாறு பிரஸித்தமாகச் சொல்லி அனுபவிக்கிறதுண்டு. அதாவது, சிவபெருமானை ஆயிரம் தாமரைமலர்களால் திருமால் அர்ச்சிக்க முற்பட்டதாகவும், அப்பொழுது ஒரு மலர் சிவபெருமானுல் காணமல்செய்யப்பட்டதாகவும், அவ் ஒருமலருக்குப் பதில் திருமால் தம்முடைய ஒருகண்ணைப் பறித்துப் பூசித்ததாகவும் அக்கண் தாமரைமலருக்கு ஒப்பாக இருந்தமையால் அப்பூசை முற்றுப் பெற்றதென்றும் சிவநேசர்கள் கூறுவதுண்டு என்பதாம். இதனுல் திருமால் இயல்பாகவே செந்தாமரை மலர் போன்ற அழகான கண்ணழகுடையவர் என்பது வெளிப்படை.

(தொடரும்)



மகிஷாசூர மர்த்தனி, மாமல்லபுரம்.

CONNEMARA PUBLIC LIBRARY
4 - AUG 1965
MADRAS



மகிஷாசூர மர்த்தனி, சிங்கவரம்.

# பொது நிலை

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

பொதுநிலை என்ருல் இரண்டு மாறு பட்ட பொருள்களும் அவற்றிற்கு நடுநிற் கும் மற்ருெரு பொருளுமென முப்பொருள் பற்றிய ஒரு கொள்கையாகும். வள்ளுவர் சமன் செய்து சீர்தூக்கும் கோலைப் பொது நிலைக்கு உவமானம் காட்டுகிருர். அதாவது மாறுபட்ட இரண்டு தராசுத் தட்டுகள், அவற்றில் சீர்தூக்கிக் காட்டும் கோல் ஆக முப்பொருளைப்பற்றிச் "சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்தொரு பால் கோடாமை சான்ருேர்க் கணி" என்பது அவர் கூற்று.

இனி பொது என்ற சொல் சபை, மன்று என்ற பொருளையும் குறிக்குமாதலால் அது தில்லையம்பலத்தையும், அதன் கண் நடம் நவில் இறைவன் நிலையினையும் பொது நிலையெனக் குறித்த தென்னலாம். ஆயின் மாறுபட்ட வேறு இரண்டு நிலை வேண்டுமே. இன்றேல் பொதுநிலை என்றல் எங்ஙன் பொருந்து மெனில், தில்லையம்பலத்தின் கண்ணும் மாறுபட்ட இரண்டு தானங்கள் உண்டு என்கிருர் ஒருவர். அவர் யார்? நமது மணிவாசகப் பெருந்தகையே. அவ்விருவருள் ஒருவர் சிவகாம சுந்தரி. மற்றவர் காளி. அம்பிகை, அருளையே நோக்கி நடன அமுதம் பருகித் திளைக்க இறைவனைப் பணிந்து நின்ருள். காளியோ தருக்குமிகுந்து தன்தோள்வலி உன்னி இறைவனைப் பொருட் படுத்தாது வாது—ஆடலுக்கு அறைகூவி நின்ருள். அவளையடக்க வேண்டியது எம்பிரானுடைய கடமையாயிற்று. இன்றேல் "தரணியெல்லாம் ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாங்காண் சாழலோ" என்றபடி உலகம் அழியும். இவ் விருவருக்கும் இறைவன் அருள் புரிந்தார் (அருள்—கருணை). முதல் வர்க்குப் புரிந்தது அறக்கருணை. அடுத்தவர்க்குப் புரிந்தது மறக்கருணை. அவரைத் தோற்கச் செய்து கருணை புரிந்தமையால் மறக்கருணை யாயிற்று. இவ்வகையால் மாறுபட்ட இருவருக்கும் இறைவன் அருள் புரிந்த நிலை பொது நிலைஆயிற்று. அறம், மறம் இரண்டையும் நீக்கக் கருணைப் பொதுவாந் தன்மையைக் காண்க. இதை நானுகச் சொல்லவில்லை. அவ் வடிகளாரே கூறுகின்ருர். அது,

> "பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
> கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
> அருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
> இறைவன்"

இத் திருவகவலில் கனிதரு செவ்வாய் உமைக்கும், காளிக்கும் ஒப்ப நமது கூத்தப் பெருமான் தமது திருமுகத்தின் அழகுறு புன்னகையை அருளினன் என்பது இவ்வடிகளின் கருத்தாகும்.

இவ்வாறே இறைவன் பொது நிலையாய் நின்றமை பல இடங்களில் காணக் கிடக்கிறது. நகைச் சுவையோடு காட்சியளிக்கும் ஓர் இடத்தைக் காண்பாம். கயிலைமலை; அத்தாணி மண்டபம்; சிவ பெருமான் எழுந்தருளி யிருக்கின்ருர். இடது புறத்தில் உமா தேவியாரும், வலப் புறத்தில் நங்கை உருக்கொண்ட கங்கை

யும் அதே ஆசனத்தில் எழுந்தருளி யிருக்கின்றனர். இவ்விருவர்க்கும் சக்களத்திப் போராட்டம் தொடங்குகிறது. உமாதேவியார் எமது பெருமான் புரிந்த வீரட்டங்களுள் காமதகனமே முதற்கண் நிகழ்ந்தது என்கின்றனர். எதிரிலிருந்த கங்கா தேவியார், "போ, போ. அவர் காமதகனம் பண்ணிய பொழுது நீ எங்கிருந்தாய்? நான் அல்லவோ தலையில் இருந்து அறிந்தேன். ஆதலில் கால சங்காரமே முதலாக நிகழ்ந்தது. அதன்பின் தான் காமதகனம்" என்று கையை அறைந்து கூறுகிறாள். இவ்வாறே இவ்விருவர்க்கும் வாக்குவாதம் அதிகரிக்கிறது. இவ்விருவர் பக்கங்களிலும் இருக்கும் அவர்கள் தோழிகளும் அஞ்சுகின்றனர். அவருள் சிலர் அவர்கள் முன்வந்து "அன்னைமீர்! பூசல் எதன் பொருட்டு? இதோ அவ் வீரத்தைச் செய்த ஐயர் இங்கே உள்ளார். அவரையே கேட்போமே. உள்ளது புலப்படுகிறது. உங்கள் வாதமும் ஒழியுமே" என்று அச் சேடியருள் ஒருத்தி அவ் விருவரையும் சமாதானஞ் செய்து, பொது நிலையில் நிற்கும் ஐயர் (சிவபெருமான்) முன்வந்து, அடிதொழுது, ஆண்டவனே! உமக்குத் தெரியுமே. இவ்விருவீரங்களுள் எதுமுன் நிகழ்ந்தது சொல்லி யருளுங்கள் என வேண்டுகிறார். இந்த இடத்திலும் ஐயர் நிற்கும் நிலை பொது நிலையே. பொது நிலை என்றால் தராசு போன்ற பொதுநிலை யன்று. அவ்விருவருள் வெற்றி, தோல்வி ஒருவருக்கும் நிகழா வண்ணம் மௌனம் சாதித்த நிலையேயாகும். இக் காட்சி தருபவர் நமது சேரமான் பெருமாள்.

**"காமனை முன்செற்ற தென்று**
**ளவளிவள் காலன் என்னுந்**
**தாமநன் மார்பனை முன்செற்ற**
**தென்றுதன் கையெறிந்தாள்**
**நாமனைஞ் செற்றதன் றுரையென்**
**றேற்கிரு வர்க்கும்அஞ்சி**
**யாமெனக் கிற்றில ரன்றெனக்**
**கிற்றிலர் அந்தணரே"**

இனி சேக்கிழார் பெருமான் பொது நிலைக் காட்சி ஒன்று தருகிறார். திருவொற்றியூர் எழுத்தறியும் பெருமான் கோயில் வாயில் எதிரே ஒருவர் குறையிரந்து நிற்கின்றார். இவர் யார்? இவர் தான் வன்றொண்டப் பெருந்தகை. முதல்வர் சாத்துப்பணிக் கொடுத்து மின்போல் மறையும் சங்கிலியாரைக் கண்டு உளங் கொதித்த அன்பர். இவர் கடவுள்பால் என்ன வேண்டுகிறார்? தமது உளங் கவர்ந்த அணங்கினை மணம் செய்விக்க வேண்டுகிறார். அவர் எண்ணத்தை நிறைவேற்ற வாக்களித்துச் சங்கிலியார் கனவில் தோன்றி,

**"சாருந் தவத்துச் சங்கிலிகேள் சால**
**என்பால் அன்புடையான்**
**மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்**
**வெண்ணெய் நல்லூரில்**
**யாரும் அறிய யான்ஆள உரியான்**
**உன்னை எனை இரந்தான்**
**வார்கொள் முலையாய் நீஅவனை மணத்தால்**
**அணைவாய் மகிழ்ந்து"**

என்கின்றார்.

அதை அறிந்த சங்கிலியார் 'அவர் என்னைப் பிரியேன்' என்று சத்தியம் பண்ணித் தருவரேல் இசைவேன் என்கின்றார். இங்கு தான் இறைவன் பொது நிலைக் காட்சி தெரிகிறது. தலங்கள் தோறும் சென்று தரிசிக்கும் ஆரூரர் பிரியாமல் இருக்க முடியுமா? அல்லது அடியார் கூட்டத்தோடு மனைவியையும் அழைத்துச் செல்ல முடியுமா? ஆக இவர் 'பிரியேன்' என்று சத்தியம் பண்ணித் தரமுடியாது.

இவ்வாறு சத்தியம் பண்ணித் தரா விட்டால் இவரை மணந்துகொள்ள முடியாது. மாறுபட்ட இரண்டு பாத்திரங்கள் சுந்தரரும், சங்கிலியாரும். நடுநிலை அல்லது பொது நிலை வகிப்பவர் ஆண்டவர். சுந்தரரிடம் வருகிறார். 'பிரியேன்' என்று சத்தியம் பண்ணித்தர முடியுமா?—வினா. தேவரீருக்குத் தெரியாதா ? — விடை.

ஆயின் தேவரீரை வேண்டுவது என் மணம் முடியும் நிமித்தம் நான் சத்தியம் பண்ணித் தரும்பொழுது இங்கு ஆலயத்தில் இல்லாமல் அருகிலுள்ள மகிழ மரத்தடியில் இருக்க வேண்டுமென்கிறார். அதற்கு உடன்படுகிறார் பொது நிலைமையாளர். எப்படித் தமது பொது நிலையைப் பாதுகாத்துக் கொள்கிறார். சங்கிலியாரிடம் சொல்கிறார், 'நானை வைகறை ஆரூரன் நமது முன்னுகை உங்களுக்குச் சத்தியம் செய்து கொடுக்க வருவான். அதுசமயம் நாம் ஆலயத்துள் இரோம். மகிழ மரத்தடியில் இருப்போம். ஏழையின் பொருட்டுச் சிவபெருமான் திருமுன் சத்தியம் வேண்டாம். இந்த மகிழ மரத்தடியில் நின்று சத்தியம் செய்தலே போதும் எனக் கேளுங்கள்' என்கிறார். இது சேக்கிழார் காட்டும் பொது நிலை.

இனிச் சாத்திரம் காட்டும் பொது நிலைக் காட்சி ஒன்று காட்டுவாம். ஒளியுடைய பொருள் ஒன்று. இருளுடைய பொருள் மற்றொன்று. ஒளிப் பொருள் பதி. இருட் பொருள் பாசம். பொதுநிலைப் பொருள் பசு. ஒளி இருளை யறியாதது. இருள் ஒளியை அறியாது. பசுப்பொருள் இரண்டையும் அறியும். அது ஒளியைச் சார்ந்த பொழுது ஒளியாயும், இருளைச் சார்ந்த பொழுது இருளாயும் நிற்கும். எனவே பொது நிலையில் நிற்கும் ஆன்மா இருளைச் சார்ந்து இருளாய் விடாமல், ஒளியைச் சார்ந்து ஒளிப் பொருளாவதாகுக.

இதுகாறுங் கூறியவற்றால், பொது நிலைக்கு வள்ளுவர் இலக்கணமும், வாதவூரடிகள், சேரமான் பெருமாள், சேக்கிழார் பெருமான் இவர்கள் காட்டும் பொது நிலைக் காட்சியும், சாத்திரத்தில் அறியக் கிடக்கும் பொதுநிலையும் ஆகிய இவற்றை ஒருவாறு பெற்றோம்.

---


**வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி**

**அன்புடையீர்,**

திருநாவலூர் (ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்) ஸ்ரீ பக்தஜனேஸ்வர சுவாமிகள் தேவஸ்தானத்தின் நிர்வாக அறங்காவலர் திருப்பணிக்கமிட்டி செயுலாளர் & பொருளாளர் பதவியையும் 3-9-63 முதல் திருவண்ணமலை ஸ்ரீ T. K. மணி குருக்கள் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். திருப்பணி வேலைகள் இனிகாலதாமதம் இன்றி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தாங்களும் திருப்பணிக்குப் பரிபூரணமான ஆதரவு அளிக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

**பிரசங்கமணி நா. சரவணமாணிக்கவாசக சுவாமிகள்,**
ஆதீனஇளவரசு ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்
மடாலயம் கூனம்பட்டி.
தலைவர் திருப்பணிக்கமிட்டி.

திருநாவலூர்.
11-9-63

# செய்யூர்க் கல்வெட்டுக்கள்-I

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., M.O.L., Ph.D.

## முன்னுரை :

செய்யூர் என்பது இன்றுள்ள மதுராந்தகம் வட்டத்தில் ஜமீன் கிராமமாகும். அவ்வூரில் பல கோயில்கள் உண்டு. அவற்றுள் கல் வெட்டு உள்ள கோவில்கள் இரண்டாகும். அவற்றுள் ஒன்று வன்மீகநாதர் கோயிலாகும். மற்றொன்று கயிலாசநாதர் கோயில். முன்னது செய்யூர் ஜெமீன்தார் மேற்பார்வையில் நன் னிலையில் உள்ளது; பின்னது இடிந்து பாழ டைந்து விட்டது. இனி இவ்விரண்டு கோயில் களிலுமுள்ள கல்வெட்டுக்களைக் காண்போம்.

## சோழர்காலக் கல்வெட்டுகள்

வன்மீகநாதர் கோவிலில் 16 கல் வெட்டுகள் உள்ளன. கயிலாசநாதர் கோயிலில் 11 கல்வெட்டுகள் உள்ளன. இவ்விருபத்தேழு கல்வெட்டுகளும் பிற்காலச் சோழர் கல்வெட்டு களாகும்.

செய்யூர் தொண்டை நாட்டைச் சேர்ந்தது. தொண்டை நாடு சங்க காலத்தில் (கி. பி. 300 வரையில்) திரையர், சோழர் ஆட் சியில் இருந்தது; பின்பு கி. பி. 300 முதல் 875 வரையில் பல்லவர் ஆட்சியில் இருந்தது; பின்னர் கி. பி. 875 முதல் 1300 வரையில் சோழர் ஆட்சியில் இருந்தது. இச்சோழர் ஆட்சிக்காலத்துக் கல்வெட்டுகளே மேற் கூறப் பெற்ற இரண்டு கோயில்களிலும் அமைந் துள்ளன. இப் பிற்காலத்தில் ஆண்ட சோழ மன்னர்களின் பெயர்களையும் அவர்கள் ஆண்ட காலத்தையும் கீழே காண்க.

## சோழமன்னரும் காலமும்

| | | |
|---|---|---|
| ஆதித்தசோழன் | கி. பி. | 880—907 |
| முதற்பராந்தகன் | ,, | 907—953 |
| கண்டராதித்தன் | ,, | 949—957 |
| அரிஞ்சயன் | கி. பி. | 956—957 |
| இரண்டாம் பராந்தகன் | ,, | 956—973 |
| ஆதித்த கரிகாலன் | ,, | 956—969 |
| உத்தமசோழன்—மதுராந் தகன் | ,, | 969—986 |
| முதலாம் இராசராசன் | ,, | 985—1014 |
| முதலாம் இராசேந்திரன் | ,, | 1012—1044 |
| முதலாம் இராசாதிராசன் | ,, | 1018—1054 |
| இரண்டாம் இராசேந்திரன் | ,, | 1052—1064 |
| வீரராசேந்திரன் | ,, | 1063—1069 |
| அதிராசேந்திரன் | ,, | 1069—1070 |
| முதற்குலோத்துங்கன் | ,, | 1070—1122 |
| விக்கிரமசோழன் | ,, | 1122—1135 |
| இரண்டாம் குலோத்துங்கன் | ,, | 1133—1150 |
| இரண்டாம் இராசராசன் | ,, | 1146—1173 |
| இரண்டாம் இராசாதிராசன் | ,, | 1163—1179 |
| மூன்றும் குலோத்துங்கன் | ,, | 1178—1218 |
| மூன்றும் இராசராசன் | ,, | 1216—1246 |
| மூன்றும் இராசேந்திரன் | ,, | 1246—1279 |

மேலே கூறப் பெற்ற சோழ மன்னருள் சிலருடைய கல்வெட்டுகளே வன்மீக நாதர் கோவிலிலும் கயிலாசநாதர் கோவிலிலும் காணப்படுகின்றன.

## தொண்டைநாட்டுக் கோட்டங்கள்

பல்லவர் காலத்திலும் பிற்காலத்திலும் தொண்டைநாடு 24 கோட்டங்களாகப் பிரிந் திருந்தது என்பது தெரிகின்றது.* அவையாவன :

புழல் கோட்டம், ஈக்காட்டுக்கோட்டம், மணவிற் கோட்டம், செங்காட்டுக் கோட்டம், பையூர்க் கோட்டம், எயில் கோட்டம், தாமல் கோட்டம், ஊற்றுக் காட்டுக் கோட்டம், களத்தூர்க் கோட்டம், செம்பூர்க் கோட்டம்,

* Chingleput District Manual. p. 438.

ஆம்பூர்க்கோட்டம், வெண்குன்றக்கோட்டம், பல்குன்றக் கோட்டம், இளங்காட்டுக் கோட்டம், காலியூர்க் கோட்டம், செங்கரைக் கோட்டம், படுவூர்க் கோட்டம், கடிகூர்க் கோட்டம், செந்திருக்கைக் கோட்டம், குன்றவர்த்தனக் கோட்டம், வேங்கடக் கோட்டம், வேலூர்க் கோட்டம், சேந்தூர்க் கோட்டம், புலியூர்க் கோட்டம், செம்பூர்க் கோட்டம்.

ஒவ்வொரு கோட்டமும் பல நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாட்டிலும் பல ஊர்கள் இருந்தன. ஒவ்வொரு ஊரும் இன்ன கோட்டத்து இன்ன நாட்டைச் சேர்ந்தது என்று அக்காலத்து வழங்கப்பட்டிருந்தது. அந்த முறையில் செய்யூர் — செம்பூர்க்கோட்டத்துப் புறையூர் நாட்டுச் செய்யூர் என்று சோழர் காலத்தில் வழங்கப்பட்டது என்பது சோழர் காலக் கல்வெட்டுக்களால் தெரிகிறது. செம்பூர் என்பது மதுராந்தகம் வட்டத்தின் வடக்கில் பாலாற்றுக்கு தெற்கில் அமைந்துள்ள ஊராகும். தஞ்சாவூரைக் கொண்டு 'தஞ்சாவூர் மாவட்டம்' எனப் பெயர் அமைந்தாற்போல அக்காலத்து செம்பூரைக் கொண்டு கோட்டம் என்ற பெயர் அமைந்தது.

செம்பூர்க் கோட்டம் பட்டினநாடு, நெடுங்குன்ற நாடு மூந்தூர் நாடு, பொன்னூர் நாடு, புறையூர் நாடு; செம்பூர் நாடு எனப்பல நாடுகளைப் பெற்றிருந்தது. செய்யூர், புறையூர் நாட்டைச் சேர்ந்த ஊர்களுள் ஒன்றாய் விளங்கியது.

செய்யூர்க் கல்வெட்டுகள் 1902—ஆம் ஆண்டில் அரசாங்கக் கல்வெட்டுத்துறையினரால் படியெடுக்கப்பட்டு, அவ்வாண்டு அறிக்கையில் அவற்றின் சுருக்கம் வெளியிடப்பட்டன. தென்இந்தியக் கல்வெட்டுகள் வரிசையில் எட்டாம் தொகுதி ஒவ்வொரு கல்வெட்டு வாசகமும் அச்சிடப்பட்டுள்ளது. இக் கல்வெட்டுகளிலிருந்து நாமறியலாகும் செய்திகளைக் கீழே காண்க.

## ஊரின் பெயர்கள்

செய்யூர் என்னும் பெயர் எக்காலத்து உண்டாயிற்று என்பது கூறக் கூடவில்லை.

செய் — வயல்; செய்யூர் வயல்கள் மிக்குள்ள ஊர் எனப்பொருள்படும். இப்பெயரைச் சேயூர் என்று வழங்கி, முருகனுக்கு உரிய ஊர் என்று கூறுவோரும் உண்டு. இவ்வூர்த் தலபுராணத்திற்கும் முந்தியவை சோழர் காலக் கல்வெட்டுக்கள் ஆதலின், அவற்றில் காணப்படும் செய்யூர் என்பது இவ்வூரின் பழைய பெயர் என்று கொள்வது பொருத்தமாகும். 'செய்யூரான செயங்கொண்ட சோழ நல்லூர்' என்பது கல்வெட்டு வாசகம். (430 of 1902). செயங்கொண்டான் என்பது முதல் இராசராசன் (கி. பி. 985—1014) விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். அப்பெயரால் அமைந்ததே திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 'செயங்கொண்டம் என்னும் ஊராகும். செய்யூரின் மற்றொரு பெயர் வீரராசேந்திர நல்லூர் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. (430 of 1902). இப்பெயர் வீரராசேந்திரன் காலத்தில் ஏற்பட்ட பெயராகும்.

## கோவில்களின் காலம்

செய்யூர் வன்மீகநாதர் கோவில் கல்வெட்டுகளும் கயிலாச நாதர் கோயில் கல்வெட்டுகளும் வீரராசேந்திர சோழன் காலம் (கி.பி. 1063—1069) முதல் மூன்றாங் குலோத்துங்கன் காலம் (கி.பி. 1178—1218) முடிய இருப்பவையாகும். வீரராசேந்திரன், முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாங் குலோத்துங்கன் ஆகியோரின் கல்வெட்டுகள் இக் கோயிலில் காணப்படுகின்றன. இவற்றுள் கயிலாசநாதர் கோயில், இராசேந்திர சோழீசுவரம் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டிருப்பதை நோக்க, முதலாம் இராசேந்திரன் காலத்தில் கி.பி. (1012 — 1044) அக் கோயில் உண்டாயிருக்கலாம் என்று கொள்வது பொருத்தமாகும். ஆயின், வன்மீக நாதர் கோவில், கயிலாசநாதர் கோயிலைப் போலச் சோழவேந்தன் பெயரைப் பெற்றிராமையால், சோழருக்கு முற்பட்டதாகக் கொள்ளலாம். ஆயினும் அக்கோயில்கள் இரண்டும் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் நல்ல நிலையில் இருந்தமையைக் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன.

## மெய் கீர்த்தி

மேலே கூறப்பெற்ற கல்வெட்டுகள் கோவிலுக்குரிய நில தானம், விளக்கு தானம் முதலிய

தான வகைகளைக் குறிப்பனவாகும். அத் தான வகையைக் குறிக்கும் பகுதிக்கு முற்பட்ட கல்வெட்டுப்பகுதி அக் காலத்தில் நாடாண்ட மன்னனுடைய புகழை (போர்ச் செயல்கள் முதலிய வற்றை) எடுத்துக் காட்டுவது வழக்கம். அப் பகுதி மெய்க்கீர்த்தி எனப்படும். வீரராசேந்திரனது கல்வெட்டு ஒன்று மெய்க்கீர்த்தியைப் பெற்றுள்ளது. அவன் மேலைச் சாளுக்கிய மன்னனான ஆகவமல்லனையும் அவனைச் சேர்ந்த விக்கலனையும் சிங்கணனையும் கூடல் சங்கமம் என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் முறியடித்தான். அவர் தம் பெண்டிரையும் பிறபொருள்களையும் கைக்கொண்டான்; கீழைச் சாளுக்கியரின் வேங்கி நாட்டை மீட்டான்; தன் வெற்றிக்காக வெற்றி முழுக்கு (விஜயாபிஷேகம்) செய்து கொண்டான். இச் செய்திகள் அனைத்தும் முதற் கல்வெட்டில் (430 of 1902) கூறப்பட்டுள்ளன.

இரண்டாங் குலோத்துங்கன் கல்வெட்டிலும் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது, அது மிகச் சிறந்த புகழ் வாய்ந்த ஒருவனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும். இரண்டாங்குலோத்துங்கன் கதிரவன் மரபில் வந்தவன்; நிலமகளை உரிமையால் கூடியவன்; திருமகளையும் வெற்றிமகளையும் நாமகளையும் நட்புக் கொண்டவன்; கருங்கலி கடிந்தவன்; செங்கோல் இனிது செலுத்தியவன்; மீனக் கொடியையும் விற்கொடியையும் அடக்கிப் புலிக்கொடி மேருவில் இருக்க நாடாண்டவன். மன்னுயிர் தழைப்ப — மனுநீதி பெருக — மாதவர் தவமும் மங்கையர் கற்பும் ஆதி அந்தணர் ஆகுதிப்புகையும் சாதி ஒழுக்கமும் நீதி அறமும் பிறழாது நிற்ப, மழைவளம் தவறாது நிற்ப, பல்லவர் முதலிய வேந்தர் பலரும் திறை கொணர்ந்து இறைஞ்ச ஆண்டான் என்று அக்கல்வெட்டுக் கூறுகின்றது (444 of 1902).

மூன்றாங் குலோத்துங்கன் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டவன். சேரர் ஆண்ட கருரைக் கைக்கொண்டவன்; பாண்டியர்க்குத் துணையாக வந்த ஈழ நாட்டினரை வென்றவன் என்னும் செய்தி ஒரு கல்வெட்டில் (449 of 1902) கூறப்பட்டுள்ளது.

## கோயிலுக்கு அறங்கள்

தமிழகத்துக் கோயில்களுக்கு அரசன் முதல் சாதாரண குடிமகன் ஈருக அனைவரும் பல அறங்களைச் செய்தனர் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. செய்யூரில் அரசனால் சிறப்புப் பட்டங்கள் பெற்ற அரசியல் அதிகாரிகள் ஒவ்வோர் அரசன் காலத்திலும் வாழ்ந்தனர் என்பது,

(1) சேனாபதி மாராயன் மதுராந்தகனான இராசராச நயபாலன் (430 of 1902)

(2) அரையனான இராசராச வளவதரையன் (431 of 1902)

(3) திரையன் மதுராந்தக தேவனான இராச கம்பீர வளவதரையன், கங்கை கொண்டானான கரிகால சோழன் வீரையன் (440 of 1902)

(4) திரையன் தேவகண்டந் தாங்குவானான உத்தம சோழ வளவதிரையன் (441 of 1902)

(5) வண்ணக்குக் கங்கை கொண்டான் சந்தி ஆண்டான் (449 of 1902)

என்னும் கல்வெட்டுத் தொடர்களால் தெரிகின்றது. இவ்வரசியல் அதிகாரிகளும் ஊர் மக்களும் அயல் ஊராரும் செய்யூர்க் கோவில்களில் பல அறங்களைச் செய்தனர்.

கோவிலில் பலவகை விளக்குகள் எரிக்கப்பட்டன. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கப்பட்டவை நந்தா விளக்கும் சந்தி விளக்குமாகும். நந்தா விளக்கு என்பது கருவறையில் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்காகும். சந்தி விளக்கு என்பது காலைச் சந்தியிலும் மாலைச் சந்தியிலும் மட்டும் ஏற்றப்படும் விளக்காகும். ஒரு நந்தா விளக்குக்கு முப்பது பசுக்கள் தானமாக விடப்பட்டன (430 of 1902). அப் பசுக்களின் நெய்யைக் கொண்டு நந்தா விளக்கு எரிக்கப்பட்டது. அப் பசுக்களின் மரபு தொடர்ந்து வாழ்வதற்கு எருதுகளும் கோவிலுக்கு விடப்படுவது வழக்கம். இவ்வாறு பசுக்களேயன்றி விளக்கு எரிக்க நிலதானம் செய்வதும் வழக்கம். ஒரு நந்தா விளக்கு எரிக்க ஒன்றரைப் பாடகம் நிலம் (432 of 1902) தானமாக விடப்பட்டது. ஒரு சந்தி விளக்கு எரிக்கப் பன்னிரண்டு ஆடுகள் (434 of 1902) தானமாக விடப்பட்டன. ஆறு சந்தி விளக்குகள் எரிக்க 72 ஆடு

# அர்ச்சகர் இலக்கணம்

திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள், சிறுதையூர், லால்குடி.

சிவாகமங்களில் திருக்கோயில் வழிபாட்டு முறைகளைக் கூறுவதற்கு முன்னர் ஆலய பூஜைகளைச் செய்யும் அர்ச்சகர்களுக்குரிய இலக்கணங்கள் "ஆசாரியலக்ஷணவிதி" என்ற பகுதியில் மிகவிரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆகமங்களினின்றும் அர்ச்சகர்க்கு வேண்டிய ஒழுக்கம் — உருவத்தோற்றம் படிக்கும் நூல்கள் — தொழில் ஆகியனவும், வேண்டாதனவாகிய தீயஒழுக்கம் — உருவத்தோற்றம் — பயனற்ற நூல்கள் — வேறுபட்ட தொழில்கள் இவைகளும் எடுத்துக் காட்டப்படுகின்றன. அர்ச்சகர் ஆகமவிதிகளை மேற்கொண்டும் — ஆகமம் விலக்குவனவற்றையுணர்ந்து கொண்டும் திருக்கோயில் வழிபாடு செய்ய வேண்டுவது அவசியம் என்பது கருதி இக்கட்டுரை தமிழ் விளக்கத்துடன் எழுதப்படுகிறது.

## அர்ச்சகர் பெயர்கள்

"ஆசார்யோ அர்ச்சகச்சைவ குருச்ச தேவகர்மக: |
ஸாதகச் சிவவிப்ரச்ச ஏதேபர்யாய வாசகா: ||

இதன் பொருள் :— 1. ஆசாரியர் 2. அர்ச்சகர் 3. சைவர் 4. குரு 5. தேவகர்மகர் 6. சாதகர் 7. சிவவிப்பிரர். இவ்வேழு பெயர்களும் அர்ச்சகரைக் குறிக்கும் பெயர் வரிசையாகும்.

## விளக்கம்

1. ஆசாரியர்:—ஆசாரம் என்றால் ஒழுக்கம் என்று பொருள். ஆசாரியர் என்பதற்கு ஒழுக்கமுள்ளவர் என்று அர்த்தம்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்பது திருக்குறள்.

நல்லொழுக்கங்களை உயிரினும் மேலாக மதித்து அர்ச்சகர் பாதுகாத்துவரல் வேண்டும்.

2. அர்ச்சகர்:-வடமொழியில் அர்ச் என்ற தாது பூஜை அல்லது வழிபாட்டைக் குறிக்கும்.

"தீபாந்தம் அர்ச்சனம் புரோக்தம்
நைவேத்யாந்தந்து பூஜனம்." |

"தீபாராதனை முடியச் செய்யும் செயல் அர்ச்சனை என்றும் நைவேத்தியம் வரையிற்

---

செய்யூர்க் கல்வெட்டுக்கள்—1 ... ...

கள் (434 of 1902) விடப்பட்டன. இந்த ஆடுகளின் இனமும் பல்கிப் பெருகக் கவனம் செலுத்தப்பட்டது. அதனால் இவை சாவா மூவாப்பேராடுகள் (438 of 1902) எனப்பட்டன. ஒரு நந்தா விளக்கு எரிக்க 90 ஆடுகள் வழங்கப்பட்டன. எனவே ஒரு பசுவுக்கு மூன்று ஆடுகள் சமம் என்பது அக்காலத்தில் கருதப்பட்டது போலும்! சில விளக்குகள் எரிக்கப் பொற்காசுகள் வழங்கப் பெற்றன. அவற்றின் வட்டியைக் கொண்டு விளக்கு எரிக்கும் செலவு மேற்கொள்ளப்பட்டது.

பள்ளியறை நாச்சியார் வழிபாட்டுக்கு நிலதானம் செய்யப்பட்டது (444 of 1902). பிள்ளையார், தட்சிணாமூர்த்தி முதலிய கடவுளர்க்குச் சிறப்புப் பூசை செய்யக் காசுகள் வழங்கப்பட்டன (441 of 1902). கோயிலில் புதிதாக எழுந்தருளுவித்த திருக்கேதார தேவர், விசுவேசுவர தேவர் முதலிய திருவுருவங்களுக்கு விளக்கேற்றவும் வழிபாடு செய்யவும் தானம் செய்யப்பட்டது (448 of 1902). கடவுளர் வழிபாட்டுக்குச் செய்யூரை அடுத்த உப்பளங்களிலிருந்து குறிப்பிட்ட ஓரளவு உப்பு தானமாகக் கொடுக்கப்பட்டது (445 of 1902).

செய்வது பூஜை என்றும்” காரணகமத்தில் அர்ச்சனைக்கும் — பூஜைக்குமுள்ள ஓர் சிறிய வேறுபாடு கூறப்பட்டுள்ளது. அர்ச்சனை முறைகளை நன்கு அறிந்து செய்பவர் அர்ச்சகராவர். அர்ச்சனை என்பது தொழிற்பெயர். அர்ச்சனை செய்பவர் அர்ச்சகர். 3. சைவர்:— சிவபெருமானையே, சமயத் தலைவராக — முழு முதற்கடவுளாகக் கொண்டது சைவசமயம். சைவசமயத்தைச் சேர்ந்தவர்களைச் சைவர் என்று சொல்லுவது வழக்கம். சிவாலயங்களில் வழிபாடு செய்பவர்களை ஆதிசைவர் என்றும் கூறுவதுண்டு. “மூதற் சைவராம் முனிவர்” என்பர் சேக்கிழாரடிகள். “ஐயாறதனிற் சைவன் ஆகியும்” என்று மாணிக்க வாசகர் இறைவனைக்குறிப்பிடுகின்றார். திருவையாற்றில் சைவனாகி (அர்ச்சராகி) வந்து சிவபெருமான் தன்னைத்தானே வழிபட்டதாக வரலாறு. சிவ சம்பந்த முள்ளவர் சைவர் 4. குரு:—தமிழ் நாட்டில் பெரும்பாலும் சிவாலயங்களில் வழிபாடு செய்யும் அர்ச்சகர்களை “குருக்கள்” என்றே அழைப்பதை இன்றும் அறியலாம்.

“குகாரோ அந்தகாரம் ஸ்யாத்ரகாரஸ் தன்னி [ரோதகம் |
அந்த காரநிரோ தித்வாத் குருரித்யபிதீயதே ||

“கு என்பது இருள். ரு என்பது இருளைப் போக்குவது. அஞ்ஞான இருளைப்போக்கி ஞான ஒளியைப் பரப்புவர்களே குரு என்று சொல்லப்படுகிறார்கள்” என்று சாஸ்திரம் கூறுகின்றது - பசுஞானம் - பாச ஞானம் - சிவ ஞானம் என ஞானம் மூவகைப்படும். பசு அறிவாலும் பாச அறிவாலும் இறைவனையறிய முடியாதென்றும், பதிஅறிவு என்ற சிவஞானத்தால்சிவ பெருமானைக் காணலாம் என்று சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. அர்ச்சகர்கள் சிவஞான போதம் முதலிய ஞான நூல்களை நன்கு கற்றுச் சைவசமயத்தின் அடிப்படையான ஞானக்கருத்துக்களை நன்மக்களுக்கு உபதேசிக்கவேண்டும். சிவதீக்ஷையில் சாஸ்திர தீக்ஷை என்று ஒன்று உண்டு. உலக வாழ்க்கையில் பக்குவமடைந்த மாணாக்கர்களுக்கு ஞானநூல்களைப் பயிற்றுவைப்பதே சாஸ்திர தீக்ஷையாம். இதனால் அஞ்ஞானம் நீங்கிச் சிவஞானம் பெருகும். சிவாகமங்கள் அர்ச்சகர்களைக் குருபரம்பரையினர் என்றும், சிவதீக்ஷை முதலியவற்றால் பக்குவான்மாக்களுக்கு ஞானநூற் கருத்துக்களைப் போதிக்கவேண்டும் என்றும் கூறுகின்றன.

“ஞானநூல்தனை ஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல்தான் கேட்டல் நன்று
ஈனமில்லாப் பொருளதனைச் சிந்தித்தல்ஐந்தும்
இறைவனடியடைவிக்கும் எழில் ஞான பூசை
யூனமிலாக் கன்மங்கள் தபம் செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன்று உயருமிவை யூட்டுவது போகம்
ஆனவையால் மேலான ஞானத்தால்அரனை
அர்ச்சிப்பர் வீடெய்த அறிந்தோ ரெல்லாம்.”

என்ற சிவஞான சித்திப் பாடலால் அர்ச்சக மரபினரான ஸ்ரீமத் அருள் நந்தி சிவாச்சாரிய சுவாமிகள் “ஞானத்தால் அரனை அர்ச்சிக்க வேண்டும்” என்பதைத்தெரிவித்தார்கள். ஞான நூல்களைத்தாம் படிப்பது, ஆர்வமுள்ளவர்களுக்குக் கற்பித்தல், அதினின்றும் நல்ல கருத்துக்களைப் பிறர்க்கு உணர்த்துவது, நற்பொருளைத்தான் கேட்பது, குறையற்ற நிறைந்த பொருளைச் சிந்திப்பது, ஆகிய இவ்வைந்தும் எழில் ஞான பூசை என்று அருணந்தி சிவனார் அருளிச்செய்தபடி அர்ச்சகர்கள் ஞான வழிபாட்டில் ஈடு படவேண்டும்.

5. தேவகர்மா:— “ஒருவனே தேவன் ஒன்றே குலம்” என்பது தமிழ் ஆகமம். கடவுள் ஒருவரே. உயிர்க்குலம் ஒன்றுதான். ஒருவனே தேவனாகிய சிவபிரானிடம் அன்பு பூண்டு திருக்கோயில் வழிபாட்டையே தம் குலத்தொழிலாகக் கொண்ட அர்ச்சகருக்கு “தேவகர்மா” என்ற பெயரும் உண்டு. தேவ— சிவபெருமான். கர்மா=தொழில்.

6. சாதகர்:—“சிவனோடு இரண்டறக் கலக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் இடையறாத சிவபக்தியில் திளைப்பவர்கட்கு குரு — லிங்க — சங்கமங் (குரு — சிவலிங்கம் — அடியார்) களைச் சாதகமாகக் கொண்டு சிவபிரானை வழிபடவேண்டும்” என்பது சைவ சமயக் கருத்து. சிவவழிபாட்டிற்குச் சாதகமாக (உதவுபவராக) இருப்பதால் அர்ச்சகர்க்குச் சாதகர் என்றபெயர் கூறப்பட்டுள்ளது.

7. சிவவிப்ரர்:—விப்ரர் என்றால் வேதியராகும். சிவவிப்ரர்—சிவவேதியர். தமிழில்— சிவவேதியர்களை “முப்போதும் திருமேனி தீண்டுவார்” என்று சுந்தரரும் — சேக்கிழார் பெருமானும் குறிப்பிட்டார்கள்.

"எப்போதுமினிய பிரானின்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போது மார்வமிகு மன்பினராய்
மூப்போதும் அர்ச்சிப்பர் முதற்சைவராம் முனிவர்."

"தெரிந்துணரின் முப்போதுஞ் செல்காலம் நிகழ் [காலம்
வருங்காலமான வற்றின் வழிவழியே திருத்தொண் [டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே யுரியன [அப்
பெருந்தகையார் குலப்பெருமையாம் புகழும்பெற் [றியதோ."

இதுவரை மேற்காட்டிய பெயர்களினின்றும் திருக்கோயில் வழிபாடு செய்வோர்க்கு 1. ஒழுக்கம் 2. சிவவழிபாடு 3. சைவராக இருத்தல் 4. ஞானநூற் பயிற்சி 5. தெய்வ காரியங்கள் 6. சிவபக்தர்களுக்குத் துணைவராதல் 7. அன்புடைய அந்தணராக இருத்தல் ஆகிய தகுதிகள் இருத்தல் வேண்டும் என்பது அறியத்தக்கது.

## அர்ச்சகர்க்கு வேண்டுவன

இனி அர்ச்சகர்க்குரிய ஒழுக்கம் உருவத் தோற்றம் — கல்வியறிவு — செயல்கள் — இவைகளைச் சிவாகமங்களினின்றும் காண்போம்.

"கிருஹஸ்தஸ்ஸ்ரஸோ வாக்மீ சுசீலப்பிரியதர் [சிந: |
சிகீச பத்தகே ஸோவாஸ் மஸ்ரு ரோமாதிவர்ஜித: ॥

இதன்பொருள்:-(அர்ச்சகர்கள்) திருமணம் செய்து கொண்டவராயும், நட்புள்ளவராயும், (வாக்மீ) வணங்கிய வாயினராகவும், அல்லது அடக்கமானவார்த்தைகளைப் பேசுபவராயும், சீலமுள்ளவராயும், அன்பைக் காட்டுபவராயும், சிகை அல்லது முடிந்த குடுமி உள்ளவராயும், மீசை தாடி இவை இல்லாதவராயும் இருத்தல் வேண்டும்.

"அரோஹீ தீக்ஷிதஸ் சைவமந்திர முத்ராகிரியான் [விந: |
பதவாக்யபிரமாணக்ஞ: பசுசாஸ்திரபராங்முக:" ॥

பொருள் :—நோயற்றவராயும், சிவதீக்ஷை பெற்றவராயும், மந்திரம், முத்திரை—கிரியை ஆகிய இம் மூன்றையும் நன்கு உணர்ந்தவராயும், பதவாக்கியப் பிரமாணங்களை அறிந்தவராயும், பசு ஞானத்தைப் போதிக்கும் நூல்களைப் பாராதவராயும் இருத்தல் வேண்டும். கடவுள் உணர்ச்சிக்கும் பக்திக்கும் ஒழுக்கத்திற்கும் மாறான நூல்கள் ஆகும்.

"சிவதந்திரைக சித்தாத்மா ஸர்வப் பிராணி [ஹிதேரத: |
வாஸ்துவித்யாக்ருதாப்யாஸ: ஸல்யோத்தார [விசாரத: ॥"

பொருள் :— சிவாகமங்களில் ஒருமுகமாகச் சித்தத்தைச் செலுத்துபவராகவும், எல்லா உயிர்களிடத்திலும் கருணை யுள்ளவராயும், வாஸ்து வித்தையில் பயிற்சி யுள்ளவராயும், கட்டிடக்கலையில் தேர்ச்சி பெற்றவராயும் அர்ச்சகர் இருத்தல் வேண்டும். [வாஸ்துவித்யை—பூமிநூல். "பார்கவம் வாஸ்துவித்யாச பாராசர்யாந்து காச்யபம்" பார்கவம், வாஸ்துவித்தை-பராசார்யம், காச்யபம் இவைபோன்ற இன்னும் பல சிற்ப நூல்கள் விஸ்வகர்மாவைத் தலைவராகக் கொண்டுள்ளன. இதில் வாஸ்துவித்யை நிலத்தின் தரம் முதலிய பூமி சம்பந்தமான விஷயங்களைத் தெரிவிக்கின்றது. இங்கே ஆகமத்தில் "வாஸ்துவித்யை" என்பது பொதுவாகப் பூமியைப்பற்றிய அறிவைக் குறிப்பிடுகிறது.]

"பஞ்சகச்சசமோபேத: பஞ்சாங்கஸ்த்வங்க [பூஷண: |
ருத்ராக்ஷமுபவீதஞ்ச உஷ்ணீஷம்சோத்தரீயகம் ॥
பஸ்மம் சைவாதி சைவாணும் பஞ்ச முத்ரா:
[பிரகீர்த்திதா: ॥"

பொருள் :— பஞ்சகச்சம் கட்டிக் கொண்டவராயும், தலை-நெற்றி-கழுத்து-மார்பு - இடுப்பு ஆகிய ஐந்து இடங்களில் அதற்குரிய அணி அணிந்துள்ளவராயும் இருத்தல் வேண்டும். அங்கபூஷணம் என்ற ஐந்து அடையாளங்களாவன :— 1. ருத்ராக்ஷம் 2. விபூதி 3. பூணூல் 4. தலைப்பாகை 5. உத்தரீயம் இவ்வைந்தும் ஆதி சைவர்களுக்குரிய ஐந்து அடையாளங்களாகக் கூறப்படுகிறது.

[அர்ச்சகர்கள், தலையில், உஷ்ணீஷம் என்ற தலைப்பாகையும் - நெற்றியில் திருநீறும் - கழுத்தில் ருத்ராக்ஷமும் - மார்பில் பூணூலும், இடுப்பில் பஞ்சகச்சமும், தோள் அல்லது இடையில் உத்தரீயமும் அணியவேண்டும் என்பது ஆகம விதி. பஞ்சகச்சம்—விரிந்தகட்டு.]

"உத்தமம் தசஹஸ்தம்ஸ்யாத்மத்யமம் நவஹஸ்
[தகம் ॥
அதமஞ்சாஷ்டஹஸ் தம்ஸ்யாத் பஞ்சதால சுவிஸ்
[தரம். ॥"

"பஞ்சகச்சம் கட்டுவதற்குரிய ஆடையின் அளவு முறை ஆகமத்தில் கூறப்படுகிறது. பத்து முழம் நீளமுள்ள ஆடை உத்தமம். ஒன்பது முழம் மத்திமம். எட்டு முழம் அதமமாகும். அகலம் இரண்டரை முழம் உள்ளதாக இருக்க வேண்டும்."

"வஸ்திரலக்ஷண மேவோக்தம் உத்தரீயமதோச்
[யதே |
பாணஹஸ்தயுதம் வாபிவேத ஹஸ்தயுதந்துவா |
த்விஹஸ்தமாத்ரவிஸ்தாரம் பத்தயித்வாது புச்
சகம் |"

"இதுவரை வஸ்திர (இடுப்பிலணியும் ஆடை) லக்ஷணம் சொல்லப்பட்டது. இனி உத்தரீயத்தின் அளவு கூறப்படுகிறது. ஆறு முழம் அல்லது நான்கு முழம் நீளமும் இரண்டு முழம் அகலமும் உள்ளதாக உத்தரீயம் என்ற உடை இருக்க வேண்டும். உத்தரீயத்தை மடித்துக் கட்டிக் கொள்ள வேண்டும்."

"அக்னிதக்தம் ஸகேசஞ்ச மூஷிகைர் தூஷிதம்
[ததா |
புராதனஞ்ச ஜீர்ணஞ்ச வஸ்திரம் பஞ்சவிஸர்
[ஜயேத் ॥

"நெருப்பில் பொசுங்கியதும், எலி மூஞ்சூறுகளால் கடிக்கப்பட்டதும், மிகப் பழைமையானது அல்லது அழுக்கடைந்ததும், பழுதுள்ளதும், தலையினிழிந்த மயிர் நூலோடு கலந்து நெய்யப்பட்டதுமான ஆடைகளை நீக்க வேண்டும். இங்குக்கூறிய ஐந்து குற்றமுள்ள ஆடைகளை அர்ச்சகர் அணியலாகாது."

## தகுதியற்ற அர்ச்சகர்கள்.

"பிங்கலாக்ஷோடாம்பிக: குப்ஜோவாமந: குநகீ
[க்ரூச: |
வ்யஸநீ நிர்தயஸ் தப்த: சபல: பார தாரிக: |"

"பயங்கரமான பார்வையுள்ளவர், ஆடம்பரமுள்ளவர், மிக உயரமானவர், ரொம்ப குள்ளமானவர், நகங்களற்றவர், நிரம்ப (வலுவற்ற) இளைத்த தேகமுள்ளவர், வியசனமுள்ளவர் அல்லது வேதனையே வடிவமாக உள்ளவர், இரக்கமற்றவர், குற்றங்களைச் செய்பவர், சபல சித்தமுடையவர், பிறர் மனைவியை விரும்புகிறவர் இவர்கள் ஆலய வழிபாடு செய்வதற்குத் தகுதியற்றவர்கள்."

வ்ரதச்யுத: சட: க்லீபோ தீநாவைவபுண்யவர்
[ஜித: |
ஸந்யாஸீதார்க்கிகோ சுத்த: சிவசாஸ்திரச்
[யுதோவா: ॥
பண்யாங்கோபஜீவிச கிருதக் நோநாஸ் திகோ
[கல: |
துராசாரீஜட: பங்கு: பதித: பாப கர்மயுக்: |
ஏபிஸ்த்வலக்ஷணைர்யுக்தோகர் ஹிதஸ்ஸர்வகர்
[மசு |"

"தூய்மையான நல்ல பழக்கவழக்கங்களை விட்டவர், வெறுப்புள்ளவர், பேராசை பிடித்தவர், யாசகம் செய்பவர், புண்ணியத்தை இழந்தவர், துறவி, தர்க்கம் செய்பவர், அசுத்தமானவர், சிவசாஸ்திரங்களைக் கல்லாதவர், மக்கட் பண்பு இல்லாதவர், கடை வைத்து வியாபாரம் செய்து பிழைப்பவர், பாபங்கள் செய்பவர், நாஸ்தீகர், கொடுமையான சுபாவமுள்ளவர், தீய ஒழுக்கங்களை மேற்கொண்டவர், சோம்பலுள்ளவர், முடமானவர், பதிதர், பாப காரியங்களை மூடி மறைப்பவர் ஆகியவர்கள் அர்ச்சகரல்லர். இதுவரை கூறிய அவலக்ஷணங்களோடு கூடியவர்களை எல்லா காரியங்களிலும் விலக்க வேண்டும்" என்று காரணாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

## அர்ச்சகரின் அறுதொழில்கள்.

"அத்யா னேத்யாபகஞ் சைவயஜநம்யாஜ நம்
[ததா |
தானப்ரதிக் கிரஹஞ்சைவதேஷாம் ஷட்கர்ம
[உச்யதே ॥"

1. தான் கற்பது 2. (பிறருக்கு ஞான நூல்களைக்) கற்பிப்பது 3. தானே பூசை செய்வது 4. பிறரையும் வழிபாட்டில் ஈடுபடுத்துவது 5. தானம் வாங்குவது (ஏற்றல்) 6. பிறருக்குத் தானம் செய்வது (இடுதல்) ஆகிய ஆறு தொழில்களும் அர்ச்சகர்களுக்குச் சொல்லப் படுகிறது.

"தத்தஞ்சமயத்தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகமநூல்நெறி
எத்தண்டமும் செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டஞ்செய்வதவ் வேந்தன்கடனே."
—திருமந்திரம்.

# மாமுகடி

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L., கோவை.

"மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான் தாளுளாள் தாமரையினுள்" (குறள் 617) என்று திருவள்ளுவர் "ஆள்வினையுடைமை" என்ற அதிகாரத்துள் கூறுவர். அதற்கு உரை கண்ட பரிமேலழகர் அடியிற்கண்டபடி பொருள் விவரிப்பர் :—

"கரிய சேட்டை ஒருவன் மடியின் கண்ணே உறையும், திருமகள் மடியிலாதானது முயற்சிக் கண்ணே உறையும் என்று சொல்வர் அறிந்தோர்." மற்றும் அதனை விளக்கிக் கூறுவர் — "பாவத்தின் கருமை அதன் பயனாகிய முகடிமேல் ஏற்றப்பட்டது. மடியும் முயற்சியும் உடையார் மாட்டு நிலையை அவை தம் மேல் வைத்துக் கூறினர்" என்பர்.

இனி மணக்குடவர், "வினை செயுங்கால் அதனைச் செய்யாது சோம்பி இருப்பானது சோம்பலின் கண்ணே மூதேவி உறைவள். அதனைச் சோம்பலின்றி முயலுபவன் முயற்சியின் கண்ணே திருமகள் உறைவள் என்று சொல்லுவர்" என்கிறார்.

இவ்வுரைகளைத் தொகுத்துச் சொல்லும் போது மாமுகடி என்ற மூதேவி, மடி என்ற சோம்பலிலே இருப்பள். தாமரையாள் என்ற சீதேவி மடியிலாதவன் (சோம்பலிலாதவன்) தாளில் (முயற்சியில்) இருப்பாள். மேலும் மடி என்ற சொல்லுக்கு சோம்பல் எனவும் தொடை எனவும் இருபொருள் உண்டு. அதுபோலவே தாள் என்ற சொல்லுக்கும் முயற்சி எனவும், கால்அடி எனவும் இரு பொருள் உண்டு. ஆகவே மூதேவி சோம்பல் உடையவள் தொடையிலே தங்குவாள். அவள் இறுமாப்போடு தொடையிலே வீற்றிருப்பாள். ஆனால் சீதேவியோ சோம்பலில்லாதவனின் காலடியில் அடக்கமாக இருப்பாள், என்ற பொருள் தொனிக்கிறது அல்லவா. சோம்பல் படைத்தவன் யாதும் செய்யாமல் உட்கார்ந்து இருக்க, மூதேவி அவனது தொடையில் வலுவாக உட்கார்ந்து விடுவாள். ஆனால் சோம்பல் இல்லாதவன் எப்போதும் முயற்சி உடையவன் ஆகக் காலால் நின்று கொண்டே வினைபுரிவான். இப் பொருள் மனிதனுடைய உறுப்புக்களின் (மடி+தாள்) அமைப்பில் வைத்துக் கூறப்பட்டது. இவ்வகையில் எழும் இலக்கிய அணியமைதி ஆராயத்தக்கது.

நற்கலைகள் ஆகிய சிற்பம் ஓவியம் என்பவைகளிலும் கூட இந்த வேற்றுமை காணலாம். மூதேவியினுடையவடிவம் சிற்பத்திலும் ஓவியத்திலும் உட்கார்ந்த நிலையில் ஆக்கப்படுகின்றது. சீதேவினுடைய வடிவமோ செந்தாமரை மலரில் நிற்கின்ற கோலத்தில் தீட்டப்படுகின்றது. மேலும் மூதேவி பாவத்தின் அதி தேவதையாகிப் பாவத்தின் நிறமாகிய கருமை நிறத்தில் காட்சி தருகிறாள். சீதேவியோ ஆள்வினையாகிய முயற்சிக்குத் தேவதையாகிச் சுருசுருப்பின் நிறமாகிய சிவப்பு நிறத்தில் காட்சி தருகிறாள். அவள் நிற்கும் மலரும் செந்தாமரை ஆகும். சோம்பலுக்கும் சுருசுருப்புக்கும் உள்ள வேற்றுமை அத் தேவதைகள் தங்கும் இடங்களின் தன்மைகளிலே விளங்குகிறது. தொடை அசைவு அற்றது. சோம்பலுக்குத் தக்க இடமாகும். தாள் சுருசுருப்புக்கு ஏற்ற இடம். நிற்கும் வளமை பெற்றது. ஆகவே உவமை நன்கு அமையப் பெற்றிருக்கிறது.

இனி 'மாமுகடி' என்ற மூதேவியின் தமிழ்ப் பெயர் மூத்தாள் என்பது. வடமொழிப் பெயர் ஜேஷ்டாதேவி என்பது. ஜேஷ்டாதேவி என்ற சொல் சேட்டை, கேட்டை என மருவியும் வரும். ஜேஷ்டாதேவியும் சீதேவியும் தேவாசுர சங்கிரமணத்தின் போது கடல் கடைந்த காலத்தில் பாற்கடலுள் முந்தியும் பிந்தியும் ஆக உதித்தார்கள் என்பது புராணச் செய்தி. இதனைக் குறித்தே,

**"சீதேவியார் பிறந்த செய்யதிருப் பாற்கடலுள்**
**மூதேவி ஏன்பிறந்தாள் முன்"**

என்று இரட்டைப் புலவர் வேடிக்கையாகக் கூறினர்கள் அன்ரே! சீதேவி நல்ல அதிட்டத்தின் (ஆகூழ்) தேவதை. மூதேவி துர் அதிட்டத்தின் (போகூழ்) தேவதை என்பது வழக்கம்.

இனி மூதேவியைப் பற்றிய புராணக்கதை சுப்பிரபேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. ஆதியில் அத்தேவி ஆதி சக்தியினிடம் தோன்றிப் பின்னர் இரண்டாம் முறையாகக் கடல் கடைந்த போது திருப்பாற் கடலில் பிறந்தாள். அவள் காளாஞ்சனை நிறமும் சர்ப்பஆபரணமும் கழுதை வாகனமும் உடையவள் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அவள் ஆன்மாக்களுக்குச் சோம்பல் முதலிய துன்பங்களை வருவிப்பவள். அவள் இராமாயண காலத்தில் இலக்குமணன் வனவாசம் செய்ய இருக்கையில் கங்கைக் கரையில் வந்து உறக்கம் உண்டாக்கினுள். அப்போது இலக்குமணன் அவளை நோக்கி வனவாசத்திற்குப் பிறகு வருக என்று கூற, அவன் கட்டளையின்படி பதினுன்கு ஆண்டுகள் பொறுத்து வந்தனள். அவளுக்கு வாகனம் கழுதை மட்டுமன்றி, ஆயுதம் துடைப்பம், கொடி காக்கை என்பர்.

மூதேவி வாழும் இடங்கள் அடியிற் கண்டவை என்று அண்ணுமலையார் சதகம் கூறுகிறது—அரசு நிழல், விளாமரத்தடி, விளக்கின் நிழல், மனிதர் நிழல், இரவு, ஆசாரம் இல்லாத வேதியன் நிழல், உண்ட நீர்ச் சேடம், ஆடை தோய்த்த நீர், விளக்குமாற்றின் புழுதி, மயிர்ப் புழுதி, கழுதை, நாயின் புழுதி, வெந்தசாம்பல் வேகாக்கரிப் புழுதி, ஆட்டுத்தூசு முதலியன வாம்.

இனி மூதேவி அல்லது ஜேஷ்டா தேவியின் உருவம் வெகு வியப்பானது. அவ்வுருவம் வெகுவாகப் பலகைக் கல்லில் செதுக்கப்பட்டிருக்கும். அக்கல்லும் பொதுவாக மணற்கல்லாக (Sand Stone) மெதுவானதாக இருக்கும். கல்லானது மணல் பொதிந்த பரவல் கொண்டிருக்கும் (Sand grained). அப் பலகைக் கல்லும் கவிழ்ந்த முக்கோணமாக உருவாக்கப்பட்டிருக்கும். அப் பலகைக் கல்லின் நடுவில் ஒரு பீடத்தில் மூதேவி அம்மை உருவம் உட்கார்ந்த நிலையில் செதுக்கப்பட்டிருக்கும். அந்தத் தேவியின் வலது தொடையில் ஒரு ஆண் மகனும் இடது தொடையில் ஒரு பெண் மகளும் வீற்றிருப்பர். மகனின் தலை ஒரு மாட்டின் தலையைக் கொண்டிருக்கும் (Bovine). பெண்ணின் உருவம் மானுடப்பெண் அமைவு பெற்றிருக்கும். இம் மூன்று உருவங்களும் ஒன்று சேர்ந்தே காட்சி தரும்.

இப்படிப்பட்ட உருவத்தோடு கூடிய ஜேஷ்டா தேவியின் சிலைகள் தமிழ் நாட்டில் சில இடங்களில் காணப்படுகின்றன. மயிலாப்பூரில் ஒரு உருவமும், சென்னைக் கண்காட்சிச் சாலையில் ஒரு உருவமும் கும்பகோணத்தில் ஒன்றும் இருப்பதாகப் படம் எடுத்துத் திரு. கோபிநாத ராவ் அவர்கள் தமது அரும் பெரும் நூலில் பதிப்பித்திருக்கிருர்கள். நான் நேரில் சில சிலைகளைப் பார்த்திருக்கிறேன். காஞ்சிபுரத்தில் பாடல் பெற்ற தலமாகிய திருமேற்றளியில் வெளிப்பிராகாரத்தில் ஒரு மேடைமீது ஒரு சிலை இருக்கிறது. இதனை ஒருமுறை சென்னைக் கண்காட்சிப் பகுதியார் எடுத்துச் செல்ல முயன்றதில் கோயில் காப்பாளர்கள் மறுத்து அதற்கு பூசை செய்யத்தொடங்கி விட்டார்கள். ஆனல் அவர்களுக்கு அவ்வுருவத்தின் சிறப்பு தெரியவில்லை. மேலும் காஞ்சியில் சர்வதீர்த்தத்தின் கரையில் ஒன்றிரண்டு சிலைகள் மண்ணில் புதைந்து கிடக்கின்றன. இனி திருவெண்ணெய் நல்லூருக்கு அடுத்த திருமுண்டீச்சரம் (கிராமம் தற்காலப்பெயர்) சிவாலயத்தின் வடமேற்கு வெளியில் ஒரு சிலை கவனிப்பார் இன்றிக் கிடக்கிறது. திருவானைக்காச் சிவாலயத்தில் சுவாமி கோயிலிலிருந்து அகிலாண்டேசுவரியம்மன் கோயிலுக்குச் செல்லும் பிராகார மண்டபத்தின் மேற்கு மூலையில் கிழக்குப் பார்த்த சன்னிதியாக ஒருசிறு தளியில் ஒரு சிலை இருக்கிறது. இவ்வுருவம் பெண்ணுருவத்தோடு கூடிய தென்றும் ஜேஷ்டா தேவியின் உருவம் என்றும் அறியாமல் கோயில் அதிகாரிகள் சனீசுவரன் என்று எழுதி வைத்துள்ளார்கள். இன்னும் பல வெளியிடங்களில் அடையாளம் தெரியாமல் பலசிலைகள் இருக்கக்கூடும். ஆராய்ச்சி செய்யின் கண்டுபிடிக்கலாம்.

ஏனெனில் ஜேஷ்டா தேவியின் விக்கிரகத்தை இந்த நாளில் ஆராதனை செய்வாரில்லை. அவ்வுருவம் முன்னுளில் குளங்களின் கரைகளில் ஸ்தாபித்து வந்தார்கள். அந்தத் தேவியின் ஆராதனை ஐந்தாம் நூற்ருண்டு முதல்

ஒன்பதாவது நூற்றுண்டுவரை பிரபலமாகத் தென் நாட்டில் இருந்தது. பிறகுஅந்த ஆராதனை யாதோ ஒரு காரணத்தால் நின்று விட்டதாம். அந்த நான்கு நூற்றுண்டு களில் மூன்று தேவிமார்கள் ஆராதிக்கப்பட் டாராம். அத்தேவிமார்கள் முறையே 1. ஸ்ரீ 2. துர்க்கை 3. ஜேஷ்டா. இத் தேவிமார் களில் ஸ்ரீதேவியும் துர்க்காதேவியும் இன்றைக் கும் வழிபடப் படுகின்றனர். ஜேஷ்டா தேவி யின் வழிபாடு மறைந்து விட்டது. ஸ்ரீதேவியும் துர்க்கா தேவியும் இந்தியா முழுவதும் காண லாம். துர்க்கையின் வழிபாடு வங்காளத்தில் சிறப்பாக இருக்கிறது. ஜேஷ்டைக்குத் தனி வழிபாடு எங்கும் இல்லை.

மேலும் பௌதாயன கிருஹ்ய சூத்திரங் களில் ஜேஷ்டா தேவியைப்பற்றி ஒரு முழு அத்தியாயமே கூறுகிறது. தமிழ் நாட்டு ஸ்ரீ வைஷ்ணவ ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடி ஆழ்வார் ஒரு பாசுரத்தில் “ முழுமுதற் கடவுளாகிய திருமாலை வணங்காமல் சேட் டையை வணங்கித் தம் அரிய வாழ்நாளை வீணுக்குகிருர்களே ” என்று கூறி அவ் வழி பாட்டைக் கண்டித்திருக்கிருர். ஆகவே அந்த ஆழ்வார் காலத்தில் அத்தேவி வழிபாடு இருந் திருக்க வேண்டும் அல்லவா.

“ நாட்டினுன் தெய்வ மெங்கும்
நல்லதோர் அருள் தன்னுலே
காட்டினுன் திருவ ரங்கம்
உய்பவர்க் குய்யும் வண்ணம்
கேட்டிரே நம்பி மீர்காள்
கெருட வாகனனும் நிற்க
சேட்டைதன் மடி யகத்துச்
செல்வம் பார்த்திருக்கின் றீரே ”
—தொண்டரடிப்பொடி யாழ்வார்-(செ. 881)

தென் நாட்டில் மட்டும் அல்ல வடநாட்டி லும் கூட ஜேஷ்டா தேவியைத் தொழுவார் குறைவு. வங்கம், உத்கலம் முதலிய சில நாடு களில் அந்தத் தேவி சில தாழ்ந்த மக்களால் சீதலாதேவி என்றபெயரில் தொழப்படுகிருர்கள். பம்பாயில் பூபேஷ்வர் கோயிலில் இவ்வுருவம் பெண்களால் வணங்கப்படுகின்றதாம். இந்தச் செய்திகளைத் திரு. கோபிநாத ராவ் தம் நூலில் குறித்துள்ளார். (நூல் I—I—38)

இனி குமார தந்திரத்தின்படி சுப்பிரமணி யர் கோயில்களில் வைக்கப்படும் பரிவார தேவதைகளின் எண்ணிக்கை 8, 12, 16, 32 என்று இருக்கலாமாம். அவைகளுள் மேற்கே வைக்கப்படும் தேவதை ஜேஷ்டாதேவியாகும். பரிவார தேவதைகளின் எண்ணிக்கை 32 ஆகு மானுல் அவற்றில் ஒன்று ஜேஷ்டா தேவி யாகும் (II—II—423)

மேலும், சைவ சாத்திரங்களின்படி கலை களிலே இரண்டாவதாகிய சாந்த கலையில் 36 தத்துவங்களில் 5-வது தத்துவமாகிய சுத்த வித்யா தத்துவத்தில் 9புவனங்களில் ஜேஷ்டை 8-ஆவது ஆகும். (II—II—403)

இனி சிவபிரானுடைய சக்திகளில் இரண் டாவது ஜேஷ்டை என்னும் எட்டு சத்திகளோடு கூடிப் பரமசிவன் வித்யேஸ்வரர்களை உண் டாக்கி அவர்களால் அகில உலகங்களையும் படைக்கிருன் என்றும் கூறப்படுகிறது.

ஆகவே ஜ்யேஷ்டா தேவி சிருஷ்டிக்குக் காரணமாகவும் இருக்கிருள் என்று சாஸ்தி ரங்கள் கூறுகின்றன. (II—II—393)

## செய்திகள் :

### ஸ்ரீ ஏடகநாதசுவாமி கோயில், திருவேடகம், நிலக்கோட்டை தாலுக்கா.

இக்கோயிலில் திருஞான சம்பந்தப் பெருமானுல் திருவாய் மலரப் பெற்றுப் புனல் வாதில் வெற்றிப் பெறுவதற்கென விடப்பட்ட “ திருப்பாசுர ஏடு ” வைகையாற்றில் எதிர் ஏறிய விழா 2-9-63 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மதுரை இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறைத் துணை ஆணையர் திரு. A. சக்கரை B.A., B.L., அவர்கள் முன்னிலையில் வெகு சிறப்பாக நடை பெற்றது. திரளான அன்பர்கள் விழாவைக் கண்டு களித்தார்கள்.

# திருவைந்தெழுத்து (2)

சீலத்திரு. சிவஞானதேசிக சுவாமிகள், காஞ்சிபுரம்.

வீடு பேற்றில் ஆராத காதலுடையவர்க்கு, அறிய வேண்டும் உண்மை பற்பல உள. அவற்றுள் முப்பொருளுண்மையறிவு முதலாவது. அவ்வறிவு பெற்ருர்க்கு வீடு பெறு நெறியில் மிக்க துணைபுரிவன மூன்று. அம் மூன்றும் திருவைந்தெழுத்து மந்திரமும், திருநீறும், திருவடையாள (உருத்திராக்கமணி) மாலையும் ஆம். அவற்றுள் முதலாவது திருவைந்தெழுத்து மந்திரம். அத்திருவைந்தெழுத்தின் மாண்புக்கு உற்றவாறு மெய்யன்போடு போற்றிக் கணித்தல் வேண்டும். திருவைந்தெழுத்திலும் அதன் உள்ளுறையான பொருளிலும் அதனை உபதேசம் புரிந்தருளும் ஆசிரியனிடத்திலும் அன்புமிக்குப் பெருக உளதாகுல் செயலாற்றுவது ஆவது. கட்டுற்ருர், தம்மையும் தலைவனையும் மறந்து, இறைபணியையும் இழந்து, இழந்தோம் என்னும் உணர்வும் இன்றியே, கட்டு (பந்தம்) ஆகிய பெருங் கடலிலே விழுந்து துன்பமுற, உடையான தருளாலே, இவர், தன்னை அறிந்து கரை சேருமாறு, தானே மாணுக்கனும் ஆசானும் ஆகி நின்று திருவைந்தெழுத்தை உபதேசம் புரிந்தருளினுன்.

மாணுக்கனுய் நின்றது:—மாணுக்கன் இருக்கும் இருப்பு உலகர் அறியாமையாலே, அதனை அறிவித்தற் பொருட்டு, மெய்யுணர்வு நூல் எல்லாவற்ருலும் பிறக்கும் உணர்வு, தான் ஈட்டிய செல்வம் போல்வது. திருவைந்தெழுத்தாற் பிறக்கும் உணர்வு முன்னேர் தேடிக் காப்பில் வைத்துப் போற்றி யளித்த செல்வம் (வைப்புச் செல்வம்) போல்வது.

கடவுள் மந்திரங்கள் தாம் அளவுட்படாதன. அவை தாம் நிறைவின (வியாபகம் உடையன) குறைவின (அவ்வியாபகத்தன) என்று இருவகையின. குறைவின வற்றின் மேலானவை நிறைவின மூன்றும். இவை மூன்றனுள்ளும் வைத்துப் பதியைக் குறித்த ஈரெழுத்துமே தலையான திருமந்திரம். நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தினுள் முதலீரெழுத்தும் பாசப் பொருள் குறித்தவை. அடுத்த ஈரெழுத்து பதியெழுத்தாம். ஈற்றில் உள்ளது பசுவை (உயிரை)க் குறிப்பது. பதி (சிவ) பசு (ய) பாசம் (நம) ஆம் முப்பெருளையும் குறித்தவையே திருவைந்தெழுத்து. பசு பாசங்களைக் குறித்த ய, நம என்பவை மரபில்லார் பற்றுகையும் குறைவும் உள்ளவை.

திருவைந்தெழுத்து மந்திரத்தை மறைகளும் முனிவர்களும், நாயன்மார்களும் (நாயனுர்களும் அவர் மகார்களாகிய அடியார்க்கு அடியரும் என்னும் பொருள் கொள்க), தேசிகர் (ஆசிரியர்)களும் காதலாகிக் கசிந்தோத விழைந்தார்கள்.

பெயர்ப்பொருட்பெருமையும் பெயர்ச்சொற் பெருமையும் ஒன்ருகா. அஃதாவது பெயர்ப் பொருளின் பெருமையைப் போல்வதன்று பெயர்ச்சொல்லின் பெருமை. எடுத்துக்காட்டு:— சிவம் என்பது, பெயர். அதன் பொருள் ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம். இது பெயர்ப்பொருள் (சிவம்). சிவம் என்னும் பெயர்ச் சொல்லும் அச்சொல்லால் உணர்த்தப் பெறும் பொருளும் ஒன்றல்ல. சிவத்தின் பெருமையினும் சிவநாமத்தின் மாண்பு சாலச் சிறந்துளது. சிவன் சேயன் ஆயினும், சிவநாமம் நின்று உதவும். திருநாவுக்கரசு நாயனுர்க்கு உதவியது சிவ நாமமே.

அச் சிவன் வந்து கடலிற் கல் மிதக்கும் உதவியைச் செய்தானல்லன். சிவநாமமே கடலிற் கல்லின்மேல் (கந்தை மிகையாங் கருத்துடைய) நாவேந்தர் மிதக்க உதவிற்று.

சொல்லும் முறைமை ஒழியச் சொன்னுலும் தன் உண்மை கெடல் இல்லாது. இதுதான்,

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

எனத் தொடங்கும் திருப்பதிகம் கூறியபடியே எல்லா விருப்பங்களையும் நிறைவுறக் கொடுக்கும்.

இருமையின்பமும் வீடுபேறும் எண்குணத் துண்மையும் வேண்டுவார்க்கு வேண்டுவதே நிறைவுறநல்கும் ஆற்றலுடையது. ஐவகை வேள்விகளையும் புரிவோருக்கு இடையூறு நீக்கி முடிவுறக் கூட்டவல்லது. வேள்வி வகை யாவன :— கன்மவேள்வி, தவவேள்வி, செப வேள்வி, தியாக வேள்வி, ஞான வேள்வி என்பன. இவைஒன்றற் கொன்று ஏற்றம்உடையன.

" ஊனமிலாக் கன்மங்கள்
தவஞ் செபங்கள் தியானம்
ஒன்றற் கொன்றுயரும் இவை
ஊட்டுவது போகம்
ஆனமையான் மேலான
ஞானத்தாற் சிவனை
அருச்சிப்பர் வீடெய்த
அறிந்தோ ரெல்லாம் " (சித்தியார்)

இயமாநன் என்பதை தமிழில் "வேள்விக்கோ" என்பர். பரிபாடலிற்காண்க. அவ் வைவகை வேள்விக்கோக்களுக்கு உண்மை யுணர்வை (சத்திய ஞானத்தை)ப் பிறப்பித்துச், சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் சிவஞானச் செயலுக்கும் சிவாநுபவம் சுவாநு பூதிகம் ஆதற்கும் ஏதுவாக இருக்கும்.

" மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின், மறவேன் திருவருள்கள்; வஞ்சம் நெஞ்சின் ஏற்றேன்; பிறதெய்வம் எண்ணு நாயேன் எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்"; " ஓங்காரத்துட் பொருளாய் நின்றான் கண்டாய்"; "உற்றவரும் உறு துணையும் நீயே"; "உன்னை யல்லால் ஒரு தெய்வம் உள்கேன்"; "கொள்ளேன் புரந்தரன் மால் அயன்வாழ்வு குடி கெடினும், நள்ளேன் நினதடி யாரோடு அல்லால், நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின், இறைவா, உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாது எங்கள் உத்தமனே" " விரும்பேன் உன்னை அல்லால் ஒரு தெய்வம் என்மனத்தால்" " அருணூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின் பொருள்நூல் தெரியப் புகின்" என்னுந் தோத்திரமும் சாத்திரமும் உணர்த்தும் படியே, அறியவேண்டும் பொருளெல்லாம் இத்திருவைந்தெழுத்துள்ளே உள்ளன.

அவையாவன :—அஞ்சுபொருள். " அஞ்செழுத்தும் (1) அண்ணல் (2) அருள் (3) ஆன்மாத் (4) திரோதம் (5) மலம்" ( துகளறு போதம் :—82) " இறைசத்தி பாசம் எழில் மாயை ஆவி உறநிற்கும் ஓங்காரத்துள்." (திருவருட்பயன். 82). இவற்றால், சி—சிவம்; வ—சிவசக்தி; ய—உயிர்; ந—திரோதாநசக்தி+மாயை; ம — ஆணவம் என்னும் ஐந்து பொருள்கள் உணரப்படுகின்றன.

பண்டைய ஆசிரியர் எல்லாரும் இச்சிவ மந்திரப் பொருளை அறியும் முன்னர், தம்மைப் பிறந்தவராக நினைத்திலர். "கற்றவர் பயிலும் நாகைக்காரோணம் கருதியேத்தப் பெற்றவர் பிறந்தார் மற்றுப் பிறந்தவர் பிறந்திலாரே" என்பது தமிழ் மறையுண்மை. "பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவாநாளே," பிறந்தேன் நின் திருவருளே.

பேசின் அல்லால் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே, வாழ்வெலாம் வாளாமண்மேற் பிறந்த நாள் நாள் அல்ல வாளா ஈசன்பேர் பிதற்றிச் சீரடிமைத் திறத்துள் அன்பு செறிந்து எறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தைச் சேசன்றடையப் பெற்றேன் நானே" என்பனவும் அன்னவே. " நீதியால் நின்னை அல்லால் நினையுமா நினைவிலேனே" என்பதும் ஈண்டு நினைக்கத்தக்கது. இந்நீதி, "பங்கயத் தயனுமாலறியா நீதி" "மாலும் அயனும் அறியா நெறி" 'மேன்மை கொள் சைவநீதி' என்றவற்றிற் போல நின்ற மேன்மையுடைய மெய்ப் பொருளை உணர்த்தி, அவன்றாள் வணங்கத் துணையாகும் அருளை உணர்த்துவது.

இதன் பொருளுணர்ந்தது முதல் "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து


நின் சேவடியே சேர்ந்தேன்". "நீசனேனை ஆண்டு கொண்ட நின்மலா ஓர் நின்அலால் தேசனே ஓர் தேவர் உண்மை சிந்தியாது சிந்தையே" "நின்விழுத் தொழும்பின் உள்ளேன் புறம் அல்லேன் உத்தர கோசமங்கைக் கரசே கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்டு ஆண்டது எக்காரணமே" "நமச்சிவாயம் சொல்ல வல்லோம் நாவால்;" "பொற்புடைய பேசக் கடவோம் பேயர் பேசுவன பேசுதுமோ பிழையற்றோமே"; "அகன்றுள் அகலிடத்தார் ஆசாரத்தை" என்கிறபடியே, இதனால் அன்றி வேறொன்றாற் பொழுது போக்கியறியார்.

மாசினைக் கழித்து ஆட்கொள்ள வல்ல எம் ஈசனை இனி நான் மறக்கிற்பெனே'; 'துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே அஞ்செழுத் தோதின் நாளும் அரன் அடிக்கு அன்பதாகும்'.

சொல்லினும் சொற் பொருளில் ஊன்றுகைக்கு அடி, சிவமே உபாயமும் ஆகும் உபேயமும் ஆகும் என்று நினைந்திருக்கை. ★

# நடைபெற்ற நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர், உப்பூர். | விநாயக சதுர்த்தி |
| ,, எல்லம்மன், பெரியமெட்டு, சென்னை. | ஆடி மஹோற்சவம் |
| ,, திரிசூலநாதர் கோயில், திரிசூலம். | திருப்பணித் தொடக்கவிழா |
| ,, தியாகராஜ சுவாமி கோவில், திருவாரூர். | முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனை |
| ,, மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், மதுரை. | ஆவணி மூல உற்சவம் |
| ,, கம்பகரேஸ்வரசுவாமி, திருபுவனம். | மகா கும்பாபிஷேகம் |
| ,, வரசித்தி செல்வவிநாயகர், இராயவேலூர். [ஷேண்பாக்கம். | பிரம்மோற்சவம் |
| ,, அட்சயலிங்க சுவாமிகோயில், கீழ்வேளூர். | மகா கும்பாபிஷேகம் |
| ,, பராசக்தி மாரியம்மன் கோயில், மன்னார்குடி. | ஜேஷ்ட அபிஷேக விழா. |
| ,, வேம்படி விநாயகர், புரசை, சென்னை. | பிரம்மோற்சவம். |
| ,, பிரசன்ன வெங்கடாஜல பதி சுவாமி கோயில், [தல்லாகுளம். | பிரம்மோத்ஸவம். |
| ,, வில்வவன நாத சுவாமி தேவஸ்தானம், கடையம். | தெப்பஉற்சவம். |
| ,, பூலானந்தீஸ்வரர் கோயில், சின்னமனூர். | ஆவணித்திருவிழா. |
| ,, கோபிநாதசுவாமி தேவஸ்தானம், ரெட்டியார் [சத்திரம். | உறியடி உற்சவம். |
| ,, சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர். | ஆவணித்திருவிழா. |
| ,, சீதாராமஆஞ்சநேய சுவாமி கோயில், குடியேற்றம். | ஸ்ரீ கிருஷ்ணஜெயந்திவிழா. |
| ,, நவனீத கிருஷ்ணசுவாமி கோயில், தென்கரை. | ஜெயந்தி உற்சவம். |
| ,, சாம்பமூர்த்தீஸ்வரர், லட்சுமிகோபாலசுவாமி, [கோயில், ஏத்தாப்பூர். | நவராத்திரி உற்சவம். |
| ,, வெங்கடேசப் பெருமாள் கோயில், மொண்டி [பாளையம். | புரட்டாசித் திருவிழா. |
| ,, தான் தோன்றி ஸ்ரீ கல்யாண வெங்கட்ரமணி [சுவாமி கோயில், கரூர். | பிரம்மோற்சவம். |
| ,, தியாகராஜ சுவாமி தேவஸ்தானம், திருவாரூர். | மகாகுருபூஜை. |
| ,, லக்ஷ்மி நரசிம்ம சுவாமி கோயில், சோளசிங்கபுரம். | நவராத்திரி உற்சவம். |
| ,, சென்னகேசவப் பெருமாள்கோயில், சென்னை. | ,, |
| ,, காளிகாம்பாள் கோயில், காஞ்சிபுரம். | ,, |



மதுரைக் கும்பாபிஷேக விழாவில், காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடம் புதுப் பெரியவர் அவர்களுடன், தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்களும், மதுரைக் கோயில் ஸ்தானிகம் ஸ்ரீ சுந்தரேச பட்டர் அவர்களும்.

## வைணவப் பெரியோர் திருநாட்கள்

அக்டோபர்

10 வானமாமலை ராமானுஜ ஜீயர்

23 ஸ்ரீ மணவாள மா முனிகள்

24 ஸ்ரீ சேனை முதலியார்; ஸ்ரீ கிடாம்பி ராமானுஜப் பிள்ளான்; திருக் குருகைப் பிரான் பிள்ளான்.

26 பிள்ளை லோகாசாரியார்.

27 திருமலை யாண்டான்; நடுவில் திருவீதி பட்டர்

28 பின்பழகிய பெருமாள் ஜீயர்

30 விளாஞ் சோலைப் பிள்ளை

31 எரும்பில் அப்பா

## சைவப் பெரியோர் திருநாட்கள்

அக்டோபர்

1 நரசிங்க முனையரையர்


4 உருத்திர பசுபதி

7 திருநாளைப் போவார்


14 அருள் நந்தி சிவாச்சாரியார்

20 பூசலார்

23 ஐயடிகள் காடவர் கோன்



சென்னைத் திருமயிலைக் கபாலீச்சரத்தில் நிகழ்ந்த லட்சதீப விழாக் காட்சி.



அழகர் கோயிலில் அறநிலைய அமைச்சர் திரு. M. பக்தவத்சலம், B.A., B.L., அவர்கள் குடிநீர்த் திட்டத்திற்குக் கால்கோள் அமைத்தல்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowr (Admn.) Dept. Madras-34. Printed at The United Printers, 3/27 Broadway, Madras-1